இன்றைய போதினி

ஏப்ரல், 1998

13 10

JL
m211, N15AB
N28·13·10
169848

கொக்கோகம்! கொக்கோகம்!!
...ாகலத்துடன் கூவிக்கோண்...
...ப் தேவை...
...ண் டிருப்பேர்

1928 ... சித்திரை
REGD. No. M. 1160
351





# ஆனந்த போதினி

# ANANDA BODHINI

OF THE REGISTRAR
4 MAY 1928
MADRAS

Vol. 13. பொருளடக்கம். No. 10.

பக்கம்.

1. கடவுள் வணக்கம் ... 433
2. அரும்பொருள் விளக்கம் ... 434
3. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ... 435
4. சந்தாநேயர்களுக்கு முன்னறிவிப்பு 438
5. பண்டித மதன மோகன மாளவ்யா 440
6. பாரத நாடு-ஆரியசித்தாந்தம் 443-445
7. வேதாந்த சார சங்கிரக வசனம் ... 449
8. சைவசித்தாந்தம் ... 453
9. சில சுகாதார மொழிகள் ... 455
10. ஸ்ரீ. சடாதார் அம்மாள் வைபவம் 456
11. ஆத்திசூடி உதாரணக் கதைகள் ... 459
12. மாதரும் குடும்பமும் ... 461
13. சுருளி மலையின் மகத்துவம் ... 463
14. கைத்தொழில்-ஆகாயவிமானம் 465-467
15. புராதன சங்கீதம்-வைத்தியம் 469-471
16. அறிஞரின் அமுத மொழிகள் ... 472
17. விபவ வருடப் பலன் ... 473
18. வருடத்தில் முப்பதுலட்சம் ரூபா ...லவிடும் மன்னன் ... 474
...நோதம் 475-477
... வர்த்தமானம் 478-479
... ... 480






72
211, N25AB
N28·13·10
164848

## “ஆன[illegible]போதினி”

### சந்தா விபரம்.

| | | ரூ. அ. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபால்கூலி யுள்பட | இந்தியா, பர்மா ஸிலோன் … … | 1—0— |
| | பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—4— |
| நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2— |
| சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் 2-அணா வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரை யில் 2-அணா வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணா வி. பி.க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணா சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாத 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் தலையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மததூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும், அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் நமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

---

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

நா. முனிசாமி முதலியார், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
நெ. 6. வெங்கடேச மேஸ்திரி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

---

**கொக்கோகம்!** 851/7-28 **கொக்கோகம்!!**

என்று குதூகலத்துடன் கூவிக்கொண் டிருப்போர்க்கும்,
இன்பரச நூல் தேவை தேவையென்று
ஏக்கமுற் றெழுதிக்கொண் டிருப்போர்க்கும் ஆவலைத் தீர்த்து
ஆனந்தத்தை ஊட்டும் அதியற்புத நூல்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

### அந்நூல் எது?

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு (15-5-28 வரை) ரூபா 1 8 0

**கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.**

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதனநூல்; போகானந்தத்தை விரும்
பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.
உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடைய
வர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல் கொண்டு, ஒருவரை யொரு
வர் மணந்து கூடிக்களிப்புற்று, நற்சந்ததிகளைப் பெற்று, இல்லற நீதிகளை
வழுவாமற் செய்து வாழ்ந்து வருவதே இன்ப வாழ்க்கையாம்; இத்தகைய
வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்து கொள்வதற் கேதுவாக
நம் முன்னோர்கள் கொக்கோகம் முதலிய மதன நூல்களையும், வேறு பல
அகப்பொருள் நூல்களையும், தமிழிலும், வடமொழியிலும் செய்துவைத்
திருக்கின்றனர்; அன்னிய நாட்டார்களும், அராபி, ஹிந்துஸ்தானி, கன்ன
டம், தெலுங்கு, நாகரம், மராட்டி, இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய பற்பல
பாஷைகளில் இத்தகைய இன்பரச நூல்கள் பலவற்றை வெளியிட் டிருக்கின்
றனர். எனினும் நந்தமிழ் நாட்டிலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர்
அந்நூல்களைக் கிரமப்படி கற்றுக் கொள்ளாததால், இன்ப வாழ்க்கையின்
இரகசியங்களைத் தெரிந்து கொள்ளாதவர்களாய்க் கலவி யின்பத்தை யிழந்து
கவலைகொண்டு துன்புறுகின்றனர்; மணஞ்செய்தும் மகிழ்ச்சியின்றி வருந்து
கின்றனர்; மனைவி யிருந்தும் மைந்தரைப் பெறாமல் வாடுகின்றனர்; புருஷ
னிருந்தும் புத்திரரைப் பெறாமல் புலம்புகின்றனர்; பணமிருந்தும் குணமில்
லாமல் பரிதபிக்கின்றனர்.

ஆதலின், இப்பேர்ப்பட்டவர்கள் இக்குறைகளினின்றும் நீங்கி காதல்
இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்
கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று,
மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல

கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வளியிடப் பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கோக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப்பொருத்தமான–மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்நூல், சிலர் எதை யெதையோ தப்பான தமிழில் எழுதி விநோதப் பெயருடன் வெளியிட்டிருக்கும் சில ஏமாற்றப் போலிப் புத்தகங்களைப் போன்றதன்று. இதில் அடங்கி யிருப்பனவாக இதனடியிற் காட்டப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டே இப்புத்தகத்தின் உண்மை உயர்வை உணர்ந்து கொள்ளலாம். இது மிகவும் உயர்ந்த பெதர் வெயிட் பேப்பரில் சுத்தமாக அச்சிடப்பட்டு அழகிய சீமைக் காலிகோ பைண்டும் செய்யப் பெற்றுள்ளது; மிக உயர்ந்த ஆப்டோன் படத்தோடு கூடிய மேல் கவரும் உள்ளது. இதனை வாங்கிப்படிப்போர் உண்மைக்காதல் என்பது இன்னதென்பதையும் இன்ன விதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல் வாழ்க்கையில் இன்னவித மண கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று, அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும், மறுமையின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

---

## மேற்கண்ட நூலின் விஷய அட்டவணை.


**1**

1. கடவுளும், புருஷார்த்தங்களும்.
2. கடவுள் வடிவம்.
3. மக்கள் இயற்கை.
4. மக்களின் உயர்வுக்குக் காரணமென்ன.
5. புருஷார்த்தங்கள்.
6. ஆசிரமங்கள்.

**2**

7. தேகத்தின் அங்கங்களும், அவைகளின் வேலைகளும்.
8. தேகமும், நீராவியந்திரமும்.
9. தேகத்தின் மூன்று பெரும் பிரிவுகள்.
10. எலும்புக்கூடு.
11. எலும்புகளின் தொகை.
12. தசைகள்.
13. உணவுண்பதும் சுவாசிப்பதும் ஏன்?
14. இரத்த ஓட்டம்.
15. இரத்தத்தின் நிறையும், பதார்த்தங்களும்.
16. ஆகாரம் இரத்தமாக மாறுவதெப்படி?
17. ஆகாரங்களின் வகைகள்.
18. அசுத்த நிவாரண அங்கங்கள்.
19. நரம்புகள்.
20. மூளையும் அதன் பிரிவுகளும்.
21. பஞ்சேந்திரியங்கள்.

**3**

22. ஆண் பெண் பகுப்புக்கள்.
23. ஆண் ஜாதிப் பிரிவுகள்.
24. முயல் ஜாதிப் புருஷனுடைய குணங்கள்.
25. மான் ஜாதிப் புருஷனுடைய குணங்கள்.
26. விருஷப ஜாதிப் புருஷனுடைய குணங்கள்.
27. அசுவ ஜாதிப் புருஷனுடைய இலக்ஷணங்கள்.
28. பெண்களின் ஜாதிப் பிரிவுகள்.
29. பத்மினி ஜாதிப் பெண்ணின் அங்க அடையாளங்களும், இலட்சணங்களும்.





30. சித்தினிப் பெண்ணின் குணங்கள்.
31. சங்கினி ஜாதிப் பெண்ணின் குணாதிசயங்கள்.
32. ஹஸ்தினி ஜாதிப் பெண்ணின் குணங்கள்.
33. பெண்மான், பெட்டைக்குதிரை, பிடியானை ஜாதிப் பெண்கள்.
34. ஸ்திரீபுருஷ ஜாதி ஒற்றுமைகள்.
35. நற்பொருத்தமுள்ள ஸ்திரீ புருஷர்களும், அவர்கள் குழந்தைகளும்.

**4**

36. பெண்களின் ருது காலமும் அதன் விவரங்களும்.
37. பெண்களின் பருவங்களும், வயதும்.
38. ருதுவும், சிதோஷ்ண நிலையும், ஆகாராதிகளும்.
39. ருது வாவதென்னை?
40. மாதவிடாயின் தாத்பரியமென்னை.
41. மாதவிடாயின் இரத்த அளவு.
42. நாகரீக மடைந்த ஸ்திரீகளும், மாதவிடாயும்.
43. ருதுப் பருவத்தை அடைந்த பெண்களை அறிவதெப்படி?
44. மாதவிடாயும், அதன் பலனும்.
45. ருதுவாகும் திதிகளின் பலாபலன்கள்.
46. புஷ்பவதி யாகும் வார பலன்.
47. ருதுவாகும் நக்ஷத்திர பலன்.
48. ருதுவாகும் மாத பலன்.
49. ருதுவாகும் யோகங்களின் பலாபலன்.
[5]0. ருதுவாகும் இராசிகளின் பலாபலன்கள்.
[5]1. ருதுவாகும் பகல் இரவுகளின் பலன்கள்.
[5]2. மாதர்கள் வீட்டுக்கு விலக்கமாயிருக்கும் நாட்களின் பலன்கள்.

**5**

[53]. விவாகத்தைப் பற்றிய விஷயங்[கள்].
[5]4. விவா...
[5]5. மண வாழ்க்... [எ]ன்னை?
[5]6. மண வாழ்க்கையின் ... ...ருத்து.
57. மண வாழ்க்கையை வெறுக்கக் காரணங்கள் என்ன?
58. மணவாழ்க்கையின் பயனும் அதனை அடையும் மார்க்கமும்.
59. மணமும் குருட்டு நம்பிக்கைகளும்.
60. கலியாணமும் வயதும்.
61. தம்பதிகளின் வயதில் தாரதம்மியம்.
62. பாலிய விவாகங்களும், அவற்றின் கெடுதல்களும்.
63. பாலிய மனைவியும், வயது சென்ற புருஷனும்.
64. விவாக முறைகளும், பற்பலதேச வழக்கங்களும்.
65. நம் நாட்டின் எண்வகை மணங்கள்.
66. ஜார்ஜ் ஸ்டெர்ன்ஸ், கலியாணத்தைப்பற்றிக் கூறுவன.
67. மாப்பிள்ளைகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.
68. கலியாணப் பெண்கள் கவனிக்க வேண்டியவைகள்.
69. கலியாணமும், பெற்றோர்களின் கடமையும்.
70. குலப் பெண்களும் வேசிதனமும்.
71. இந்து சாஸ்திரப்படி மணஞ்செய்து கொள்ளத்தக்க கன்னிகைகள்.
72. மணவாழ்க்கைக் குரிய நற்குண மாதர்களின் தன்மைகள்.
73. மணவாழ்க்கைக் குதவாத தீய மாதர் தன்மை.

**6**

74. ஜனனேந்திரியக் கருவிகளைப் பற்றிய விஷயங்கள்.
75. ஸ்திரீகளின் ஜனனேந்திரியங்கள்.
76. ஆண்மக்களின் ஜனனேந்திரியக் கருவிகளும், அவற்றின் உபாங்கங்களும்.
77. இந்திரியம்.

**7**

78. சுகபோகங்கள்.
79. புணர்ச்சிக் குரிய காரணங்கள்.
80. புணர்ச்சியின் வகைகள்.
81. நிரயப் புணர்ச்சி.

82. அக்கிரமப் புணர்ச்சி.
83. பலவந்தப் புணர்ச்சி. [னும்.
84. புணர்ச்சிக்குரிய காலமும், பய
85. கலவிக்குரிய இராத்திரி ஜாமங்களும், பலனும்.
86. மாதத்தீட்டும் சேர்க்கையும்.
87. கருப்பமும் புணர்ச்சியும்.
88. ஆடவர்க்குக் கலியாணமாகு முன் புணர்ச்சி கூடாதென்பது.
89. கலியாணம் செய்வதற்கு முன் அனுசரிக்கும் பிரம்மச்சரியத்தால் ஏற்படும் நன்மைகள்.
90. பிரம்மச்சரியத்தைப் பரிசுத்தமாய் அனுஷ்டிக்க வேண்டியதற்குச் செய்யத்தக்கவை.
91. அளவுக்கு மீறிய புணர்ச்சியால் நேருங் கேடுகள்.
92. சோத்தகாதவர்களின் சேர்க்கையாலுண்டாம் பயன்.
93. சேர்க்கைக் குரியார் இன்னவிதமா யிருக்கவேண்டு மென்பது.
94. புணர்ச்சிக்கு உரியராகாதார்.
95. பெண்களைச் சேராத நாட்கள்.
96. சேர்க்கைக்குத் தகுதியான காலம்.
97. இன்னநாட்சேர்க்கையில் இன்ன குழந்தை பிறக்கு மென்பது.
98. அறிவுள்ள சந்ததிகளைப் பெறும் மார்க்கம்.
99. எண்ணங்களின்படி குழந்தைகளை அடையும் மார்க்கங்கள்.
100. தேகத்தை நல்லநிலையில் வைக்கத்தக்க உணவு வகைகள்.
101. சைவஉணவுமிகுதியும் வீரத்தையுண்டாக்கு மென்பது.
102. நான்கு பருவப் பெண்களை மகிழ்விக்கும் விதம்.
103. நான்கு ஜாதிப் பெண்களை மகிழ்விக்கும் மார்க்கங்கள்.
104. நான்கு ஜாதி ஸ்திரீகளின் படுக்கைகள்.
105. நான்கு ஜாதிப் பெண்களும் இன்னகாலத்திற் கூடினால் திருப்தி கொள்வார்க ளென்பது. [பயன்.
106. சொந்தமனைவியின் சேர்க்கைப்
107. மூன்று பருவப் பெண்களின் சேர்க்கையாவன.
108. காமவெறி கொண்டவளின் சம்போகப் பயன்.
109. பெண்கள் தீட்டான நாலாநாள் முதல் பதினைன்காம் நாள் வரை கூடுதலின் பயன்.
110. காதலுங் காமமும்.
111. குழந்தைகள் அவசியமா என்பது.
112. கர்ப்பத்தைத் தடுத்தல்.

8

113. கருப்பமும் அதைப் பற்றிய விஷயங்களும்.
114. கருவுண்டாகும் விதம்.
115. கருப்ப ஸ்த்ரீகளுக்குக் கஷ்டமுண்டாவதற்குக் காரணம்.
116. கருப்போற்பத்திக் குரிய காலங்கள்.
117. கருவும், அதன் உப அங்கங்களும்.
118. கருத்தரித்த 8 நாட்களுக்குப் பிறகு கருப்பாசம் இருக்கும் நிலை.
119. கருவானது கருப்பாசயத்தில் பிரவேசித்தவுடனே கருப்பாசயம் இருக்கும் நிலை.
120. கருவானது கருப்பாசயத்தில் தங்கிச் சற்று விருத்தியடைந்த பிறகு இருக்கும் நிலை.
121. மாயை அல்லது நஞ்சு.
122. கருவின் வளர்ச்சி.
123. 14-நாள் கரு 15-நாள் கருவின் நிலை.
124. முதல் மாதத்தின் பிண்டத்தின் நிலை.
125. மூன்று வாரத்திய கரு 45 - நாளைய பிண்டம்.
126. இரண்டாம் மாத பிண்ட நிலை.
127. மூன்றும் மாதத்தில் பிண்டத்தின் நிலை.
128. நான்காம் மாதத்தில் பிண்டத்தின் நிலை.
129. ஐந்தாவது ஆறுவது மாதங்களில் பிண்டநிலை.
130. ஏழாம் மாதத்தில் பி[illegible]த்தின் நிலை.
131. [illegible] பிண்டம் [illegible] அனுசரிக்க [illegible]
132. எட்டாம் மாத பிண்டநிலை.
133. ஒன்பதாவது பத்தாவது மாதங்களில் பிண்டநிலை.
134. கருப்பத்தில் பிண்டம் இருக்கும் நிலை.
135. சிசு சுகப்பிரசவத்துக்கு முன் இருக்கும் நிலை.
136. சுக்கில சுரோணிதங்கட்கு உயிருண்டென்பதும், நரம்புகளுக்கும் ஆத்மாவுக்கு முள்ள சம்பந்தமும்.
137. கருப்ப காலத்தில் ஸ்திரீகள் கவனிக்கத் தக்கவை.
138. சுத்தக்காற்றும் தாய்மார்களும்.
139. கருப்பஸ்திரீகளுக் குரிய உணவுகள்.
140. கருப்ப ஸ்திரீகளுக்கு அதிக உணவு கூடா தென்பதும், வேறு ஆகார நியமங்களும்.
141. கருப்ப காலத்தின் இரு பிரிவுகள்.
142. கருப்ப ஸ்திரீகள் அனுசரிக்க வேண்டிய சில முக்கியமான விதிகள்.
143. கருப்புக் குறிகள்.
144. கருப்ப கால அளவு.
145. கருப்பத்திலுள்ள ஆண்சிசுவின் குறிகள்.
146. கருப்பத்திலுள்ள பெண் சிசுவின் குறிகள்.
147. கருப்பத்தில் ஆண் பெண் ஆகிய சிசுக்கள் உண்டாவதற்குக் காரணங்கள்.
148. அலி அல்லது பேடிப் பிறப்பைத் தடுக்கும் உபாயம்.
149. கருப்பந் தரிக்காததன் காரணங்கள்.
150. கருப்ப காலத்தில் நேரிடும் சங்கடங்களும் அவற்றைத் தடுக்கும் உபாயங்களும்.
151. மலச்சிக்கலும் அதனாலேற்படும் கேடுகளும்.
152. கருப்பச் சிதைவு.
153. கருச் சிதைவு ஏற்படுங் காலம்.
154. கருச் சிதைவுக்குக் காரணங்கள்.
155. கருச் சிதைவினால் ஏற்படுங் கெடுதிகள்.
156. கருச் சிதைவைத் தடுக்குமுபாயங்கள்.
157. கருச்சிதைவிற் குரிய குறிகள்.
158. சிசுஹத்தி அல்லது பிண்டக் கொலை.
159. சிசுஹத்திக்குக் காரணங்கள்.
160. சிசுஹத்தியால் ஏற்படும் தீமைகள்.
161. கருப்பாசயம் இடம் விட்டுப் பெயருதலும் அதனால் ஏற்படும் கெடுதல்களும்.

9

162. பிரசவத்தைப் பற்றிய விஷயங்கள்.
163. பிரசவத்திற்கு முன் செய்ய வேண்டிய வேலைகள்.
164. பிரசவக் குறிகள்.
165. பிரசவத்தின் வகைகள்.
166. அகாலப் பிரசவம்.
167. சுகப் பிரசவம்.
168. கஷ்டப் பிரசவம்.
169. இரட்டைச் சிசுக்கள் கருப்பத்திலுள்ள நிலை.
170. அதிகக் கஷ்டப் பிரசவம்.
171. கருப்பத்தில் சிசு மரித்த குறிகள்.
172. அசாத்தியப் பிரசவம்.
173. மருத்துவச்சி, பிரசவத்திற்குக் கொண்டு போக வேண்டிய ஆயுதங்களும், மருந்துகளும்.
174. மருத்துவச்சி ஆரம்பத்தில் கவனிக்க வேண்டியவைகள்.
175. தாயையும், குழந்தையையும் கவனித்தல்.
176. தாதிப்பால்.
177. குழந்தைகளுக்குப் பல் முளைத்தல்.
178. குழந்தைகளுக்குப் பால் கொடுக்குங் காலவரை.
179. பால் கொடுக்குந்தாயின் எண்ணங்களையும், குணங்களையுமே பிள்ளைகள் பெறுமென்பது.
180. பால் வறண்டுபோகச் செய்தல்.
181. பால் சுரக்கும்படி செய்தல்.
182. மலடும் அதற்குரிய காரணங்களும், பரிகாரங்களும்.
183. மலடிகளின் வகைகள்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

மூன்றும் பதிப்பு.

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தா முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் திக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

ஆர்டருக்கு முந்துங்கள். விலை ரூபா 2-0-0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ரூ. 1-8-0

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனுமுறை நூலாகிய இது நம் ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களும், மற்றையருமாகிய நண்பர் பலர், பல மாதங்களாக வேண்டிக் கொண்டபடி எம்மால் வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச்செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனுல் எவ்வளவு ஆங்கிலத்தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக் கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணிவித்தியாசம், அன்னியதேச நாணயமதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

உ
ஓம்
பரப்பிரஹ்மணேநமஃ

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)

தொகுதி 13 | விபவஹு சித்திரைமீ கஉ | 1928ஹு ஏப்ரல்மீ 13உ | பகுதி 10

## கடவுள் வணக்கம்.

நிற்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்யமா
நிஷ்கள வசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுக்த
தற்பரவிஸ் வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச வென்றுநான்
சர்வகா லமுநினைவனோ
அற்புத வகோசர நிவர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தி யான
அத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார
வனுபூதி யனுகூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணு டிருந்த குருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (1)

ஏத மற்றவர்க் கின்பமே பொழிகின்ற விறையே
பாத கக்கருங் கன்மனங் கோயிலாப் பரிந்து
சூத கத்கணு யாதினு மிச்சைமேற் றேன்றும்
வாத [illegible] னெவ்வணம் வாழ்வேன். (2)

தங்கமழு மானுடையாய் சூல்[illegible]யுடையாய்
திங்களணி செஞ்சடையாய் சேவுடையாய்—மங்கையொரு
பாலுடையாய் செங்கட் பணியாயென் சென்னியின்மேற்
காலுடையாய் நீயே கதி. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. இதில் ஆசிரியர், சிவபெருமானைக் குருவாகப் பாவித்து விளித்து, "...கடவுளே! உன்னை, 'நிர்க்குண, நிராமய........' என்று சதா காலமும் நினைத்துக் கொண்டிருப்பேனோ" என்று கேட்கின்றார். இதனால், "உன்னைத் தியானம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா? அத்தகைய அருளை நீ செய்வாயா?" என்று சுவாமிகள், எப்போதும் சிவத்தியானத்தோடிருக்க விரும்பி இறைவனைக் கேட்டன ரென்பது விளங்கும்.

நிர்க்குணன்-குணங் கடந்தவன். நிராமயன்-நோயற்றவன்; ஆமயம்-நோய். நிரஞ்சனன்-களங்கமற்றவன். நிராலம்பன்-பற்றுக்கோடில்லாதவன்; ஆலம்பம்-பற்றுக்கோடு. நிர்விஷயன்-உலகப் பொருள்களை விட்டு நீங்கியவன். கைவல்யமாம்-மோக்ஷரூபமான. நிஷ்களன்-ஓரிடத்தும் பற்றில்லாதவன்; களம்-இடம். அசங்கன்-கூட்டமில்லாதவன். சஞ்சலரகிதன்-அசைவற்றவன். நிர்வசனன்-பேச்சற்றவன். நிர்த்தொந்தன்-தொடர்பற்றவன். நித்தன்-எப்போதுமுள்ளவன். முத்தன்-பாசங்கடந்தவன். தற்பரன்-தன்னால் தான் மேன்மை யுடையவன். விஸ்வாதீதன்-உலகங் கடந்தவன்; விஸ்வம்-உலகம், அதீதம்-கடத்தல். வியோம பரிபூரணன்-பரமாகாயத்தில் நிறைந்திருப்பவன், வியோமம்-ஆகாயம். சதானந்தன்-நித்தியானந்தன். பகவன்-ஆறு குணங்களை யுடையவன்; பகம்-ஆறு குணம்; அறு குணங்களாவன:-ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன. சம்பு-சுகரூபி; சம்-சுகம்; அதனை யுடையவன் சம்பு. சிவன்-மங்களரூபன்; சிவம்-மங்களம். சங்கரன்-சுகமான (செய்கை பொருந்திய) காத்தை யுடையவன். சர்வேசன்-எல்லாவற்றிற்கும் இறைவன். அகோசரன்-(எவராலும்) அறியப்படாதவன்; கோசரம்-அறியத்தக்கது. நிவர்த்தி-(உலகப்பற்றினின்றும்) விடுதலையடைதல். ஆனந்தபூர்த்தி-சுகநிறைவு. அத்துவிதம்-இரண்டற்றநிலை. நிச்சயன்-உண்மையுடையவன். சொரூப சாக்ஷாத்கார அநுபூதி அனுகூலமும்-(உன்) சொரூபத்தினது பிரத்தியக்ஷானுபவ இரகசியமும். சிற்சபை-சிற்றம்பலம். நிர்த்தம்-கூத்து. கருணாகரம்-கருணைக்கிருப்பிடம்.

2. "இறைவனே! நான், பாதகம் பொருந்திய கல்மனத்தை இடமாகக் கொண்டு வஞ்ச உள்ளத்தினனாய், பொருளிச்சையால் தோன்றும் வாதனைக் கிடமாயினேன்; இத்தகைய நான் எவ்வாறு ஈடேறுவேன்?" என்று இதில் கூறுகின்றார் ஆசிரியர்.

ஏதம்-குற்றம்.
பரிந்து-விரும்பி.

3. இதில், ஆசிரியர், சிவபெருமானை நோக்கி, 'துங்கமழுமானுடையாய் ..........என் சென்னியின்மேற் காலுடையாய் நீயே (எனக்குக்) கதி' என்று கூறுகின்றார். முதல்வனே என்[illegible]லின் அவனிடத்து அடைக்கலம் புகுந்தார்.

துங்கம்-உயர்ச்சி, வெற்றி[illegible]
படை-ஆயுதம்.
சே-இடபவாகனம்.
பால்-பக்கம். பணி-பா[illegible]. சென்னி-சிரம்.

169848
600 008

# ஆனந்தபோதினி

விபவஹு
சித்திரைமீ கஉ

## அரசாங்க உத்தியோகஸ்தர்கள்.

ஜனங்களுக்குரிய காரியங்களைக் கவனிப்பதற்கு உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயம் சாமானியமானதல்ல. ஜனங்களுக்குரிய காரியங்கள் செவ்வனே நடப்பதும், அவ்வாறு நடவாமற்போவதும் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குணத்தையும், அறிவையும், திறமையையும் பொறுத்திருக்கின்றன. நற்குணமும், சிறந்த அறிவும், திறமையும் வாய்த்தவர்களையே அத்தகைய உத்தியோகஸ்தராக நியமிக்கவேண்டும். சில வருடங்களுக்கு முன்வரையில் ஆங்கிலேயர்களின் தேசங்களில், ஆட்சிபுரிந்த கட்சியார், தங்களுடைய பந்துக்களையும், நண்பர்களையும் மாத்திரம் அரசாங்க உத்தியோகஸ்தர்களாக நியமித்து வந்தார்கள். அக்காலத்தில் இங்கிலாந்தில் ஆட்சிபுரிந்த கட்சியார், தங்களுடைய குடும்பத்தார்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் உயர்தர உத்தியோகஸ்தர்களாகவும், சட்டசபை அங்கத்தினர் நியமன காலத்தில் தங்களுக்குத் தொண்டுபுரிந்தவர்களைக் கீழ்தர உத்தியோகஸ்தர்களாகவும் நியமித்தனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலார் போதிய அளவு கல்வியும், அறிவும், திறமையுமில்லாதவர்களா யிருந்தபடியால் ஜனங்களுக்குரிய காரியங்கள் செம்மையாக நடைபெறவில்லை. அதனால், ஜனங்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் வெறுப்புக்கொண்டனர். நம் நாட்டு ஜனங்களுக்குரிய காரியங்களை முதன்மையாக நின்று கவனித்து வரும் இங்கிலாந்து மக்களின் மூதாதையர் ஆதியில் நம் நாட்டுக்கு வியாபாரிகளாக வந்து, நாளடைவில் நம் நாட்டின் பல பாகங்களைப் பல வகைகளில் கைப்பற்றி அப்பாகங்களைத் தாங்களாகவே ஆட்சிசெய்யத் தலைப்பட்டனர். அவர்கள், வியாபாரி

களா யிருந்தபோது, வியாபாரத்திற்குரிய அலுவல்களைக் கவனிப்பதற்கு இங்கிலாந்திலிருந்து பல இளைஞர் அனுப்பப்பட்டனர்; முதியோர் இங்கு வராமல் தங்கள் நாட்டிலேயே ஜீவித்தனர். இந்த வியாபாரிகளின் குமஸ்தாக்களுக்குப் போதிய அளவு கல்வியும், ஜனங்களுக்குரிய காரியங்களைக் கவனிப்பதற்கு அனுபவமும், திறமையு மில்லாதபடியால் அவர்கள், வியாபாரிகள் ஆட்சிசெய்யத் தலைப்பட்டபோது ஜனங்களுக்குரிய காரியங்களைச் செவ்வையாகக் கவனிக்கவில்லை. ஆகவே, அப்போதிருந்த கவர்னர்ஜெனரல்-(இராஜப் பிரதிநிதி) இங்கிலாந்திலிருந்து பிற்பாடு அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர்களை உத்தியோக அலுவல்களில் பயிற்றுவிப்பதற்காகக் கல்கத்தாவில் ஒரு பாடசாலை ஏற்படுத்தினார். கொஞ்சக்காலம் கழித்து, இங்கிலாந்து அரசாங்கத்தார், இந்தியாவுக்கு உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படுகிறவர்கள் ஜனங்களுக்குரிய காரியங்களைச் செவ்வனே கவனிப்பதற்கு லாயக்குடையவர்களா யிருக்கும்படி அவர்களை அவ்விஷயங்களில் பழக்குவதற்கு லண்டன் நகருக்கு அருகிலுள்ள, ‘எயில்பரி’ என்னும் ஊரில் 1806-ம் ஆண்டில் ஒரு பாடசாலை ஏற்படுத்தினர். பின்னர், அப்பாடசாலையில் பயின்று பரீட்சையில் தேறினவர்கள்தாம் இந்தியாவுக்கு அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்களாக அனுப்பப்பட்டனர். அப்படியிருந்தும் அவர்கள், தற்போதுள்ள ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைப் போலவே நம் நாட்டு ஜனங்களுக்கு அனுகூலம் ஏற்படுத்தாமல் தம் நாட்டாருக்கு மாத்திரம் அனுகூலம் ஏற்படுத்தினர். இன்னும் அவர்கள் எல்லோரும், தற்போதைய உத்தியோகஸ்தர்களைப் போலவே, தாங்களே நலமடையவேண்டுமென்னும் ஒரே விதமான எண்ணத்துடன் நம் நாட்டுக்கு வந்தனர்; மேலும் ஒரு தேசத்தைக் கைப்பற்றிய போர்வீரர்களின் தலைவர்கள் எவ்விதமான நோக்கங் கொண்டவர்களா யிருப்பார்களோ அவ்விதமான நோக்கங்கொண்டவர்களா யிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குத் தாங்களே தங்களை, மேம்பட்ட ஒரு தேசத்தாரின் பிரதிநிதிகளாகவும், இந்தியநாட்டை ஆட்சி புரிகின்றவர்களாகவும் பாவித்துக்கொண்டார்கள். அவர்கள் இவ்விதமான எண்ணங்கொண்டவர்களாயிருந்தபடியால், அவர்கள் ஆட்சிசெய்த விதத்தைப்பற்றி யாரும் குறை கூறக் கூடாதென்றும், அவர்கள் ஆட்சி செய்த விதம்தான் சரியானதென்றும் கருதினர். இன்னும் அவர்கள், தற்போதைய ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைப்



போலவே, தங்களிஷ்டப்படி காரியங்கள் நடத்தினர். அவர்கள், இந்திய நாட்டை ஆட்சி புரிவதற்குத் தங்களுக்குத்தான் உரிமையுண்டென்று நினைத்தார்கள். அவர்களுக்குப் பின்னர் அவர்களுடைய புத்திரர்களும் நெருங்கிய உறவினர்களும் மாத்திரம் இந்தியாவுக்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களாக அனுப்பப்பட்டனர். அதனால், இங்கிலாந்து ஜனங்கள், இந்த முறையை நிறுத்திவிட்டு இங்கிலாந்து ஜனங்களில் தக்கவரைத் தேர்ந்தெடுத்து இந்தியாவுக்கு உத்தியோகஸ்தராக அனுப்பவேண்டுமென்று ஆட்சியாளரை வேண்டினர். ஆகவே, இங்கிலாந்து அரசாங்கத்தார், இந்தியாவுக்கு எத்தகையவரை உத்தியோகஸ்தர்களாக அனுப்பலாமென்பதைத் தெரிவிக்கும்படி ஒரு கமிட்டியாரை நியமித்தனர். அக்கமிட்டியார், “இது பரியந்தம் அதிகாரிகள் தங்களுக்கிஷ்டமானவர்களை இந்தியாவுக்கு உத்தியோகஸ்தர்களாக அனுப்பினர். இனிமேல் அங்ஙனமின்றிப் பரீட்சை நடத்தி அந்தப் பரீட்சையில் தேறுகின்றவர்களைத்தாம் அங்கு அனுப்பவேண்டும்” என்று தெரியப்படுத்தினர். அக்காலம் முதல் இங்கிலாந்து அரசாங்கத்தார் இந்த யோசனைப்படி அக்காரியத்தை நடத்தி வருகின்றனர். இங்கிலாந்தில் நடத்தப்படும் இந்தப் பரீட்சையில் தேறுகின்றவர்கள், நம் நாட்டிற்கு டெப்டி-கலெக்டர் முதலிய உயர்தர உத்தியோகஸ்தர்களாக அனுப்பப்படுகின்றனர். நம் நாட்டிலுள்ள பணக்காரர்களின் பிள்ளைகள் சிலர் இங்கிலாந்திற்குச் சென்று சுமார் இரண்டு வருடகாலம் வரையில் கல்வி பயின்று இங்கிலாந்து மக்களுடன் பரீட்சையில் அமர்கின்றனர். இந்தப் பயிற்சிக்கு நம் நாட்டார் சிலர்தாம் அனுமதிக்கப்படுகின்றனர். இங்கிலாந்து அரசாங்கத்தார், தம் நாட்டு ஜனங்களுக்கு அனுகூலம் ஏற்படும்பொருட்டுத் தம் நாட்டாரைப் பெருந்தொகையினராக இங்கு உத்தியோகஸ்தர்களாக அனுப்புகிறார்கள்; நம் நாட்டாரில் சிலரைத்தாம் அத்தகைய உத்தியோகஸ்தர்களாக நியமிக்கிறார்கள். ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் நமக்கு அனுகூலம் செய்யாமல் தம் நாட்டாருக்கு அனுகூலம் செய்கிறபடியால் நம் நாட்டு ஜனங்கள், நம் நாட்டாரையே உயர்தர உத்தியோகஸ்தர்களாக நியமிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாருடன் வாதாடுகிறார்கள். ஜனங்கள் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து நம் நாட்டு அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பெருஞ் சம்பளம் கொடுக்கப் படுவதுபோல் உலகில் வேறே

எந்த நாட்டிலும் கொடுக்கப் படுவதில்லை. அவ்வாறு அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதல்லாமல், அவர்களில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் ரஜா எடுத்துக்கொண்டு தங்களுடைய ஜனன நாட்டுக்குச் செல்லுகையில் அவர்களுக்கும் அவர்களின் மனைவி மக்களுக்கும் கப்பல் சார்ஜுக்காகப் பல ஆயிரக்கணக்கான ரூபா கொடுக்கப்படுகிறது. ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத்திலிருந்து விலகுகையில் அவர்களுக்குப் பதிலாக அரசாங்கத்தார் நம் நாட்டாரை நியமித்தால் அரசாங்கச் செலவில் பல லட்சக்கணக்கான ரூபா மீதியாகும்; அத் தொகையைக் கொண்டு ஏழைக் குடியானவர்களுக்கு ஏதேனும் ஒரு அனுகூலம் செய்யலாம். ஆனால் அரசாங்கத்தார் இவ்வாறு செய்ய மறுக்கிறார்கள். 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்னும் பழமொழிக்கொப்பா ஜனங்கள் பின்னும் பின்னும் அரசாங்கத்தாரை வற்புறுத்தில் அவர்கள், ஜனங்களின் விருப்பப்படி செய்வார்கள்.

ஓம் தத் ஸத்.

## சந்தா நேயர்களுக்கு

### 14-வது ஆண்டின் முன்னறிவிப்பு.

நம் போதினியின் மீது அன்பு செலுத்திவரும் சந்தாதாரர்களாகிய நண்பர்களே! நாளிது விபவ ௵ ஆடி ௴ ௧௳ (16-7-1928) நம் ஆனந்தபோதினிக்கு 14-வது ஆண்டு பிறக்கப்போகிறது. ஆதலின், சந்தாதாரர்கள் ஷை 14-வது ஆண்டின் சந்தாத்தொகையை நாளிது விபவ ௵ ஆனி ௴ ௧௳ (14-6-1928) க்குள் மணியார்டர் மூலமாகவோ, நேரிலோ செலுத்திவிடும்படி கோருகிறோம். பத்திரிகையை நிறுத்திக்கொள்ள விரும்புவோர் அவ்விவரத்தை ஷை 14-6-1928 க்குள் கார்டின் மூலமாகவோ நேரிலோ தெரிவித்துவிடவேண்டும். மேற்கூறியபடி சந்தாத்தொகையை முன்பணமாகச் செலுத்திவிடுகிறவர்களுக்கு வழக்கம்போல் நாளிது விபவ ௵ ஆனி ௴ சஞ்சிகையும், அதற்குப் பின்வரும் சஞ்சிகைகளும் சாதாரண போஸ்டில் அனுப்பப்பட்டுவரும். பத்திரிகையை நிறுத்திக்கொள்ளும்படி தெரிவித்தவர்களுக்கு நாளிது விபவ ௵ ஆனி ௴ சஞ்சிகைமட்டும் சாதாரண போஸ்டில் வந்துவிடும். இங்குக் குறித்தபடி சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்பாதவர்களுக்கும், பத்திரிகை தங்களுக்குத் தேவையில்லையென்ற விவரத்தைத் தெரிவிக்காதவர்களுக்கும் அடுத்த 14-வது ஆண்டின் சந்தாத்தொகைக்காக நாளிது விபவ ௵ ஆனி ௴ பத்திரிகை வி.பி. யில் அனுப்பப்படும். இவர்கள் சந்தாத்தொகையை அனுப்பாமலும், பத்திரிகைவேண்டாமென்று தெரிவிக்காமலுமிருப்பதால் பத்திரிகையை வி. பி. யில் பெற்றுக்கொள்ள விருப்பமுடையவர்களாயிருக்கிறார்களென்று நாங்கள் உறுதிகொள்கிறோம். அதனாலேயே இவர்களுக்கு வி.பி. யனுப்பப்படுகிறது. ஆதலின், இத்தகைய நண்பர்கள் வி. பி. யைத் திருப்பிவிடாமல் பெற்றுக்கொள்ளும்படி கோருகிறோம். இவ்வாறு வி. பி. யைப் பெற்றுக்கொள்கிறவர்களுக்கும் சஞ்சிகைகள் வழக்கம்போல் அனுப்பப்பட்டுவரும். வி. பி. யில் 3 அணா அதிகச் செலவும், சஞ்சிகை வந்துசேர வீண் காலதாமதமும் நேருகின்றன. ஆதலின், எல்லோரும் முன்பண மனுப்பிவிடுவதே நலம்.



பினாங்கு, சிங்கப்பூர் முதலிய மலேயா நாடுகளுக்கு வி. பி. இல்லையாதலின், அவ்விடங்களிலுள்ள சந்தாதாரர்கள் எல்லோருமே சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்பிவிடவேண்டும்.

இங்குக் குறிப்பிட்டிருப்பவைகள் எல்லோருக்கும் நன்மைதரக் கூடியனவாதலின் சந்தாதாரர்களாகிய நண்பர்கள் வீண் குதர்க்கம்செய்து நமக்கு வீண் சிரமத்தை யுண்டாக்காமல் இவற்றின்படி நடந்துகொள்ளுமாறு ஒவ்வொருவருக்கும் நினைப்பூட்டுகிறோம். விஷயத்தை யுணராமல் வீண் தர்க்கம்செய்து கடிதங்களெழுதி வேதனையை யுண்டாக்குவோரின் உள்ளப்போக்கைப்பற்றி வருடந்தோறும் குறிப்பிட்டெழுதியிருக்கிறோம். அவற்றை யுணர்ந்த புத்திமான்களுக்கு அவர்கள் செய்கை நன்மைதராத தென்பதும், நாம் செய்திருக்கும் ஏற்பாடு இருபாலார்க்கும் நலந்தரத்தக்கதென்பதும் விளங்கும். ஆதலின் புத்திமான்கள் நுட்பமாக எல்லாவற்றையும் ஆராய்ந்து வீண் தர்க்கம் செய்யாமல் நம்முடைய ஏற்பாட்டின்படி நடந்துகொள்வார்களென்றே நம்புகிறோம்.

☞ 14-ம் ஆண்டின் சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்குப் படிப்பதற்கு மிக்க விநோதமாயிருக்கும் 'ஓயாச் சிரிப்பு' என்னும் புத்தகமொன்று இனாமாக அனுப்பப்படும்.

முன்பண மனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால், மணியார்டர் கூபனில் தங்கள் சந்தாநம்பரைக் குறிப்பிட்டு, "14-வது ஆண்டுக்கு" என்று விவரம் எழுதி யனுப்பவேண்டும். புதிய சந்தாதாரர்களாகச் சேருகிறவர்கள் புதிய ஆண்டுக்கு என்ற விவரம் எழுதி யனுப்பவேண்டும். பழைய ஒவ்வொரு சந்தாதாரர்க்கும் உரிய சந்தா நம்பர் ஒவ்வொரு மாதத்திலும்வரும் சஞ்சிகையின் மேல் உறையில் வலதுபக்கத்தில் எழுதப்பட்டிருக்கும். சந்தா நம்பர் எழுதுவோர் அதைப்பார்த்துக் கடிதங்கள், மணியார்டர் முதலியவற்றில் எழுதவும்; மேல் உறையின் இடப்பக்கத்தில் 1190 என்ற ரிஜிஸ்டர் நெம்பர் அச்சிடப்பட்டிருக்கும். அதை எழுதக்கூடாது. மேலே குறித்தபடி கையால் எழுதப்பட்டிருப்பதையே குறித்தெழுதவேண்டும். பழைய சந்தாதாரர்களில் சந்தாநெம்பர் தெரியாதவர்கள் முன்பண மனுப்பாமல் வி. பி. யிலேயே சஞ்சிகை பெற்றுக்கொள்வது நலம்.

பழைய சந்தாதாரர்களில் சஞ்சிகையை நிறுத்திவிடும்படி எழுதுவோரும் மேற்குறித்தபடி தங்கள் சந்தா நம்பரைக் குறித்தெழுத வேண்டும்.

ப-ர்.




## பண்டித ஸ்ரீ மதன மோகன மாளவ்யா.

**குடும்பப் பெருமை**

பாரத தேவியின் பரமபக்த சிகாமணிகளாய் காங்கிரஸ் மகாசபையின் ஆரம்ப காலந்தொடங்கி, தண்பணியாற்றிவரும் தேசாபிமானிகளுள் பண்டித ஸ்ரீ மதன மோகன மாளவ்யா அவர்களும் ஒருவராவர். இப்புனிதர் மால்வா வைச் சேர்ந்த பிரபல பழங்கால வடமொழிப் பண்டிதர் வம்சத்திலே அந்தணர் மரபி லவதரித்தவர். சுமார் நானூறாண்டுகட்கு முன்னர் அவருடைய மூதாதையர்கள் மால்வாவை விட்டு அலகபாத்தில் குடியேறினவர்கள். அவ்வமிசத்தார் பரம்பரையாக வடமொழி மகோபாத்தியாயர்களென விளங்கி வருபவர். மாளவ்யா அவர்களின் தந்தையாரான பண்டித ஸ்ரீ பிராஜ் நாதரும் ஆரியமொழியில் அரிய புலவரா யிலங்கியவர். அப்பெரியார் பழுத்த பழமாய்ப் பல்லாண்டுகள் ஆரோக்ய திடகாத்திரராய் உலகத்தில் வதிந்திருந்து சமீபகாலத்தில் சிவபதமெய்தினூர். அவர் வடசொற்கடற்கெல்லை கண்டவராய், பாகவதம், புராண இதிகாசங்களுக்கு உரை வகுப்பதில் வல்லுநராயிருந்தார். அவருடைய பாண்டித்யத்தைக்கண்டு புகழாதவரில்லை. தர்பங்கா மகாராஜாவும், காசிதேச மன்னரும் அவருடைய பக்தி, வித்வத்துவம், சாதுத்தன்மை, இவற்றோடு கூடிப் பொலியும் ஒழுக்கம் முதலியவற்றைக் கண்டு அவரைத் தமது குலகுருவெனக் கொண்டாடுவாராயினர். அவர் வரைந்த வடமொழி நூல்கள் பல. அவற்றைப் பின் மாளவ்யா அவர்கள் வெளியிட்டருளினூர். இப்பண்டித ஸ்ரீ பிராஜ்நாதருக்குப் பல ஆண் பெண் மக்களுண்டு. அவர்களையெல்லாம் அப்பெரியார் சிறிதும் சிரமத்தையோ, தமது சௌகரியக் குறைவுகளையோ பொருட்படுத்தாமல் போஷித்து அவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார்; தம் கண் முன்னிலையில் தமது குமாரரான மாளவ்யா அவர்கள் சான்றோராய் விளங்குதல் கண்டு மகிழும் பாக்கியத்தையும் அவரே யடைந்தவர்.

மாளவ்யா இம்மகானுபாவருடைய மூன்றாவது திருக்குமாரராய் 1861-ம் ஆண்டு டிசம்பர்மீ 25-ம் நாள் அலகபாத்தில் பிறந்தவர். இளமையில் வளர்பிறைச் சந்திரனென வளர்ந்து, முறைப்படி உரியாரால் அக்ஷராரம்பம் செய்விக்கப்பெற்றூர். அப்பால், அவர் தர்மஞானோபதேசப் பாடசாலையிலும், 'வித்யா தர்ம வர்த்தினி' சபையாரின் ஆதரவில் நடைபெற்ற மற்றொரு கழகத்திலும் வடமொழியாந் தாய்மொழிப் பயிற்சியடைந்தார். அதன் பின், அவருடைய தந்தை அவரை ஆங்கிலங் கற்குமாறு 'ஸில்லா' என்ற கலாசாலைக் கனுப்பினூர். அப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்து அவர் பிரவேசப்



**இளமையிற் கல்வி**

பரீக்ஷையிற் றேறி, பின்னர் மியுர் மத்தியகலாசாலை (Muir Central College) மாணவராகிப் பயில்வாராயினர். மாணவரா யிருக்கும்பொழுதே வித்யாபிவிருத்தியிலும், சமயத்தொண்டிலும் அவருக் கதிக ஊக்கமிருந்துவந்தது. அதன்பயனாக அவர் அலகபாத் கலையாராய்ச்சிக் கழகத்தையும், ஹிந்து சமாஜத்தையும் ஸ்தாபித்தார். அவர் மாணவர் நிலையில் விசேஷ கியாதி யேது மடையவில்லை. இதற்குக் காரணம் அவர் படிப்பிலும், பொது விஷயங்களிலும் சமதிருட்டியுடனிருந்து வந்தமையே. 1879-ல் அவர் பிரவேசப்பரீக்ஷையிலும், 1881-ம் ஆண்டில் சிறுகலா குமாரப் பரீக்ஷையிலும் (F.A.) தேர்ந்து 1884-ல் கலா குமாரரானூர்.

**உபாத்திமை**

பி. ஏ. பரீக்ஷையிற் றேர்ந்த அவ்வாண்டி னிறுதியிலேயே அவர் அலகபாத் அரசாங்கக்கலாசாலையில் ஓர் ஆசிரியராக விருந்துவந்தார். அப்பொழுது அவருக்கு ஆரம்பத்தில் ரூ. 50 தான் சம்பளமாக அளிக்கப்பட்டது. அச்சம்பளத்திலிருந்து ரூ. 75 வரையிலும் உயர்த்தப்பெற்று அவர் அவ்வேலையிலேயே 1887-ம் ஆண்டு ஜூன் வரையிலிருந்தார். அரசாங்க உத்தியோகஸ்தராயிருந்தது, தேசநலத்திற்கேற்ற துறைகளிற் புகுந்து உழைத்தற்கு அவருக்கு சுவாதந்திரமற்றதாயிருந்தது. ஆயினும் அவர் 1886-ல் கல்கத்தாநகரிற் கூடிய காங்கிரஸ் மகாசபையில் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினூர். அம்மகாசபைக் கெழுந்தருளி வீற்றிருந்த அவர் ஆசிரியரும், சுயேச்சை வாதியும், மகாமேதாவியுமான பண்டித ஆதித்யராம் அவர்கள் தமது மாணவரின் புத்திக் கூர்மையை வியந்து அவரை உற்சாகப்படுத்தினூர். இதனால் அவர் பதவிக் கெவ்வித மாறுபாடும் நேரவில்லை. அக்கால காங்கிரஸ் நோக்கங்களெல்லாம் அரசாங்கத்தாரை வேண்டுந் தன்மையனவாயிருந்தன.

காங்கிரஸ் இயக்கத்தில் அவர் கலந்துகொண்டதுமுதல் அவரது பெருமையைப் பொதுஜனங்க ளுணர்ந்து போற்றத் தொடங்கினர். கலகங்கர் (Kalakankar) ராஜாராம்பால் சிம்ஹர் அப்பொழுது 'ஹிந்துஸ்தான்' என்ற ஒரு பத்திரிகையை நடத்திவந்தார். வந்தவர் மோகனரைக் காங்கிரஸ் மேடையிற் சந்தித்ததுமுதல் அவருடைய நண்பராகி, அப்பத்திரிகையின் ஆசிரியர் பதவியை யேற்குமாறு அவரை வேண்டினர். மோகனர் அதற்கிசைந்து உபாத்திமைத் தொழிலைவிட்டு 1887-ல் பாங்குடன் அப்பத்திரிகாசிரியரானூர். உபாத்திமைத்தொழில் சாலப் பரிசுத்தமானதென்று, அவர் அதனை விரும்பியிருந்தாராயினும், அத்துறையில் தாம் அதுவரையிற் செய்து வந்த சேவையைப் பத்திரிகையின் வாயிலாகப் புரியலாமென்று நம்பி, ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் அதனை நடத்திவரலாயினர். இவ்வாறு இரண்டரை யாண்டுகள் வரையில் அத்தொழிலில் 200 ரூபாய் சம்பளத்திலிருந்துவந்தார். அவர் பத்திரிகை நடத்துந் திறனை அரசாங்கத்தாரும் புகழ்ந்து, அப்பத்திரிகையைப் பொதுஜனங்கள் வாங்கிப் படித்து ஆதரிக்க வேண்டுவது அவசியமெனத் தமது வருடாந்தர அறிக்கையில் குறித்தனர்.

பின்னர், அவர் சில அசௌகரியங்களை முன்னிட்டு அப்பத்திரிகையின் ஆசிரியர் பதவியினின்றும் விலகி 'இந்தியன் யூனியன்' என்ற வெளியீட்டின் உப

**பத்திரிகாசிரியர் பதவி**

பத்திரிகாசிரியரானார். அப்பத்திரிகைக்குப் பல அறிவாளிகள் கூட்டாளிகளாகச் சேர்ந்து அதனை ஆதரித்து வந்தனர். பண்டித அஜீத்னியா நாதரும், பண்டித பல்தியோராம் தேவரும் அதன் முன்னேற்றத்திற்காகப் பெரும் பாடுபட்டு வந்தனர். இந்நாட்களில் மோகனர் நேராக அப்பத்திரிகையின் ஆசிரியராயில்லாவிடினும், அதன் அபிவிருத்தித் துறையில் உழைத்துப் பல இனிய கட்டுரைகளை வரைந்துவந்தார். பாபு பிரம்மநாத சின்ஹா அவர்கள் அப்பத்திரிகையின் தலைமை யாசிரியராயிருக்க, மோகனர் மதக்கல்வி சம்பந்தமான ருசிகரமான வியாசங்களை அதில் எழுதி வந்ததால், அந்த 'இந்தியன் யூனியன்' சிறந்து விளங்கலாயிற்று. பின்னர் இவ்வித தினசரியை நடத்துவதால் தேசத்தில் கிளர்ச்சியே தலையெடுத்தலையும், சமயநெறிகள் சரிவர அனுட்டிக்கப்படாமல் கைநழுவவிடப்படுதலையும் அவர் தமது சுயானுபவத்திலறிந்து அதினின்றும் விலகித் தாய்மொழி, மதம், ஜனாசாரம் முதலியவற்றை உள்ளபடி ஒளியாமல் ஓதும் ஓர் சஞ்சிகையை வெளியிட ஆவல்கொண்டு அப்யுக்தா என்ற வாரப்பத்திரிகை நடத்த ஆரம்பித்தார்.

இவ்வாறு பத்திரிகையை நடத்திவருங் காலங்களில் அவருடைய அன்பர்கள் அவரை, சட்டகலாசாலையிற் சேர்ந்து வாசித்துப் பரீக்ஷை கொடுக்குமாறு தூண்டினர். ஸ்ரீ. ஒ. ஏ. ஹியூம், பண்டித அஜீதியநாத், ராஜா ராம்பால் சிங், பண்டித சுந்தரலால் சிம்ஹர் ஆகிய அந்தரங்க விசுவாசமுள்ள நண்பர்களும் அவரை நியாயவாதியாக முயற்சிசெய்யுமாறு ஊக்கினர். ஆனால், மோகனருக்குப் பொருளீட்டும் ஒரே உபாயமுள்ள அத்தொழிலிற்

**சட்ட நிரூபணராதல்**

சிறிதும் விருப்பமில்லை. சமய வளர்ச்சிக்கும், கலையுணர்ச்சிக்குமே பாடுபடவேண்டுமென்ற அவா அவர் மனத்திற் குடிகொண்டிருந்தது. ஆயினும், அன்பர்கள் விருப்பத்திற் கிசைந்து அவர் சட்டகலாசாலையிற் சேர்ந்து 1891-ல் 'எல். எல். டி' பட்டம் பெற்று 1893-ல் உயர்தர நீதிமன்ற நியாயவாதியாகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

ஸ்ரீ. ஒ. ஏ. ஹியூம் என்பவர் ஒரு பெரிய மேதாவி. அவர் எப்பொழுதும் தமது மாணவரான மாளவ்யா அவர்களின் வித்யாபிவிருத்தியிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். ஒருசமயம் ஓரன்பர் மாளவ்யா அவர்கள் அருகேயிருக்க, ஹியூம் அவர்களைப்பார்த்து, 'சட்டப்பரீக்ஷைக்கு மாளவ்யா அவர்கள் கற்கத்தொடங்கியது முதல் காங்கிரஸ் அலுவல்களில் அத்துணை ஊக்கங் கொள்ளுகின்றார்களில்லை' என, அவரும், 'அது சரிதான், மனிதர் எந்த விஷயத்திலும் தமது முழுக்கவனத்தையும் செலுத்தி நிற்றல்தானே முறை' என்றியம்பி மகிழ்ந்தார். அப்பால், அவ்விருத்தர் மாளவ்யா அவர்களைப்பார்த்து, "மதனமோகன்! கடவுள் உமக்குச் சிறந்த அறிவை வழங்கியுள்ளார். ஏகமனதோடு இவ்வக்கீல் தொழிலில் நீர் பொறுமையுடன் சுமார் பத்தாண்டுகட்கு உழைப்பீரானால் மகோன்னத நிலையை யடைவது திண்ணம். பிறகு அந்தப் பதவியிலிருந்து சுலபமாக தேசசேவை புரியலாம்" என்று நல்லுரை பகர்ந்தார். ஆனால், மாளவ்யா அவர்கட்கு, பதவியிலோ பொருளீட்டுவதிலோ இயல்பாகவே விருப்பமில்லை. உயர்ந்த பதவிகள் பன்முறை யளிக்கப்பட்டும் அவர் அவற்றை ஏற்க மனமிசைந்திலர்.

(தொடரும்.)

ஸ்ரீ. லக்ஷ்மி காந்தன்.

---

## பாரத நாடு.

("மாற்றறியாத செழும்பசும் பொன்னே." என்ற பாடல் போன்றவை)

1. மாதமும் மாரி வழங்கிய நாடே
    மாதவர் வாழ்கின்ற பாரத நாடே
போத மிகுந்து புகழ்பெறு நாடே
    புண்ணிய பூமியாம் பாரத நாடே
நீதமுன் னோர்கள் நிறைந்தநன் னாடே
    நேர்மைக ளோங்கிய பாரத நாடே
வேத முழங்கி விளங்கிய நாடே
    மேன்மை தருமெங்கள் பாரத நாடே.

2. மாவும் பலாவும் வளர்கின்ற நாடே
    வாழை கமுகுசேர் பாரத நாடே
மேவு சுவைக்கனி கன்மலி நாடே
    மென்மலர்க் காநிறை பாரத நாடே
தாவு பரிகரி தங்குநன் னாடே
    தண்ணிய நீர்மல்கு பாரத நாடே
ஆவு மமுதமு மார்ந்தபொன் னாடே
    அண்டர் புகழெங்கள் பாரத நாடே.

3. கன்னலுஞ் செந்நெலு மன்னிய நாடே
    காட்டு வளஞ்செறி பாரத நாடே
மன்னர்கள் கீர்த்தி வயங்கிய நாடே
    மாமலை கள்சூழும் பாரத நாடே
நன்னயஞ் சேர்நதி கள்மலி நாடே
    நாவலர் வாழ்கின்ற பாரத நாடே
இன்னல் தவிர்க்கு மெழில்பெறு நாடே
    இன்ப மிகுமெங்கள் பாரத நாடே.

4. மாணிக்க மாதி மணிகள்சேர் நாடே
    மாமலர்த் தேன்பொழி பாரத நாடே
ஆணிப்பொன் னேவிளை வாகுநன் னாடே
    அன்புடை யார்தங்கும் பாரத நாடே
பூணிற் பொலிந்த புனிதமார் நாடே
    புன்மையில் லாத்திருப் பாரத நாடே
ஆணிற் சிறந்தவர் வாழ்கின்ற நாடே
    அற்புதஞ் சேரெங்கள் பாரத நாடே.

5. நற்சுவை சேருண வைத்தரு நாடே
    நாளு மகிழ்ச்சிசெய் பாரத நாடே
கற்புள அன்னையர் மிக்கநன் னாடே
    காட்சி பலநிறை பாரத நாடே
விற்றொழில் வீரர் மிகுந்துள நாடே
    மெய்க்கலை கள்தங்கும் பாரத நாடே
பொற்புறு கோவில்கள் உற்றிடு நாடே
    பூந்தடஞ் சேரெங்கள் பாரத நாடே,

6. முத்தும் பவளமும் பெற்றிடு நாடே
முத்தமி ழோங்கிய பாரத நாடே
பத்தி நெறிகள் பரவிடு நாடே
பல்வள மோங்கிய பாரத நாடே
நத்துபட் டாடைகள் நண்ணிய நாடே
நட்பு முறையறி பாரத நாடே
பத்தினி கண்ணகி தோன்றிய நாடே
பாரி லுயரெங்கள் பாரத நாடே.

7. அண்டிய யார்க்கு முதவிசெய் நாடே
அழகிற் குறையாத பாரத நாடே
தண்டமிழ்க் காகத் தலைதரு நாடே
சத்திய மாறாத பாரத நாடே
பண்டு புறவுக் குடல்தரு நாடே
பாட்டி லுயர்வுணர் பாரத நாடே
சண்டையிற் பின்னிடா தோர்மலி நாடே
சங்க மிகுமெங்கள் பாரத நாடே.

8. சிற்பிகள் வேலை சிறந்திடு நாடே
சித்திர மோங்கிய பாரத நாடே
அற்பர் தமைமதி யாத்திரு நாடே
அன்னியர்க் குந்தாயாம் பாரத நாடே
அற்புத கோபுரங் கள்பொலி நாடே
அரியமா டங்கள்சேர் பாரத நாடே
வெற்றிசேர் மன்னர் விளங்கிய நாடே
மேன்மை தருமெங்கள் பாரத நாடே.

9. வந்தவர்க் கெல்லா மகிழ்தரு நாடே
வள்ளல்கள் தங்கிய பாரத நாடே
முந்தி மருத்துவ மோங்கிய நாடே
முத்தி நிலையுணர் பாரத நாடே
சந்தத மும்விழா சார்ந்திடு நாடே
சஞ்சீவி கள்மலி பாரத நாடே
எந்த வளமுங் குறைவுறா நாடே
ஏர்பர வுமெங்கள் பாரத நாடே.

10. மாறுகொள் வார்க்கஞ்சி டாப்பெரு நாடே
வஞ்சர்க் கிடந்தராப் பாரத நாடே
ஊறுசெய் வார்க்கும் நலஞ்செயு நாடே
உள்ளத்தில் சாந்தமார் பாரத நாடே
தேறுநூற் கல்வி செறிந்தநன் னாடே
செந்திரு வாழ்கின்ற பாரத நாடே
ஆறுமுகன் தமி ழாற்புகழ் நாடே
ஆர்வ மிகுமெங்கள் பாரத நாடே.

செம்பூர், வி. ஆறுமுகஞ் சேர்வை.

---




(407-ம் பக்கத் தொடர்ச்சி.)

## முடிந்த ஞானம்.

ஏனைய யாவரும் பரமாத்மா குறிகுணமற்றது; ஏகமானது; இரண்டற்றது விகாரமற்றது என்று தெரிந்துகொண்டு தியானிக்க வேண்டும். அப்படிப்பட்ட பழக்கத்தினாலே க்ஷத்திரியனும் பரமாத்மாவைத் தன் ஆத்மாவில் கண்டு தரிசிப்பான். அந்த ஆத்மாவே ஞானமாயும் கர்மமாயும் இருக்கிறதென்று கருதுகிறவன் எவனானாலும் பதிதனாவான். அவன் பிரமாவின் இலக்கணங்களை அபகரிக்கிறபடியால் சகல பாபங்களையும் துணிந்து செய்வான்.

பிராமணன் முயற்சியற்றவனா யிருக்கவேண்டும். ஒருபோதும் தானம் வாங்கக்கூடாது. தர்மிஷ்டர்களுடைய ஆசாரத்தையே அநுஷ்டிக்கவேண்டும். எப்போதும் பிராமணன் சாந்தமுள்ளவனா யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் தபோபலத்தை யிழந்துவிடுவான். வேதம் முற்றும் உணர்ந்தவனா யிருந்தாலும் அறியாதவனைப்போ லிருக்கவேண்டும். கர்வம் அடையக்கூடாது. அதனால் அவன் பிரமஞானத்தை அடைந்து பரபிரமத்தை அறியக்கூடும். இலவுகிக விருத்தியில் ஏழையாயும் பரத்தில் ஐசுவரியவானாயும் யாகயக்ஞாதிகளைச் செய்துகொண் டிருக்கிறவன் பிறரால் ஜயிக்கப்படாதவனாயும் அச்சமற்றவனாயும் இருப்பான். அவனே பிரம சொரூபி யென்று அறிஞரால் மதிக்கப்படுவான்.

யாகங்களைச் செய்கிறவன்கூடச் சர்வாபீஷ்டங்களையுந் தருகிற தெய்வத்தைத் தரிசிப்பான். பிரமத்தைத் தரிசிக்கிறவனுக்குச் சமானமேயில்லை. ஏனென்றால் யாகம் செய்கிறவன் பிரமத்தைத் தரிசிக்கும் முயற்சியைச் செய்கிறான். கர்மத்தை விட்டிருக்கிற ஞானியும் மரியாதைக் குரியவன். அவனுக்குத் தேவர்கள்கூட மரியாதை செய்கிறார்கள். பிறரால் மரியாதை செய்யப்படுகிறவன் தன்னைத்தானே மதிக்கக்கூடாது. பிறரால் மதிக்கப்படாதபோது, துக்கப்படக்கூடாது. மனிதர்கள் தங்களுடைய கண்களை மூடித்திறப்பதுபோலக் காரியங்களைச் செய்கிறார்கள். (என்றால் பிறரறியாமலும் சீக்கிரமாயும் செய்கிறார்கள்). கற்றறிந்தவனே பிறருக்கு மரியாதை செய்கிறான். மரியாதை செய்யப்பட்டவனும் அப்படியே நினைக்க வேண்டும், இவ்வுலகில் மூடர்கள் பாபிகளும் வஞ்சகருமா யிருக்கிறார்கள். அவர்கள் மரியாதை செய்யத்தக்கவர்களுக்கு மரியாதை செய்யமாட்டார்கள். எப்போதும் பிறரை அவமதிப்பார்கள். உலகப் பெருமையும் தவமகிமையும் ஒன்றாகச் சேர்வதில்லை. பெருமையைத் தேடுகிறவர்களுக்கே இவ்வுலகம் உரியது.

தவசிகளுக்கு மறு உலகம் உரியது. அரசனே! இவ்வுலக இன்பம் இவ்வுலகப் பொருள்களிலேயே நிலைத்திருக்கிறது. மறு உலகத்தில் சொர்க்க வாழ்விருக்கின்றது. ஞான மில்லாதவர்களாலே சொர்க்க வாழ்வு அடையமுடியாது. சொர்க்க வாழ்வை அடைவதற்குப் பல வழிகளுண்டென்றும், அவைகளெல்லாம் கடினமானவைகளென்றும் புண்ணியாத்மாக்கள் கூறுகிறார்கள். அம்மார்க்கங்கள் சத்தியம், பொறுமை, உறுதி, ஆசாரம், மன அடக்கம், பரிசுத்தம் என்பவைகளாம். இவைகள் மாயையை ஒழித்து அஞ்ஞானத்தை நாசம் செய்வனவாம்.

அரசன்:-முனிவரே! மௌன விரதம் என்கிறார்களே அதன் உண்மை யாது? பேசாமலிருத்தல், தியானம் செயல் என்னும் இரண்டு மௌன விரதங்களில் உமக்குச் சம்மதமானது எது? இந்த மௌன விரதத்தால் சார்தத்தையும் மோட்சத்தையும் அடையலாமா? அந்த விரதத்தை எப்படி அனுஷ்டிக்கிறது?

முனிவர்:-அரசனே! பிரமம் வேதத்தாலும் பற்றப்படாதது. ஆகையால் அதுவே மௌனமென்று சொல்லப்படுகிறது. அதிலிருந்து வைதிக சப்தமான பிரணவமும் சாதாரண ஒலியும் உண்டாயின. அந்தப் பரமாத்மாவே சப்தமாகத் தோன்றுகிறது. என்றதனால் (பிரணவ தியானத்துடன் பிரம தியானத்திலிருக்கிற மௌனவிரதமே சிறந்ததென்பது).

அரசன்:-முனிவரே! ரிக்கு, யஜுஸ், சாமம், என்னும் வேதங்களை உணர்ந்தவன் பாவஞ்செய்தால் அவன் பாவியாகமாட்டானா?

முனிவர்:-அரசனே! மன அடக்க மில்லாதவன் ரிக்கு, யஜுஸ், சாம வேதங்களை ஓதினதினாலே பாவத்தினின்றும் விடுதலை யாகமாட்டான். வஞ்சனையால் ஜீவிக்கிற வஞ்சகனை (பிரமதியான மில்லாதவனை) வேதங்கள் காப்பாற்றமாட்டா. புதிதாய்ச் சிறகுமுளைத்த பறவைக்குஞ்சுகள் தங்கள் கூண்டுகளை விட்டுப்போவதுபோல அந்திய காலத்தில் வேதங்கள் அவனைக் கைவிட்டுப் போகின்றன.

அரசன்:-புலன்களை வென்றவரே! வேதமானது தர்ம சகாயமில்லாமல் பாவங்களைப் போக்காதாயின், வேதங்கள் எப்போதும் அழிக்கும் என்று பிராமணர்கள் சொல்கிறார்களே, ஏன் அப்படிச் சொல்கிறார்கள்?

முனிவர்:-அரசனே! விசுவம் எல்லாம் (பிரபஞ்சமெல்லாம்) பரமாத்மாவினிடத்திலிருந்து குணங்களுடனும் வேறு இலக்கணங்களுடனும் தோன்றின. வேதங்களும் இப்படியே சொல்கின்றன. பிரபஞ்சமும் பரமாத்மாவும் வேறுபட்ட பொருள்களென்றும் வேறு படாதவைகளென்றும் கூறுகின்றன. பரமாத்மாவை அடைகிறதற்காகவே தவசும் யாகமும் விதிக்கப்பட்டன. கற்றறிந்தவன் இவ்விரண்டினாலும் புண்ணியத்தைச் சம்பாதிக்கிறான். புண்ணியத்தால் பாவம் அழியும். ஞானத்தால் பிரமாவை அடைகிறான். அறிவுள்ள மனிதன் ஞானத்தின் உதவியால் பரமாத்மாவை அடைகிறான்.



தர்மார்த்தகாம மோட்சங்களை இச்சிக்கிறவன் இவ்வுலகிற் செய்தவைகளை மறு உலகத்துக்குத் தன்னுடன் கொண்டுபோய் அனுபவிக்கிறான். போகானுபவ முடிவில் மறுபடியும் கர்ம உலகத்துக்கு வருகிறான். இவ்வுலகத்தில் செய்த தவப்பலனை மறு உலகத்தில்தான் அனுபவிக்க வேண்டும். ஆத்ம அடக்கமுள்ளவர்கள் இவ்வுலகத்திலும் தங்கள் தவப்பயனை அடைகிறார்கள். இதனால் வேதம்கூறிய கர்மத்தைத் தவறுபடாமல் செய்தால் அவ்விரண்டும் சேர்ந்து முத்தியை அளிக்கும். வேதத்தைவிட்டுக் கர்மம் செய்தலும் கர்மத்தைவிட்டு வேதமோதுதலும் பயன்தரா. ஆதலால் அந்தணர் மயங்கிச் சொல்லவில்லை யென்பது விளக்கப்பட்டது.

அரசன்:-முனிவரே! ஒரே தவம் சிலசமையம் சித்தி தருவதும் சில சமையம் சித்தி தாராமலிருப்பது மேன்? நான் அறிந்து கொள்ளும்படி இதைச் சொல்லவேண்டும்.

முனிவர்:-அரசனே! தவமானது ஆசை முதலியவற்றால் குற்றப்படாமலிருக்கும்போது மோட்சத்தைத் தருகிறது. மயக்கத்தாலும் உண்மையான பக்தி யில்லாமையாலும் மோட்ச சித்தியைத் தருவதில்லையென்று கூறப்படுகிறது. கற்றுணர்ந்தவர்கள் தவசினாலே பிரமத்தை யறிந்து நித்தியத்துவத்தைப் பெறுகிறார்கள். (பக்தியுடன்கூடின தவமே முத்திதரும் என்பதாம்.)

அரசன்:-முனிவரே! உம்மால் தவத்தைத் தெரிந்துகொண்டேன். அதனால் நித்தியத்துவத்தைப் பெறும் இரகசியத்தையுந் தெரிந்து கொண்டேன். குற்றங்களால் மாசடைந்த தவம் எது? அதை விவரித்துச் சொல்ல வேண்டும்.

முனிவர்:-அரசனே! கோபம் முதலிய பனிரண்டு குற்றங்களும் தன் பெருமையைப் பேசுதல் முதலிய பதின்தீமைகளும் தவத்தைக் கெடுக்கிற குற்றங்களாம். கோபம், மதம், ஆசை, அறியாமை, திருப்தியில்லாமை, கொடுமை, பொறாமை, அகந்தை, துக்கம், சிற்றின்பப்பிரியம், பகை, பிறர் நிந்தைகூறல் இப்பன்னிரண்டும் மனிதருடைய சாதாரண குற்றங்களாம். இப்பன்னிரண்டும் எப்போதும் ஒழித்துவிடத் தக்கன. அரசனே! இவற்றுள் ஒவ்வொன்றே மனிதரை அழிக்கக்கூடியது. வேடன் மானைப்பிடிக்கச் சமயம் பார்த்துக்கொண் டிருப்பதுபோல இவற்றுள் ஒவ்வொன்றும் மனிதனைப்பற்றச் சமையம் பார்த்துக்கொண் டிருக்கிறது. தன் பெருமையைப் பேசிக்கொள்ளுதல், பரதாரத்தை விரும்புதல், அதிகக் கருவத்தினால் பிறரை யிகழ்தல், கோபம், சஞ்சல புத்தி, ஆதரிக்கத்தக்கவர்களை ஆதரியாமை, இந்த ஆறும் கெட்டவர்களால் எப்போதும் அனுசரிக்கப்படுகின்றன. இவ்வாறும் இகபரமிரண்டிலும் அபாயத்தைச் செய்வனவாம். காமமே பிரதான இன்பமென்று கருதுவதும், மிகுந்த கருவமும், தானம் கொடுத்தபின் துக்கிப்பதும், பணத்தைச் செலவழியாமலிருக்கிற லோபத்தனமும், கொடிய வரி விதித்துப் பிரஜைகளைத் துன்பப்படுத்துவதும், பிறர் நிந்தையால் மகிழ்வதும், தன் சொந்த மனைவியைப் பகைப்பதும் ஆகிய இவ்வேழும் துஷ்டர்கள் செய்கைகளாம். இங்ஙனம் கூறிய இருபத்தைந்தும் தவசுக்குப் பெரிய குற்றங்களாம். தர்மம், சத்தியம், தன்னடக்கம், தவம், பிறருடைய வாழ்வில் மகிழ்தல், மரியாதை, பொறுமை பிறரை நேசித்தல், யாகம், தானம், உற்சாகம், வேத உணர்ச்சி இப்பனிரண்டும் மனிதர்களால் எப்போதும் அனுசரிக்கத்தக்கவைகளாம். இந்தப் பனிரண்டையும் ஆள்கிறவன் பூவுலகம் முழுவதையும் ஆள்வான். இவற்றுள் மூன்று, அல்லது இரண்டு, அல்லது ஒன்

றையாவது உடையவன் சொர்க்கத்தை அடைகிறவனாக மதிக்கப்படுகிறான். தன்னடக்கம், துறவு, ஆத்மஞானம் இவைகளால் மோட்சமுண்டாகும். இவைகளிலிருந்து சத்தியம் விருத்தியடைகிறதென்று கற்றுணர்ந்தவர்கள் கூறுகின்றார்கள். ஆத்மஞானம் பதினெட்டுக் குணங்களால் உண்டாக்கப்படுகின்றன. அவை, விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்தல், பொய் சொல்லாமை, பொறாமையின்மை, காம வெறுப்பு, தனத்தை விரும்பாமை, இன்பத்தை யிச்சியாமை, சினமின்மை, துக்கமின்மை, பொருளாசையின்மை, எரிச்சல் கொள்ளாமை, வஞ்சனை செய்யாமை, பிறர் துக்கத்தில் மகிழாமை, பகை கொள்ளாமை, பிறரை இமிசியாமை, நற்செய்கைளில் மகிழ்ச்சி, தன் கடமையை மறவாமை, கோள் சொல்லாமை, அகங்காரமின்மை இந்தப் பதினெட்டும் உள்ளவனே தன்னடக்கமுள்ளவனென்று கற்றோர் கூறுகின்றார்கள் இவை அகந்தையை ஒழிக்கும். பழக்கத்தினால் இவற்றை அடைகிறவன் எல்லாவற்றையும் ஜயித்தவனாவான்.

துறவு ஆறு வகை. இந்த ஆறும் புகழ்ச்சியை உண்டாக்குவனவாம். அவையாவன:-வாழ்வு வந்தபோது சந்தோஷப்படாம லிருப்பது, யாகம், கர்மம், ஜபம் இவற்றை விடாமை, ஆசையில்லாமை, (இந்த மூன்றுவகை யுடையவன் எல்லாரினும் மேலானவனென்று கருதப்படுகிறான்.) பிறர் செல்வ முதலியவற்றால் துக்கப்படாமை, அல்லது மனதுக்கு வெறுப்பானது வந்தபோது வருந்தாமை, புத்திரன் மனைவி முதலிய பிரியமுள்ளவரிடத்திலும் வருந்திக் கேளாமை, யாசகர்களுக்குக் கொடுப்பதும் புண்ணியத்தைத் தரும் தானங்களைச் செய்வதுமாம்: இவ்வாறு குணங்களையும் உடையவன் சிரேஷ்டனாவான். இவைகளால் ஆத்மஞான முண்டாகும். கடைசியிற் கூறிய துறவு எட்டுக் குணங்களைத் தன்னுள் அடக்கிக்கொண் டிருக்கிறது. அவை சத்தியம், தியானம், சமாதானம், அனுமதிக்கும் சக்தி, உலக இன்ப வெறுப்பு, பிறர் பொருளைக் கவராமை, பிரமசரிய அனுஷ்டானம், தானம் வாங்கா திருத்தல்.

மதமும் தோஷங்களை யுடையன. இவைகளையும் ஒழித்துவிட வேண்டும். துறவையும் ஆத்ம ஞானத்தையும் உமக்குச் சொல்லிவிட்டேன். ஆத்ம ஞானம் எட்டுத் தர்மங்களை யுடையது; இல்லாவிட்டால் எட்டுக் குற்றங்களை யுடையதாம். அந்தக் குற்றங்களை ஒழித்துவிட வேண்டும். புலன்களையும், மனதையும், இறப்பு எதிர்வுகளையும் ஒழித்தவன் சுகம் அடைவான். அரசனே! உமது மனம் சத்தியத்தில் விசுவாசமுள்ளதா யிருக்கவேண்டும். உலகமெல்லாம் சத்தியத்திலேயே நிலை பெறுகின்றன. ஆத்ம அடக்கம், துறவு, ஆத்மஞானம் இவைகள் சத்தியத்தையே பிரதான இலக்கணங்களாக உடையன. இவ்வகைப்பட்ட குற்றங்களை விலக்கியே ஒருவன் தவம் புரியவேண்டும். புண்ணியவான்களுக்குச் சத்தியத்தையே முக்கிய தர்மமாகவும் விரதமாகவும் தெய்வம் விதித்திருக்கின்றது. இந்தக் குற்றங்களில்லாததும் இந்தக் குணங்களை யுடையதுமான தவம் பெருவாழ்வுக்கு மூலமாகின்றது. நீர் கேட்ட பாபஹரமான சிறந்த பொருளையும் ஜனன மரண மூப்புகளினின்று விடுபடுவதையும் சுருக்கமாய் உமக்குச் சொல்லிவிட்டேன். இன்னம் நீர் எதைக் கேட்க விரும்புகிறீர்? அதைக் கேட்டால் அதையும் சொல்கிறேன் என்று முனிவர் கூற, அரசன் கேட்கிறான்.

(தொடரும்) சிவானந்தசாகரயோகீஸ்வரர்.




## வேதாந்த சார சங்கிரக வசனம்.

(403-ம் பக்கத் தொடர்ச்சி)

**சத்துவகுணப்** பிரதானமான (மாயையினிடத்து) பிரதிபிம்பித்த பிரம்ம சைதன்யமும், அந்த மாயைக்கு அதிஷ்டானமான பரப்பிரம்மமும், மாயையும் சேர்ந்து ஈசுவரன் என்னப்படும். இந்த ஈசுவரன் சர்வஞ்ஞத்துவம் (எல்லாவற்றையும் தடையின்றி அறியும் அறிவு) முதலான குணங்களை யுடையவனாயும், சிருஷ்டி திதி சங்காரம் என்னும் தொழில்களுக்குக் காரணனாயும், அவ்வியாகிருதனென்னும் பெயருடையவனாயு மிருக்கிறான். மேலும், இந்த ஈசுவரன் எல்லாவித சக்திகளோடும் குணங்களோடும் கூடினவனும், சகல ஞானங்களையும் பிரகாசிக்கச் செய்கிறவனும், சுவதந்திரனும், சத்திய சங்கற்பனும், சத்தியகாம (கோரிக்கைகளை யுடையவ)னு மாவன். சர்வஞ்ஞத்துவமும் சர்வேசுவரத்துவமும் ஆதி காரணத்துவமும் உடையவனா யிருத்தலின் மகாவிஷ்ணு என்னும் வேறு பெயரையு முடையவன். மிக்க சத்தி வாய்ந்தவன். அதி சிரேஷ்டன். இவ் வீசுவரனுக்குச் சத்துவ குணத்தைப் பிரதானமாக வுடையதும் எல்லா சீவர்களின் சமஷ்டி வடிவமானதுமான காரண சரீரமே சரீரமாம் என்று பெரியோர் கூறுவர்.

எல்லா சீவர்களுடைய சமஷ்டி ரூபகாரண சரீரமே பரமேசுவரனுக்குச் சரீரமென்று கூறப்பட்டது. அக்காரண சரீரம் மிக்க ஆனந்தமுடையதும் ஆனந்தத்திற்குச் சாதகமானதுமாக விருத்தலின், ஆனந்தமயகோசம் என்று செல்லப்படும். (சீவர்களின் அன்னமயம் முதலாகவுள்ள பஞ்சகோசங்களும் பின்னால் கூறப்படும். அவற்றுள் கூறப்பட்டுள்ள ஆனந்தமயகோசமே சீவர்களுக்குக் காரண சரீரமாம். இந்தக்காரண சரீரங்களின் சமஷ்டியே (கூட்டம்) ஈசுவரனுக்குச் சரீரம் என்றறிய வேண்டும்).

நூல்களில் தினப்பிரளயமென்று ஒரு பிரளயம் சொல்லப்பட் டிருக்கிறது. அது நித்திராவஸ்தை. அந்த நித்திராவஸ்தை, சகலமும் லயமடைவதற்குக் காரணமா யிருத்தலின் அதுவே ஈசுவரனுக்கு ஸ்தானமென்பர். ("மாயையி னிடத்திலுள்ள சேதனத்தின் சாயை (ஆபாஸம்), மாயையின் அதிஷ்டான சேதனம் என்னும் இரண்டனையும் ஈசுவரன் என்பர். அந்த ஈசுவரன் மேகாகாசத்துக்குச் சமானமாவர்.

1. அந்த ஈசுவரன் அந்தரியாமி யாவர். ஏனெனின், எல்லோருள்ளிலுமிருந்து பிரேரணை செய்கிறார்.

2. அவர் சதாமுக்தர். ஏனெனின், அவருக்குத் தமது ஸ்வரூபத்தில்

ஆவரணம் (மறைப்பு) இல்லை. ஆதலால் அவருக்கு ஜன்ம மரணாதி பந்தம் தோற்றுகிறதில்லை. இக்காரணத்தால் அவர் நித்திய முக்தராவர்.

3. ஈசுவரன் சர்வஞ்ஞர்; சகல பதார்த்தங்களையும் அறிபவரா யிருக்கிறார். ஏனெனில் மாயையில் சுத்த சத்துவ குணமுண்டு. தமோகுண ரஜோ குணங்களால் அமிழ்த்தப்பட்ட தாகாது. ரஜோதமோ குணங்களைத் தான் அமிழ்த்தும். சத்துவகுணம் எதுவோ, அது சுத்த சத்துவகுண மெனப்படும்'' என்று விசாரசாகரமும்,

"அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரம்மத்தினிடத்தில் கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவதுபோல மூலப்பிரகிருதி (பிர=சத்துவகுணம், கிரு= ரஜோகுணம், தி=தமோகுணம்: எனவே முக்குணங்களுடன் கூடியமாயை பிரகிருதி யெனப்படும். இது சகலத்திற்கும் மூலகாரணமா யிருத்தலால் மூலப்பிரகிருதி யென்னும் பெயருடையது.) என்னும் ஒரு சக்தியுண்டாயிற்று. அந்த மூலப்பிரகிருதியும் விகிருதகுணமான மூன்று குணங்களுடன் கூடி யிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணம் மாயை என்றும் சர்வஞ்ஞ உபாதியென்றும் ஈசுவர காரண சரீர மென்றும் சொல்லப்படும். இந்த மாயையினிடத்து நிர்மலஜல பிரதி பிம்பம்போல பிரம்மம் சுலக்ஷணமாய் பிரதி பிம்பிக்கும். இந்த பிரதிபிம்ப சைதன்யம் சர்வஞ்ஞனை ஈசுவர னென்று சொல்லப்படும்'' என்று நாநாஜீவவாதக்கட்டளையும் கூறுவதிங் கறிதற்பாலதாம்.)

(முன் சஞ்சிகையிற் கூறியபடி) அஞ்ஞானம் வியஷ்டி பாவத்தால் அநேமாக பேதிக்கப்படுகின்றது. சத்துவாதி குணங்களினால் விலக்ஷண முடைய அஞ்ஞானத்தின் விருத்திகள் அநேகம். எப்படி சமஷ்டி பாவத்தால் ஒன்றாகவுள்ள வனத்திற்கு வியஷ்டி பாவத்தால் விருக்ஷங்களென்று அநேகத்துவமுள்ளதோ, அப்படியே அஞ்ஞானத்திற்கு வியஷ்டி பாவத்தால் அநேகத்துவ முண்டு.

சீடன்:—சுவாமி! ஒரு வஸ்துவிற்கு சமஷ்டி வியஷ்டி என்னும் இரண்டு வியவகாரங்கள் எப்படிச் சம்பவிக்கும்?

குரு:—ஞான புத்திரா! பத்திர (இலை) புஷ்பாதி தர்மங்கள் தனித்தனியாக ஒவ்வொரு விருக்ஷத்தினிடத்து முண்டு. விருக்ஷங்களின் கூட்டமான வனத்திலு முண்டு. அதனால் சமஷ்டி பாவத்தால் வன மென்றும் வியஷ்டி பாவத்தால் மரம் என்றும் வழங்குவது பிரசித்தம். இப்படியே இந்த அஞ்ஞானத்திற்கும் சமஷ்டி பாவத்தினாலும் வியஷ்டி பாவத்தினாலும் வியவகார முண்டாதல் யுக்தமேயாகும். அஞ்ஞானத்தின் சமஷ்டி வடிவம் சுத்த சத்துவம். அதனுடன் கூடின பிரஹ்ம சைதன்யம் ஈசுவரன். இனி அஞ்ஞானத்தின் வியஷ்டி வடிவம் ரஜோதமோ குணங்களினால் மலினமான சத்துவம். இதனால் ஈசுவர உபாதியினும் தாழ்ந்ததாகும். (ஈசுவர உபாதி சுத்த சத்துவமான மாயை. உபாதி= தானிருக்குமிடத்தி லிருந்துகொண்டே வேறொரு வஸ்துவைக் காட்டிக்

*



கொண்டு தானதனுடன் கலவாமல் அன்னியமா யிருப்பது). இத்தகைய அஞ்ஞானத்தின் வியஷ்டி ரூபமான மலின சத்துவத்துடன் கூடின பிரஹ்ம சைதன்யமே பிரத்தியகாத்மா வெனப்படும்.

(இங்கு இது அறியத்தக்கது:—''மாயை, அஞ்ஞானம், அவித்தை என்பன ஒரே வஸ்துவுக்குப் பெயராயினும், சுத்த சத்துவத்தின் பிரதானம் மாயை யென்றும், மலின சத்துவகுணத்தின் பிரதானம் அஞ்ஞானம் என்றும் அவித்தை யென்றும் பெயர் பெறும். ஓர் பிராஹ்மண ஜாதியுடைய ராஜா வானவன் க்ஷத்திரிய சூத்திர ஜாதியுடைய இரண்டு மந்திரிகளால் தான் அமிழ்த்தப்படாது, அவ்விருவரையும்தான் அமிழ்த்தி யிருப்பன். அங்ஙனமே ரஜோதமோ குணங்களால் அமிழ்த்தப்படாது, அவ்விரண்டையும் தான் அமிழ்த்தும் சத்துவ குணம் எதுவோ, அது சுத்த சத்துவ குணமாம். சூத்திர ஜாதியுடைய இரண்டு ராஜ புத்திரர்களால் பிராஹ்மண ஜாதியுடைய ஒரு மந்திரி அமிழ்த்தப்படுவதுபோல ரஜோகுண தமோகுணங்களால் அமிழ்த்தப்படும் சத்துவ குணம் எதுவோ அது மலின சத்துவகுண மெனப்படும்'' விசாரசாகரம்.)

### ஜீவசொரூபம்.

சீடனே! இனி ஜீவசொரூபத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. முன் சொன்ன அஞ்ஞானத்தின் வியஷ்டி வடிவமான மலின சத்துவத்தினிடத்தில் பிரதிபிம்பித்த பரமாத்மசைதன்யம் பிரத்தியகாத்மா வெனப்படும். இந்தப் பிரத்தியகாத்மாவே தனக்கு உபாதியான அஞ்ஞானத்தினுடைய * தாதாத்மியத்தாலும் (சம்பந்தத்தாலும்) குணங்களினாலும் கிஞ்சிஞ்ஞத்வம் (சிற்றறிவு) முதலிய தன்மைகளுடன் கூடினதாய் ஜீவன் என்னப்படும். ஆன்மாவிற்கு அகங்காரத்தினாலேயே ஜீவத்தன்மை யுண்டாயிற்று.

ஆகையால் அவ்வித அகங்காரத்திற்குக் காரணமானதாகலின் வியஷ்டியாகிய காரணசரீரம் அந்த ஜீவனுக்குச் சரீரமாகின்றது. இந்தச் சரீரத்தினிடத்து அபிமானமுள்ளவன் பிராஞ்ஞனெனப்படுவான். பிராஞ்ஞன் என்பதற்கு ஞானவானென்பது பொருள். ஞானமென்பது பொருளை யறிதல். இதுவே வஸ்துக்களை விளங்கச்செய்வது ஆகலின் வஸ்துக்களைப் பிர்காசிக்கச்செய்யும் சக்தியெனக் கூறப்படும். ஆன்மாவானது நித்திராவஸ்தையில் காரணசரீரத்தை யபிமானித்திருக்கும். அப்பொழுது, 'நான் சுகமாகத் தூங்கினேன். வேறொன்றையும் அறியேன்' என்னும் அநுபவமிருக்கிறது. அறியாதிருப்பதே அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்தை விளக்குகின்றமையின் காரண சரீராபிமானிக்கு பிராஞ்ஞத்தன்மை யுண்டாயிற்று. இந்த பிராஞ்ஞனுடைய உபாதியாகிய காரணசரீரம் வியஷ்டிரூபமாய் ரஜோகுண தமோ குணங்களால் மிகவும் நிகிருஷ்டமானதாகலின், இதனால் தன் அஞ்ஞானமொன்றைத் தவிர வேறு அஞ்ஞானங்களைப் பிரகாசிக்கச் செய்வதற்கு இது சக்தியுடைய தாகாது.

* தாதாத்மிய சம்பந்தம்=கற்பிதபேதத்தோடு வாஸ்தவ அபேதமாகிய சம்பந்தம்.

ஆன்மசொரூபத்தை மறைப்பதாயும் மிக்க ஆனந்தமுடையதாயு மிருத்தலின், காரண சரீரம் ஆனந்தமயகோச மென்னப்படும். (கோசம்-கத்தி முதலியவற்றின் உறை. இக்குக்காரணசரீரம் அஞ்ஞானவடிவினதாகலின், ஆன்மசொரூபத்தை மறைக்கும் கோசம் (உறை) என்றும், விசேஷ ஆனந்தமுடையதாகலின் ஆனந்த மயமென்றும் கூறப்படுகிறது.) இந்தக் காரண சரீரம் நித்திராவஸ்தையில் அறியப்படுகின்றது. இதில் ஆனந்த மிருக்கிறது. இதற்குப் பிரமாணம் யாதெனின்:—மனிதர் தூங்கியெழுந்து, 'நான் சுகமாகத் தூங்கினேன்; வேறொன்றையும் அறியேன்' என்கின்றனர். ஆகையால் அனுபவத்தினாலேயே நித்திராவத்தையில் ஆனந்த முளதென்று தெரிகிறது.

ஞானகுமாரா! இதுகாறும் கூறியவற்றால் என்ன ஏற்படுகிறது எனின்: முற்கூறிய தோப்புமர (சமஷ்டி வியஷ்டி) திருஷ்டாந்தத்தால் வியஷ்டியாகிய ஜீவோபாதிக்கும், சமஷ்டியாகிய ஈசுவரோபாதிக்கும் ஒரேசாதித் தன்மையால் பேதமில்லை. அப்படியே ஈசுவரனுக்கும் பிராஞ்ஞனுக்கும் பேதமில்லையென்று அறியக்கடவாய். கடலின் அலைகள் ஒன்றேயாகலின் அவ்வலைகளில் பிரதிபிம்பிக்கும் சூரிய பிரதிபிம்பங்களுக்குள் பேதமில்லாததுபோல, ஜீவேசுவரர்களின் உபாதிகளுக்கும் பேதமில்லையாகையால் அவற்றோடு கூடியுள்ள ஜீவேசுவரர்களுக்கும் பேதமின்றாம்.

வியஷ்டி வடிவமாகிய அவித்தைக்கும் சமஷ்டி வடிவமாகிய மாயைக்கும் அவற்றில் பிரதிபலித்த ஜீவேசுவா பிரதி பிம்பங்களுக்கும் ஆதாரம் எது? சுத்த சைதன்ய மல்லவா? அந்த சுத்த சைதன்யம் துரிய மென்று கூறப்படுகின்றது.

இந்த சுத்த சைதன்யமே, மாயை அவித்தை வடிவ உபாதிகளுடனும் அவற்றின் குணங்களுடனும் கூடினதாய் மகா வாக்கியத்தினுடைய வாச்சியார்த்தமாகிறது. (வாச்சியார்த்தம்=பதத்தின் பொருள்.) உபாதிகளுடனும் அவற்றின் குணங்களுடனும் கூடாமல் லக்ஷியார்த்தமாகிறது. (தத்துவமசி-என்பது மகாவாக்கியம். இதில் 'தத்' என்னும் பதத்திற்கு சர்வஞ்ஞத்வ விசிஷ்ட (விசேஷமாகவுடைய)னாகிய ஈசுவரன் என்றும், 'துவம்' என்னும் பதத்திற்கு கிஞ்சிஞ்ஞத்துவ விசிஷ்டனாகிய ஜீவன் என்றும் பொருளாம். இவ்வாறு 'தத்துவம்' என்னும் பதங்களுக்கு, மாயை அவித்தை வடிவங்களாகிய உபாதிகளுடனும், அவற்றின் குணங்களாகிய சர்வஞ்ஞத்துவ கிஞ்சிஞ்ஞத்துவாதிகளுடனும் கூடிய ஈசுவர சீவர்கள் வாச்சியார்த்தம். பிறகு பாகத்தியாக லக்ஷணையால் (இது பின்னர் விளக்கப்படும்) அவர்களின் உபாதிகளையும், அவற்றின் லக்ஷணங்களாகிய சர்வஞ்ஞத்துவ கிஞ்சிஞ்ஞத்துவாதிகளையும் விட்டு, மிகுதியாகவுள்ள சுத்த சைதன்யங்களுக்கு 'அசி' பதத்தால் அபேத சம்பந்தம் கூறப்படுகின்றது. இவ்வாறு உபாதி விசிஷ்டமான ஆன்ம தத்துவம் மகாவாக்கியத்திற்கு வாச்சியார்த்த மெனவும், நிருபாதிக (உபாதியற்ற) மான சுத்த சைதன்யம் லக்ஷியார்த்த மெனவும் நிரூபிக்கப்பட்டது என்றறியக்கடவாய்.

(தொடரும்.) பு. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

உ

சிவமயம்




## வாதவூரடிகள் ஞானோபதேசம் பெற்ற வரலாறு.

### விநாயகர் காப்பு.

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

### சோமசுந்தரக் கடவுள்.

1. சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார் தணந்து வேப்பந், தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி, விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி மீனநோக்கின், மடவாலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம். (பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல். 10)

### தடாதகைப்பிராட்டியார்.

2. செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து செங்கோலோச்சி, முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு நந்திகண முனைப்போர் சாய்த்துத், தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித் தன்மகுடஞ் சூட்டிச் செல்வந், தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கமலந் தலைமேல் வைப்பாம். (பரஞ். திருவிளை. 1!.)

### தட்சிணாமூர்த்தி.

3. கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலா, யெல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்வாம். (பா. திருவி. 13.)

### சித்தி விநாயகக் கடவுள்.

4. உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத், தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக், கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும், வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைக டீர்ப்பாம். (பரஞ். திருவிளை. 14.)

### சுப்பிரமணியக் கடவுள்.

5. கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங் கலங்கக் கார்வந், துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ரப்பொருப்பும் பிளப்பமறை யுணர்ந்தோ ராற்று, மறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி னழலு மூள, மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள் வணக்கஞ் செய்வாம். (பரஞ். திருவிளை. 15.)

### சரசுவதி.

6. பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப் பத்திபடப் பரப்பித் திக்கு, முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெறமுக்கண் மூர்த்தி தாளிற், றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல் சூட்டவரிச் சுரும்புந் தேனுங், கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம். (பரஞ். திருவிளை. 16.)

### திருநந்திதேவர்.

7. வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற் றாக்கி
யந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பை யாக்கு
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்.
(பரஞ். திருவிளை. 17.)

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

8. கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவு நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்.
(பரஞ். திருவிளை. 18.)

### திருநாவுக்கரசு நாயனார்.

9. அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.
(பரஞ். திருவிளை. 19.)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

10. அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானா
ளிரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம்.
(பரஞ். திருவிளை. 20.)

### திருவாதவூரடிகள்.

11. எழுதரு மறைக டேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
யழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்.
(பரஞ். திருவிளை. 21.)

### சண்டேசுரநாயனார் முதலிய திருத்தொண்டர்.

12. தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து நிருத்தரிரு தாளைச் சேர்ந்த, மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாது வாய்மெய், சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச் சிவானுபவச் செல்வ ராகிப், பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர் தாள்பரவிப் பணிதல் செய்வாம். (பரஞ். திருவிளை. 22.)



### சந்தான குரவர்.

13. ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டா ரிணைத்தாள் போற்றி, நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த வருணந்தி நற்றாள் போற்றி, நீராண்ட கடந்தைநகர் மறைஞான சம்பந்தர் நிழற்றாள் போற்றி, சீராண்ட தில்லைநக ருமாபதியார் செம்பதுமத் திருத்தாள் போற்றி.

### தருமை, அருணந்திதேசிகர்.

14. அருணந் தாதென்று மாணவத் தடையினா லயர்வுற்றுக் கிடந் தேனைப், பொருணந் தாவகைப் பலமொழி யின்றியோர் புனிதவாய் மொழியாலே, தருணந் தானிது தத்துவங் கடந்துநீ தனையடை வாயெனவே, அருணந் தாதரு ளருணந்தி தேசிக னரவிந்தத் தாட்டுணையே.

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையாநந்தம்.

## சில சுகாதார மொழிகள்.

(420-ம் பக்கத் தொடர்ச்சி.)

32. வைகறை யெழுதல் கைகண்ட முறை.
33. வெந்தபால் நீரையே விரும்பிப் பருகு.
34. சோடா புட்டியை நாட வேண்டாம்.
35. அபக்குவ உணவை அருந்த வேண்டாம்.
36. பழுக்காப் பழங்கள் பல நோய் தந்திடும்.
37. பழைய காய்கறி பதார்த்த முண்ணேல்.
38. இலைக்கறி தயிரை இரவினி லுண்ணேல்.
39. திடம்தரு முணவே தின்ன வேண்டும்.
40. பருப்புநெய் வகைகள் பலந்தரு முணவாம்.
41. அரைவயிற் றுணவே இரவினில் சாலும்.
42. எச்சி லுண்ண இச்சை கொள்ளேல்.
43. எண்மணி நேரம் இரவினி லுறங்கு.
44. நாடகம் சினிமாக் காட்சியை நாடேல்.
45. ஒருநாள் விழிப்பு பலநாள் நோய்தரும்.
46. வாய்வழி உயிரல் நோய்தரு மார்க்கம்.
47. முகமூடித் தூங்கும் முறைசரி யன்று.
48. சாளரம் மூடிச் சயனித்தல் தீது.
49. சாப்பிட்ட வுடனே சயனிக்க வேண்டாம்.
50. இரைப்பண் டங்களை இறைத்துவைக் காதே.
51. ஈ கொசு நோய்வழி என்பதை மறவேல்.
52. எலிகளைத் தொலைக்க எத்தனம் பண்ணு.
53. அம்மைகுத் தவசிய மாமென வறிக.
54. காலத்துக் கேற்ற உடையைக் கைக்கொள்.
55. பட்டினி கிடத்தல் பரம ஔஷதம்.
56. செருப்பின்றி வெளியே செல்லுதல் தவறு.
57. அழுக்கே நோய்க்கிட மாமென வறிக.
58. உலாவப் போதல் உத்தம ஔஷதம்.
59. அத்தனடியை நித்தமும் போற்று.
60. ஆரோக்கியமே அஷ்ட ஐஸ்வரியம்.

A. சுருளியாண்டி கௌட., ஆசிரியன், கோம்பை.






## ஸ்ரீ. நடாதூர் அம்மாள் வரததேசிகர் வைபவம்.

(413-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒருகால் ஸ்ரீ காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமானுக்கு அதிக சூடுள்ள பாலே, தளிகை ஸமர்ப்பிக்கக் கொண்டுபோகக்கண்ட ஸ்ரீ வரதகுரு நம் பெருமாளுக்குக் கொதிக்கிற பாலே அமுது செய்துவைக்கக் கூடுமோவென்று மிகவும் கசிந்த மனதுடையவராய், அதை ஆற்றி அமிர்தத்திற் கொப்பானதாக அன்புடன் கண்டருளப்பண்ணினர். அங்ஙனம் செய்யவே, பெருமாளும் இவ்வரத குருவைத் தமது பரிபூரண கிருபாகடாக்ஷாம்ருத தாரையாலபிஷேகம் செய்து வைத்துத் தன்பால் இவருக்கு இன்றியமையாத அன்புண்டா யிருத்தலேநோக்கி ஆச்சரியமுற்று, "தாயன்றோ தமது குழந்தைக்கு இவ்விதம் ஆற்றி ஸுகோஷ்ணமாக அருமைபாராட்டிப் பாலூட்டி அதனே வளர்ப்பது; ஆகவே நீர் என் அம்மாளோ," என்று புன் முறுவல் பூத்த திருமுக கமலத்துடன் அதிவாத்ஸல்யத்தோடு அழைத்தனர். அதேகாரணமாக இந்த வரதகுருவுக்கு, "அம்மாள்" என்று திருநாமம் ஜகத்பிரஸித்தமாய் வழங்கலாயிற்று. இவ்விஷயத்தை முன்னோர்கள்,

> க்ஷீரம்யேநஸமர்ப்பிதம் மதுரிமஸ்பாரம் நிபீயாதராத் நீரம்மஜ்ஜநநீதி
> அகர்ஜிகருணுஸாரம் முஹு: வர்ஷதா ।
> ஸ்ரீரங்த்ரா கரிசைலச்ருங்க மயதோதாரம் மஹாம்போமுசா நீரந்த்ரம்
> ஸுகமாதனோதுவசஸாம்தூரம் ஸவாத்ஸ்யோ குரு:||

என்ற இந்த மங்கள ச்லோகத்தால் அனுஸந்தித்தார்கள்.

இவ்வித மஹிமைபொருந்திய ஸ்ரீவாத்ஸ்ய நடாதூர் அம்மாள் வரததேசிகர் விளங்கிவருகையில் தன் மாமாவான அப்புள்ளாருடன் ஸ்ரீநிவாஸனுடைய திருமணி யவதாரரும், ஐந்துவயதுள்ளவருமான வேங்கடநாதாசார் என்கிற தூப்புல்பிள்ளே, அம்மாள் வரதகுருவின் காலக்ஷேப கோஷ்டியை அடைந்து தெண்டன் ஸமர்ப்பித்து நின்று, தன் தேஜோ விசேஷத்தால் ஓரானந்தத்தை விளேவித்து ஸ்ரீ அம்மாளுடைய கிருபாகடாக்ஷ நோக்கத்திற்கு விஷயமானர். ஸ்ரீ வரதகுருவும் அப்புள்ளார் மூலமாக இவரது பிறப்பின் வ்ருத்தாந்தத்தை அறிந்து இவர் ஓர் அவதார விசேஷமுள்ளவரென்று எண்ணிப் பிறகு அப்பொழுது நடைபெற்ற வேதாந்த காலக்ஷேபம் நிறுத்திய இடத்தை நிரூபிக்கும்படி சிஷ்யர்களே வினவ, அவர்கள் ஆலோசிக்கையில் வேதாந்த தேசிகர் அடியே னிங்குவரும்பொழுது நடைபெற்று விட்டிருந்த இடம் இதுவென்று கைகுவித்தவண்ணம் விண்ணப்பஞ் செய்தார். அவ்வாறு செய்யவே அம்மாளும் மிகவும் ஆனந்தித்துக் குழந்தையான தூப்புல் குலமணியாம் வேதாந்ததேசிகரை இரண்டு திருக்கைகளாலும் எடுத்தாலிங்கனம் செய்து,

> ப்ரதிஷ்டாபிதவேதாந்த: ப்ரதிக்ஷிப்தபஹிர்மத:।
> பூயாஸ்த்ரைவித்யமான்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம் ||

என்றனுக்ரஹித்தார்.

[இந்த ஐதிஹ்யத்தை யனுசரித்து ஸ்ரீ காஞ்சீபுரம் வரதராஜஸ்வாமி ஸந்நிதி உள்பிராகாரம் மேல்மண்டபத்தில் நடாதூர் அம்மாள், வரதகுரு காலக்ஷேப கோஷ்டியில் தூப்புல் வேதாந்ததேசிகர் உச்சிக்கொண்டைப் பின்னலோடு பாலபர்வத்தினராய் நிற்கிறவடிவழகும், அம்மாள், "ப்ரதிஷ்டாபித வேதாந்த:" என்கிற ச்லோகரூபமாக அனுக்கிரஹிக்கிறவிதமும், அப்புள்ளார் ஸுதர்சனசார் முதலியவர்களிருப்பதும், இந்தக் காலக்ஷேபத்தை ஸ்ரீதேவப்பெருமாள் திருச்செவி சாத்திக்கொண்டு எழுந்தருளியிருக்கிற வைபவமும் விளங்கும் சித்திரகாக்ஷியை இப்பொழுதும் கண்ணுர ஸேவித்துக் கருத்திற் களிகொள்ளலாம்.]

தூப்புல் வேதாந்த தேசிகரை அப்புள்ளாரிடம் ஒப்புவித்துத் தம்மிடம் க்ரஹித்த ஸ்ரீபாஷ்யாதி ஸமஸ்த விசேஷார்த்தங்களேயும் ப்ரஸாதிக்க நியமித்தனர். ஸ்ரீநிகமாந்த தேசிகனும்,

> ஸ்ரீமத்ப்யாம்ஸ்யாதஸா வித்யனுபதிவரதாசார்ய,
> ராமானுஜாப்யாம் ஸம்யக்த்ருஷ்டோ ||

என்றும்,

> 'வரதகுரு க்ருபா'

என்றும்,

இத்யாதி தநியன் ச்லோகங்களால் தனது ப்ராசார்யரான ஸ்ரீ நடாதூர் அம்மாள் வரதகுருவினுடைய மஹிமையைக் கொண்டாடியிருக்கிறர்.

யோபால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம்தயாம்!

என்று நைநாராசாரியர் தன்பிதா விஷயத்தில் அம்மாள் வரதகுருவின் தயாவிஷயத்தைப் பிரகாசம் செய்திருக்கிறர்.

இப்படி வித்தாந்த ப்ரவசனங்களே ஸ்ரீ அம்மாள் வரதகுரு செய்துவருகிறநாளில் சில மதாந்தரஸ்தர் வாதத்திற்கு வர, அப்பொழுது அப்புள்ளார், தமதாசார்யரான அம்மாள் வரதகுருவை தெண்டன் ஸமர்ப்பித்து அடியேனுக் கிந்தக் கைங்கர்யத்தை நியமிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, வரதகுருவும் கிருபைகூர்ந்து வந்தவர்களிடம் வாதம் புரிந்து ஜயிக்கும்படி நியமித்தனர். அப்புள்ளாரும் எளிதில் தர்க்கத்தால் அவர்களே வென்று விளங்கினபடியால் அதுகண்டாநந்தித்த நடாதூரம்மாள் வரததேசிகர் திருவுள்ளமுவந்து தமது ப்ரியசிஷ்யரான ஆத்ரேய ராமானுஜாசார்யரென்னும் அப்புள்ளாருக்கு (வாதிஹம்ஸாம்புதர்) என்ற பிருதுள்ள திருநாமத்தைப் பிரஸாதித் தருளினர்.

மற்றொரு ஸமயம் அநேக சிஷ்யர்கள் புடைசூழத் திருப்பல்லக்கேறி திருமலை யாத்திரையாக எழுந்தருளும் மார்க்கத்தில் லாடர்களென்கிற பரிஜனங்களுடன் அவர்களுக் கரசனான கெண்டவான் என்பவன், இவரது சிஷ்யர்களுக்குத் தன் வித்யா விசேஷத்தால் மயக்க மூண்டுபண்ண அவர்களை ஸ்ரீ பகவத்கடாக்ஷபலத்தால் தெளிவித்து அவ்வரசனையும் வாதத்தால் ஜயித்துப் பிறகு, வணங்கிய அந்த ராஜாவையும், அவனது பரிஜனங்களையும் அனுக்கிரஹித்தருளி அவர்கள் வேண்டினபடி,"லாடாக்ரஹாரம்" என்பதை,அந்தப் பிரதேசத்தில் பிரதிஷ்டைசெய்து வேறு பல அக்ரஹாரங்களையும் லோகோபகாரமாகப் பிரதிஷ்டைசெய்து வைத்தார். பிறகு திருமலை திருச்சுகனூருக்கு ஸமீபத்தில் சிஷ்யர்களுடன் இவர் எழுந்தருளும்பொழுது திருவேங்கடமுடையானான ஸ்ரீநிவாஸன் ஸ்ரீவைஷ்ணவ வடிவெடுத்து இவர் முன் எழுந்தருள அம்மாளும் தேவரீர் யார் என்று விசாரிக்க,நான் திருவேங்கடமுடையான் நியமனப்படி பிரஸாதத்தைத் தேவரீர்களுக்காகக் கொண்டுவந்தேன்; தேவரீர்கள் அமுது செய்த பிறகு விஷயங்களைத் தெரிவிக்கிறேன் என்று கூறிப் பிரசாதத்தைக் கொடுக்க அம்மாள், பெருமாளுக்குத் தளிகை ஸமர்ப்பித்துத் தமது சிஷ்யர்களுடன் அமுது செய்தபிறகு அவர் மறைந்தருளினார். அங்ஙனம் மறையவே இவர் வியப்புற்று ஸ்ரீநிவாஸனே, இப்படி அனுக்கிரஹித்தார் என்று நினைந்துருகி அவ்வெம்பெருமானுடைய திருவடிகளை அதி பக்தியுடன் தியானித்து ஸ்தோத்திரம் செய்தனர்.

பிறகு திருவேங்கட மாமலைமீது வீற்றிருக்கும் ஸ்ரீநிவாஸன், அர்ச்சகாவேசங்கொண்டு, நம்மை ஸேவிக்கவேண்டி நமது அம்மாள் வரததேசிகன் வருவதால் அனந்தகோத்து பரிஜனங்களுடன் ஸகல மரியாதை ஸஹிதம் எதிர்சென்று அழைத்து வாருங்களென்று நியமிக்க, கைங்கர்ய பரர்களும் அந் நியமனப்படி அனைவரும் ஸமஸ்த மர்யாதைகளுடன் அவரை அழைத்து வந்து திருவேங்கட முடையானுடைய மங்களாசாஸநத்தைச் செய்து வைத்தனர்.

இப்படித் திருவேங்கடமுடையானை ஸேவித்து அவரது பிரஸாத விசேஷங்களையும் பெற்று பகவன் நியமனத்தால் காசிக்கெழுந்தருளி, கங்கையில் நீராடி, சரஸ்வதிபீடம் முதலிய ஸ்தானங்களுக்குச் சென்று விஜயசீலராய்க் கீர்த்தியாகிற புதிய கங்கையைப் பாவச்செய்து ஸகல திவ்ய தேசங்களையும் மங்களாசாஸனம் செய்தருளி சோழராஜ ப்ரப்ருதிகளாலும் பூஜிக்கப்பட்டு, அவர்களால், ஸ்வர்ண சிவிகையில் எழுந்தருளுவிக்கப்பெற்று ஸகல விருதுகளுடன் ஸ்ரீகாஞ்சிபுரத்திற்கு எழுந்தருளி வரும்பொழுது ஸ்ரீவரதராஜனும் தேவப்பெருமாளும் ஸந்தோஷத்துடன் ஸகல மர்யாதைகளுடன் அம்மாள் வரததேசிகனை அழைத்துவரச்செய்து பெருந்தேவித்தாயார் ஸமேதராக பேரருளால் ஸேவை ஸாதித்து அனுக்கிரஹித்தனர்.

லக்ஷ்மீ ஸரஸ்வதீ கடாக்ஷ பூர்த்தியுள்ள திருவம்சத்தி லுதித்தவரும், ஸ்ரீராமானுஜ பிரியபாகி கேய பௌத்ர ரத்னமுமான அம்மாள் வரததேசிகர் ப்ரிய புத்திராதி அப்புள்ளார் ஸுதர்சனசார்ப்ரப்ருதிகளுடன் ஸ்ரீவரதராஜனுக்கு மஹோல்லாஸகரமான ஸத்கார்யங்களைச் செய்து ஸ்ரீகச்சிவாய்த்தான் மண்டபத்தில் வேதாந்த காலக்ஷேப உபந்யாஸத்தை பிரஸாதித்துக் கொண்டு திகந்தவிச்ராந்தயசோவி சோபிதராக ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த விஜயத்வத்வஜத்தை ஸ்தாபித்தவராய் வெகுகால மெழுந்தருளி விளங்கினர்.



# மாணவர்பகுதி

(415-ம் பக்கத் தொடர்ச்சி)

## " சான்றோ ரினத்திரு "

"சான்றோர்—(அறிவினாலே) நிறைந்தவர்களுடைய (அறிவு நிறைந்தவர்களுடைய), இனத்து-கூட்டத்திலே, இரு-(நீ எப்போதும்) சேர்ந்திரு," என்பது இதன் பொருள்.

மனிதர்கள் எப்பொழுதும் அறிவுடையவர்களின் கூட்டத்திலேயே சேர்ந்திருக்க வேண்டும்; அவ்வாறு கூடியிருந்தால் அவர்களுக்கு நல்லறிவுண்டாகும்; பலவழிகளிலும் மேன்மை ஏற்படும். அப்படி அறிவுள்ளவரோடு கூடாமல் மூடரோடு கூடுவார்க்கு எந்நாளும் இழிவே உண்டாகும்; அவர்கள் பல துன்பங்களுக்கும் ஆளாவார்கள். இவற்றை அடியில் வரும் கதை விளக்கும்.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நகரத்தில் இரண்டு வாலிபர்கள் நண்பர்களாயிருந்தார்கள். அவர்களில் ஒருவன் பெயர் நாகப்பன்; மற்றொருவன் பெயர் தங்கச்சாமி. நாகப்பன், சிங்கையா என்ற ஒரு மிட்டாதாரிடம் வேலைக்குச் சேர்ந்தான். தங்கச்சாமி சிங்கையாவின் பங்காளியாகிய சுந்தரபாண்டியர் என்பவரிடம் வேலைக்கமர்ந்தான். சிங்கையா முரட்டுச் சுபாவமுடையவர்; உயர்ந்த அறிவில்லாதவர்; இடம்பக்காரர்; கெட்ட காரியங்களை மிகுதியாகச் செய்பவர்; முன்பின் யோசியாமல் எந்தக் காரியத்தையும் மூர்க்கமாகச் செய்யக்கூடியவர்; தாசி வீடுகளுக்குச் செல்லும் வழக்கமுடையவர்; எந்த நேரத்திலும் கையில் துப்பாக்கி வைத்துக்கொண் டிருப்பார். சுந்தர பாண்டியரோ சாந்தகுணமுடையவர்; அறிவிற் சிறந்தவர்; கல்வியில் தேர்ந்தவர்; தமிழ்ப் புலவர்களோடு எப்பொழுதும் கூடியிருப்பவர்; பெரியோர்களுடைய பழக்கமே அவருக்கதிக முண்டு. இவர் இத்தகைய நற்குணங்களையுடையவரா யிருந்தும் இவரிடத்தில் பொருள் குறைவா யிருந்தது; இவர் இடம்பமற்ற வாழ்க்கை யுடையவராயிருந்தார். சிங்கையாவிட மிருந்த மிட்டாவுக்குச் சரியான உரிமைக்காரர் இவரே. அப்படியிருந்தும் அவர் தம்முடைய முரட்டுச் செய்கையால் அந்த மிட்டாவைக் கைப்பற்றி ஆண்டு வந்தார். அதனால், அந்தச் சிங்கையாவிடத்தில் ஆடம்பரச் செய்கைகள் அதிகமாக நிகழ்ந்துகொண் டிருந்தன. ஆடம்பரத்தை விரும்பும் அயோக்கிய வாலிபர்களெல்லாம் அவரை எப்பொழுதும் சூழ்ந்துகொண் டிருந்தார்கள். நற்குணமுடையவர்களெள்ளோரும் சுந்தர பாண்டியரிடத்தில் சேர்ந்திருந்தார்கள். இந்நிலையில் சுந்தர பாண்டியர், மிட்டா தமக்குக் கிடைக்க வேண்டுமென்று சிங்கையாமீது வழக்குத் தொடுத்திருந்தார்.

இப்படி இவர்கள் விரோதங்கொண் டிருக்கும்போதுதான் மேற்கூறிய நாகப்பனும், தங்கச்சாமியும் இவர்களிடம் வேலைக்குச் சேர்ந்திருந்தார்கள். அப்படியிருக்கும்போது நாகப்பன், தன்னுடைய நண்பனாகிய தங்கச்சாமி செல்வாக்கில்லாத சுந்தர பாண்டியரிடத்தி லிருப்பது கூடாதென்று

நினைத்து அவனிடத்தில், "நண்பனே! நீ பொருளில்லாத சுந்தர பாண்டிய ரிடத்தி விருப்பது தகாது; நானிருக்கும் சிங்கையாவிடம் வந்துவிடு" என்று சொன்னான். அதற்குத் தங்கச்சாமி, "நாகப்பா! சிங்கையா சிறிது செல்வமுடையவரா யிருக்கிறாரென்று நீ அவரை விரும்புகிறாய்; அவரோ மிகுந்த கெட்ட நடக்கைகளை யுடையவர்; அவற்றால் ஒரு சமயத்தில் அவர்க்குத் தீங்கு நேர்வதோடு அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும் துன்ப முண்டாகும்; சுந்தர பாண்டியரோ பொருளில்லாதவரா யிருந்தாலும் மிகுந்த நற்குண முடையவர்; அதனால் பின்னொரு காலத்தில் அவருக்கு நன்மை யுண்டாகும்; அந்த நன்மையால் அவரைச் சார்ந்தவர்களுக்கும் உயர்வுண்டாகும்; ஆதலால், நான் அவரை விட்டு வரமாட்டேன்; நீ சிங்கையாவை விட்டு நானிருக்குமிடத்திற்கு வந்துவிடு; சுகப்படுவாய்" என்று சொன்னான். அவன் இடம்ப வாழ்க்கையை விரும்பியவனாதலின், தங்கச்சாமி கூறியதைச் சட்டை பண்ணவில்லை.

இப்படி இவர்கள் வாழ்ந்துவருங் காலத்தில் ஒருநாளிரவு சிங்கையா சாரதாம்பாள் என்னும் ஒரு தாசி வீட்டிற்குப் போனார். நாகப்பனும் அவர் கூடச் சென்றிருந்தான். சிங்கையா தம் வழக்கம்போல் குண்டுத் தோட்டா வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு போயிருந்தார். சிங்கையாவும், சாரதாம்பாளும் உல்லாசமாகப் பேசிக்கொண் டிருந்தார்கள். நாகப்பன் சிங்கையாவுக் கெதிரில் நின்று விசிறியால் விசிறிக்கொண்டிருந்தான். அப்போது சாரதாம்பாள் சிங்கையா விடமிருந்த துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு, "இதனால் எப்படிச் சுடுகிறது?" என்று அவரைக் கேட்டாள். அவர் அந்தத் தாசியை மகிழ்விக்க வேண்டுமென்ற கருத்து ஒன்றையே கொண்டு வேறெதிலும் புத்தியைச் செலுத்தாமல் துப்பாக்கியை எடுத்துத் தோட்டாவைக்கும் பக்கத்தை மடக்கி அதிலிருந்த தோட்டாவை எடுத்து, "இதை இப்படித்தான் வைக்கவேண்டும்" என்று துப்பாக்கியின் பின்புறக் குழாயினுள் மீண்டும் வைத்துத் துப்பாக்கியை நிமிர்த்திச் சரிப்படுத்திக் கொண்டு, "இப்படித்தான் சுட வேண்டும்" என்று நாகப்பன் மார்புக்கு நேரே நீட்டிச் சுட்டுவிட்டார். அவர் நுட்பபுத்தியில்லாதவரானபடியால் எதிரில் நாகப்பன் நின்றதைக் கவனிக்கவே யில்லை. வெடி கிளம்பியவுடன் நாகப்பன் மார்பில் குண்டு பாய்ந்தது. அவன் திடீரென்று வீழ்ந்து மரண மடைந்தான். உடனே சிங்கையாவும், சாரதாம்பாளும் கொலைக்குற்றத்திற் சிக்கிக் கொண்டார்கள். அன்று சுந்தர பாண்டியருக்கே மிட்டா உரியதென்று கோர்ட்டில் தீர்ப்பாகிவிட்டது. சுந்தர பாண்டியர் அப்பொழுதே தங்கச்சாமியைத் தம்முடைய மிட்டாவுக்கு மானேஜராக நியமித்துவிட்டார். அதன்மேல் சுந்தர பாண்டியர் மகிழ்ச்சியடைந்து தங்கச்சாமியுடன் வண்டியில் ஏறி ஒரு தெருவின் வழியாக வீட்டிற்குவந்தார். அப்பொழுது நாகப்பன் பிரேதம் போலீஸ்காரரால் அவருக் கெதிரில் கொண்டுவரப்பட்டது. தங்கச்சாமி நாகப்பனுக்கு நேர்ந்த மரணத்தை யுணர்ந்து, "இவன் சான்றோரினத்தைச் சாராததால் இவ்விடருக் குள்ளானான்" என்று சுந்தர பாண்டியரிடம் சொல்லி விசனமடைந்தான். அவரும் நாகப்பன் விஷயத்தில் பரிவு கொண்டார். பின் சிங்கையாவும், சாரதாம்பாளும் தண்டிக்கப்பட்டார்கள். சுந்தர பாண்டியர், மிட்டாவை யடைந்து தங்கச் சாமியுடன் மனக்களிப்புற்று வாழ்ந்துகொண் டிருந்தார்.

(தொடரும்) செம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை.




## மாதரும் குடும்பமும்.

(418-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு புருஷன் அநேக மனைவிகளை மணந்து கொள்வதற்கு இந்து மதம் இடந்தருகின்றது. தசரதன் அறுபதினாயிரம் மனைவியரை யுடையவனாயிருந்தான். மலயத்துவச பாண்டியனுக்குப் பதினாயிரம் மனைவியர் இருந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. மனைவியை இழக்கப் பெற்றோர் வேறு மனைவியைக் கொண்டனரெனினும் அது ஒருவாறு பொருத்தமுடையதாகும். அங்ஙனமின்றி மனைவி யிருக்கும்போதே மேலும் மேலும் பல பெண்களை விவாகம் செய்து கொண்டனரெனக் கூறுவதுதான் தகாத செய்கையாகும். மதம் இடங் கொடுக்கின்றதே யெனின், மதம் இடங் கொடுக்கலாம்; மனச்சாட்சி இடங் கொடுக்கிறதா வென்று பார்க்க வேண்டும். நமது உள்ளொளியாக விளங்கும் மனசாட்சியே தெய்வத்தன்மை யுடையது. அதுவே பெரிய நீதிபதி, பெரிய வேதம், அதுவே மதம். ஆகையால் அதைக் கேட்டுப் பார்ப்போம். அது இடங் கொடுத்தால் ஒப்புக் கொள்ளுவோம். அறுபதினாயிரம் மனைவியரைக் கொண்டிருந்த தசரதனுடைய குமாரன் ராமன் ஏக பத்தினி விரதனாயிருந்தது என்ன ஆச்சரியம்! பாருங்கள். அத்தனை மனைவிகளை அவர்கள் மணந்தது உண்மையாயிருக்குமோ என்னும் ஓர் சந்தேகத்தைக் கிளப்பி அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையாகவே யிருக்கலாம். ஏனெனில் இப்பொழுது நாம் பார்க்கக்கூடிய நிலைமையில் இத்தகைய செயல்கள் எத்தனையோ நடைபெறுகின்றனவே. ஆகையால் இது சரியா? என்பதே நாம் அறிய வேண்டிய விஷயமாகும்.

முன் சொன்னபடி சாஸ்திரம் இடந்தருகிறது, மதம் இடந்தருகிறது என்று சொல்வதை நாம் அங்கீகரியோம். நமக்குச் சாஸ்திரம் தெரியாது; மதம் தெரியாது. மனச்சாட்சியைக் கேட்டுப்பாருங்கள். அது "தவறு" என்று சொல்லுகிறது. ஒரு மனைவி யிருக்கையில் வேறொரு பெண்ணை விவாகம் செய்து கொள்ளுவானேன். இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன :—

அவள் சமுசாரத்திற்குத் தகுதியற்றவளா யிருக்கின்றாளென்ப தொன்று. வியாதி யுடையவளா யிருக்கின்றாளென்ப தொன்று. அவளிடமாகப் புத்திர சந்தான முண்டாகவில்லை யென்பது மற்றொன்று. இப்படிப் பல காரணங்கள் காட்டலாம். இதைக் குறித்து நம்மனசாட்சியானது நம்மை ஒரு கேள்வி கேட்கின்றது. அதற்கு யாது விடையளிப்பதோ பார்ப்போம்.

'அதன் கேள்வி இது :—ஓ! மனிதனே! உன் மனைவி குடித்தனத்திற்குத் தக்கவளா யில்லையென்று வேறொருத்தியை விவாகம் செய்துகொள்ள நினைக்கிறாய். அவளுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? அப்படியிருந்தால் நீ வேறு விவாகம் செய்துகொள். பேய்பிடித் தாடுகிறாளா? அப்படியானால் நீ என் மருந்து மந்திரங்களைக் கொண்டு குணப்படுத்தலாகாது. இனித் தேறக் கூடாதபடி வியாதி வாய்ப்பட் டிருக்கிறாளா? இச்சமயத்தில் கணவன் இத்தகைய நிலைமைகளிலிருந்தால் புருஷன் செய்கிறபடி மனைவி செய்யலாமா? அது அக்கணவனுக்குச் சம்மதப்படுமோ? அவனுக்குச் சம்மதமில்லாத வொன்று அவளுக்கு மாத்திரம் சம்மதமா யிருக்குமென்று நீ நினைக்கிறாயா? அப்படி யில்லாவிட்டால். குடும்பம் கெட்டுப்போகுமே என்கின்றனையோ? அப் பெண்ணுக்கு மாத்திரம் குடும்பமில்லையோ? பிள்ளைகளில்லையென்று வேறு பெண்ணை மணப்ப தவசியம் என்றால், அப்பெண்ணுக்கும் பிள்ளை பிறவாவிட்டால் என் செய்வது. மற்றொருத்தியை மணப்பது. அவளுக்கும் அப்படியே யானால்? இப்படியுமாகுமோ? என் ஆகாது? தசரதனுக்கு அறுபதினாயிரம் மனைவிய ரிருந்தனரே-பிள்ளை பிறந்ததா? மலையத்துவசன் பதினாயிரம் பேரை மணந்தும் ஒருத்திக்கேனும் ஒரு பிள்ளையேனும் பிறந்ததா? இல்லையே! தவிர புருஷனே என் மலடாக இருக்கக்கூடாது.

வேறு பெண்களை மணப்பதால் முன்னிருந்த மனைவியின் மனம் எப்படியிருக்கும் என்று சற்று சிந்தித்துப்பார். நீ அவள் ஸ்தானத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டு பார். நீ ஒரு ஸ்திரீ. ஒரு புருஷனை மணந்து கொண்டாய். நீ வியாதிவாய்ப்பட்டோ அல்லது மக்களைப் பெறாதவளாகவோ அல்லது அழகற்றவளாகவோ இருக்கிறாய். அப்பொழுது உன் புருஷன்—எவனை நம்பித் தாய் தந்தை சகோதரர் சகோதரிகளை யெல்லாம் கைவிட்டு வந்தையோ அந்தப் புருஷன்-விவாக காலத்தில் அக்கினி சாக்ஷியாகவும் மற்றும் பல தேவர்கள் சாக்ஷியாகவும் கைப்பிடித்த கணவன்-இனி எனக்கென்ன குறை? என் நாயகன் என்னை நன்றாக வைத்திருப்பான். எனக்கு யாதொரு துன்பமும் வாராமல் காப்பான். என்னைக் கைவிடமாட்டான் என்று எவனை நம்பியிருந்தையோ அந்தக் கணவன்-உன்னைக் கைசோரவிட்டு வேறொருத்தியை மணக்கப் போகிறான் என்றறிந்தால் உன் மனம் எப்படியிருக்கும்! எப்படிக் கலங்கும்! எவ்வாறு துடிக்கும்! வேகாதா, கொதிக்காதா, ஓ! புருஷனே! நன்றாக யோசித்துப்பார். ஒவ்வொரு காரியத்தையும் இப்படிப் பார்த்துச் செய்வதுதான் சரியாகும். இதுதான் மனச் சாட்சியோடு ஒப்பச் செய்வதாகும்.

அவ்வாறு பார்க்கிற காலத்தில் 'அது தவறு' என்பது உனக்கு நன்கு விளங்குமே. இது கிடக்கட்டும். ஆண்பாலர் செய்யும் வேறொரு அக்கிரமமான-அநியாயம் நிறைந்த காரியத்தைக் குறித்துக் கவனிப்போம்.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## சுருளி என்னும் சுரபிமாமலையின் மகத்துவம்.

ஆலயவழிபாடு மிகுந்த அன்பர்களே!

சுருளி மகத்துவம் சொல்ல யாரால் முடியும்? ஆனாலும் யானறிந்தமட்டில் அதன் விசேஷங்களில் சிலவற்றை வெளியிடுகின்றேன் :

மதுரை ஜில்லாவின் தென்பாகத்தில் சுருளி என வழங்கும் இச் சுரபி மலை இருக்கின்றது. இம்மலையில் அனேக ஆலயங்களிருக்கின்றன. ஓர்பாகத்தில் பிரசித்திபெற்ற சுப்பிரமணியர் ஆலயமொன்றமைந்திருக்கின்றது; அவ்வாலயத்தின்மேலிருந்து மகா அற்புதமான தீர்த்தமொன்று வீழ்கிறது; அதன்மகத்துவம் அளவிடற்கரிது. அத்தீர்த்தத்தில் விழும் செடி, கொடி, மரம், இலை, சருகு, காய், கனி, கிழங்கு முதலிய சகல பதார்த்தங்களும் கல்லுருவாய்விடுகின்றன. இதையறிந்த மானிடர்கள் விசேஷ தினங்களிற் சென்று அத்தீர்த்தமாடி வருகிறார்கள். இன்னும் அத்தீர்த்தம் அனேக வியாதிகளைத் தீர்ப்பதோடு கோரிய பலன்களையும் கொடுக்கின்றது. கானவிற்குள் சுமார் மூன்றுமைல் தூரத்திற்கப்பால் பெரும்பாறை ஒன்றுண்டு. அப்பாறையில் மானிடர் காலடிபோன்ற அடிகளும், கோக்களின் அடிகளும் பதிந்திருக்கின்றன. அவைகளிலிருந்து தீர்த்தம் உற்பத்தியாகி வருகின்றது. இதற்குச் சில சரித்திரங்கள் பெரியோர்க ளுரைக்கின்றார்கள்.

ஷை சுப்பிரமணியர் ஆலயத்திற்குள் மேலே பசுவின் தனக் காம்புகளைப் போன்ற அனேகம் காம்புகளுண்டு. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான தீர்த்தங்கள் சுவாமிகளின்மேல் சதா வீழ்கின்றன. இக்கலியில் இவ்வதிசயத்தைப்பார்க்க அதிக ஆச்சரியமாயிருக்கிறது. ஷை ஆலயத்தின் கீழ் கைலாய குகை ஒன்றிருக்கிறது. அக்குகையின் துவாரம் அதிகம் சிறியது. அதனுள் செல்பவர்கள் யாதொரு குற்றமில்லாமல் பக்தியுடன் செல்லவேண்டும். உள்ளே விஸ்தீரணமான இடமிருக்கின்றது. குகை அதிகதூரம் செல்கின்றது. அதற்கப்பால் என்ன ஆகின்றதோ அதை நான் அறிகிலேன்.

இம்மலையில் தலைச்சுருளி என ஒன்றிருக்கிறது. அங்குச்செல்ல அனேகம் படிகளுண்டு. அப்படிகளில் ஒவ்வொன்றும் ஆறேழு பனை உயரமாயும் அதிக வழுவழுப்பாயும் இருக்கின்றன. அதன்மேலேறவேண்டுமானால், ஓர் சிறிய கொடியொன்று மேலிருந்து கீழ்நோக்கிச் செல்கின்றது. அங்குச்செல்பவர் உடல், பொருள், ஆவி மூன்றையும் சுப்பிரமணியருக்கு அர்ப்பணமாக்கிவிட்டு அதன்பின் அக்கொடியைப் பிடித்துத் தொத்திக் கஷ்டப்பட்டுச் சுவாமி கடாட்சத்தால் மேலேறவேண்டும். முதல்படியில் சென்று பார்த்தால் ஏராளமான தேன்களும், அற்புதமான தீர்த்தங்களும், தபயோகிகளிருக்கும் குகைகளும், இன்னும் மனவிடற்கரிய அற்புதங்களுமுண்டு. அதையடுத்த இரண்டாவதுபடியில் கஷ்டப்பட்டுச் சென்று பார்த்தால் அங்கு ஓர் தபயோகி பிர்மநிஷ்டையிலிருக்க அவரைச் சுற்றிலும் பாறை வளர்ந்து அவருக்குமேல் சுமார் ஆறடி உயரமிருக்கின்றது. அவர், அங்கமர்ந்து எவ்வளவு கற்பகாலமாகின்றதோ அறிகிலேன். அதற்கடுத்தபடியில் ஏராளமான விபூதியும், எத்தனைபேர் சென்றாலும் அத்தனை கால்படி அரிசியும் உண்டு; அதற்கடுத்தபடியில் சிங்கம், யானை, புலி, கரடி, கதம்பை வண்டுக்கூட்டங்களேராளமாயுண்டு. அதை யடுத்தபடியில் பவளம், இரத்தினம், கோமேதகங்களும் ஏராளமாயுண்டு. அதற்குமேல் செல்வது பெருங்கஷ்டம். சென்றால் திரும்ப முடியாது. அதற்குமேல் பேரானந்தமயமான ஈசன் சன்னிதி இருக்கின்றதாம். இம்மலையில் ஓர்பாகத்தில் மஸ்தான்சாகிபு சமாதி ஒன்றிருக்

கிறது. அவர் அம்மலையடிவாரத்தில் நின்று நம் சமாதிக்கேற்ற குகை ஒன்றிருக்கிறதா என யோசித்து அக்குகைக்குச் செல்லப் பாதையில்லாமல் கஷ்டப்படும் காலத்தில், யானை, புலி, கரடி, இன்னும் காட்டுமிருகங்களெல்லாம் வந்து எதிரிலுள்ள செடி கொடி புதர்களையெல்லாம் பிடுங்கி மிதித்து வழி காட்டிக்கொண்டு போனதாக அறிந்த பெரியோருரைக்கின்றனர். இன்னும் அனேக தபயோகிகள் அவரவர்களுக்கேற்ற குகைகளில் தபம் செய்துகொண்டிருக்கிறார்கள். தபம் செய்பவர்களுக்கேற்ற அநேக குகைகளுமுண்டு. மஸ்தான் குகைக்குச் செல்லும் பாதையோரம் பக்கத்தில் சன்யாசி யடங்கிய குகை ஒன்றுண்டு. அக்குகையில் ஒருபக்கம் கை நுழையக்கூடிய துவாரம் ஒன்றிருக்கிறது. அதில் கைவைத்து எடுத்தால் ஒருதரம்பூசக்கூடிய விபூதியிருக்கின்றது. அதற்குமேல் கிடையாது. இன்னொருவர் கைவைத்தால் அவருக்கும் அவ்வளவே இருக்கின்றது. அப்படி எத்தனைபேர் போனாலும் விபூதி அப்போது பூசத்தானிருக்கும்; அதற்குமேல் கிடையாது.

அமாவாசை, கார்த்திகை, இன்னும் மற்ற விசேஷதினங்களில் இம்மலையில் உற்சவம் நடக்கிறது. ஆனால் சித்திரைமாதப்பிறப்பில் அதிக விசேஷமாயிருக்கும். எல்லாரும் சென்று தீர்த்தமாடிவந்தால் சகல பிணியும் நீங்குவதன்றி பக்தியு முண்டாகின்றது. இப்புண்ணிய பூமிக்குச் செல்லும் பாமரர்களுக்குங்கூட ஓர்வித நல்லறிவு உண்டாகிறது. இம்மலையிலுள்ள துஷ்ட ஜந்துக்களும் அங்குச் செல்பவர்களை யாதொரு தீங்கும் செய்வதில்லை. அங்குச் செல்வோருக்கு அன்னக்குறைவு கிடையாது. அம்மலையில் அளவிலடங்கா விதம் விதமான மூலிகைகளுண்டு. வைத்தியர்கள் அநேகர் மூலிகை சேகரிப்பதற்கு அங்குச் செல்கிறார்கள்; அங்கிருக்கும் மூலிகை நன்றாய்ப் பலிகின்றது.

இம்மலையின் சுமார் இருபதுமைல் தூரத்திற்கு வடக்கில் வீரபாண்டியையடுத்த வயல்பட்டியின் பக்கலில் நாகர்மலையென ஓர் மலையுண்டு. இது நல்லபாம்பின் அம்சம். இதில் ஓர்பக்கத்தில் விஸ்தீரணமான பாறை ஒன்றமைந்திருக்கிறது. அதைச்சுற்றிலு மனேக ஆலயங்களுண்டு. பாறையின் குகையில் சுப்பிரமணியர் வீற்றிருக்கின்றனர். அவருக்கு மேல் பாறையில் அனேகம் சுனைகளுண்டு. அவைகளுக்கு நாமங்களுண்டு. அவை வீசம் படி, உழக்கு, ஆழாக்கு, உரி, படி இவற்றின் உருவங்களாய் அமைந்திருக்கின்றன. இன்னும் சிவன் சுனை என்றும், சக்தி சுனை என்றும் இரண்டு சுனைகள் அமைந்திருக்கின்றன. இவற்றில் சக்தி சுனையிலிருப்பது பாலாகவே இருக்கிறது; இதை யுபயோகித்தால் அனேக வியாதிகள் தீருகின்றன. இன்னும் இம்மலையில் பெரிய கார்த்திகையில் உற்சவம் நடைபெற்று விளங்குகிறது. இன்னும் இம்மலையிலுள்ள அற்புதங்களையும், சுருளியிலுள்ள அதிசயங்களையும் விடாது கூறுவதெனில் ஆனந்தபோதினி இடம் தராதென இம்மட்டில் விடுத்தனன்.

ரே. இராமசாமி, வயல்பட்டி.

குறிப்பு:-இதில் கூறப்பட்டிருப்பவைகளில் சில, மனிதர்களுக்கு நம்பிக்கையற்றனவாயு மிருத்தல் கூடும். இவற்றை யெழுதிய நண்பர், சிலவற்றை நேரில் பார்த்திருக்கக்கூடும், சிலவற்றைப் பிறரால் கேள்விப்பட்டிருத்தல் கூடும். ஆதலின், இவற்றின் உண்மைகளை நேரில் பார்த்தவர்கள் எழுதினால் மறுமுறையும் வெளியிடுவோம். ப-ர்.

---




## இஞ்சி உற்பத்தி.

(372-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேற் கூறிய இஞ்சிகளுள் பச்சை யிஞ்சி ஒருவகை. இது பளபளப்பாயும், ரசமுள்ளதாயும், முளையிலேயே காரமுள்ளதாயு மிருக்கும். இவ்வகை இஞ்சிகளைப் பொறுக்கிக் கழுவுவதைத் தவிர இவற்றிற்கு வேறு எவ்வித சிரமமான உழைப்பும் தேவையில்லை. இவ்விஞ்சியின், வருடாந்தப் பயிரின் முளைகள் வசந்தருதுவில் எடுக்கப்பட்டுக் காயவைக்கப்படுகின்றன. இவ்விஞ்சிகளில் 'ரிசோம்ஸ்' (Rhizomes) என்ற இஞ்சிதான் சுக்கு என்று கூறப்படும் உயர்ந்த இஞ்சி. மருந்து முதலான உபயோகங்களுக்குப் பயன்படுகிற நேர்த்தியான சுக்கு மேற்கூறிய இளம்முளை இஞ்சிகளைக் கொண்டு கீழ்க்கண்ட முறைப்படி செய்யப்படும்.

கொஞ்சம் சருக்கரையும் 'கார்பொனேட் ஆப் பொடாஷ்' என்னும் அங்கார கந்தக உப்புநீரும் கலந்த பாகில் இவ்வுலர்ந்த இஞ்சிகளை மூன்று அல்லது நான்கு வாரம் வரையில் ஊறவைக்க வேண்டும்.

**சுக்கு செய்யும் விதம்.** அங்கார கந்தக உப்பு நீரைக்கலப்பதால் சுக்குக்குப் பசுமையும், பாகுக்குக் கெடாததன்மையு மேற்படும். சுக்கும் இவ்விரசாயனப் பொருளின் சக்தியால் பதப்படும். இதன் பின்னர் 'இஞ்சிமுரப்பா' முதலான சுவைப் பண்டங்களைத் தக்கவாறு இனிப்புச் சேர்த்துச் செய்வதுண்டு. "இன்டஸ்டிரி"

## இந்திய காப்பி உற்பத்தி.

காப்பியைப்பற்றி வரைய எவ்வித முன்னுரையும் வேண்டுவதின்று. அதனை அன்பர்களுக்கு அறிமுகப்படுத்திவைக்க வேண்டிய அவசியமுமில்லை.

**முன்னுரை.** 'காப்பி' யென்பதை அறியாத குழந்தையும் நம்நாட்டிலிக்காலத்திலிலர். 'தண்ணீரில்லாது இருப்பினும் இயையும் காப்பியின்றிக் கணநேரமும் உயிர் தரியோம்' என்பதற்கிலக்காயிருப்பார் எத்தனையோ பேர். காப்பி, அதன் அடுத்த சகோதரன்-டீ, கடைக்குட்டிப் பயலான-கோக்கோ ஆகிய இம்மூவரில் ஒருவருடைய நட்பு அவசியமாகக் கருதப்படுதலே நிகழ்கால நிலை. குடிகளில், இம்மூன்றும் போதையுற்றவை. கடந்த இருநூற்றைம்பது ஆண்டுகளாகக் காப்பி யென்ற முத்தண்ணா உலகில் வெற்றி கொண்டு விளங்குகின்றான். 'டீ' எவ்வாறு வட, கீழ் இந்தியர்களால் போற்றப்படுகின்றதோ, அதுபோலவே காப்பி தென்னிந்தியாவின் தெய்வமாயிருக்கின்றது. 'காப்பி கடவுளை' முப்பொழுதும் தீண்டாத மக்கள் நமது தென் நாட்டிற் பெரும்பாலு மிலர். நிற்க, இத்தொழில் பெரிய இயந்திரங்களி னுதவியின்றி, சொற்ப முதலாளிகளும் கொள்ளத்தகும் ஒரு குடிசைக் கைத்தொழிலே. காப்பி [illegible] ஆராய்ச்சியைக் கவனிப்பின், அது பதினாறும் நூற்றாண்டில் [illegible] முதல் முதலாகத் உலகத்தாரைப் பீடிக்கத் தொடங்கிய தென்பதும், [illegible] பாலியத்தை 1830-ம் ஆண்டிற்றானே அடைந்து அதுமுதல் ஆக்ரமித்து [illegible]

169848

கின்றதென்பதும் அறியப்படும். இப்பொழுது உலகின் ஏனைய பாகங்களை விட இந்தியாவிற்றான் காப்பிக் கைத்தொழில் அதிகமாக நடைபெற்று வருகின்றது. ஆனால், இந்தியாவின் தென்பாகமான சென்னை மாகாணம், மைசூர், கூர்ஜாம், திருவனந்தபுரம், கொச்சி முதலான பிரதேசங்களில் அதன் உற்பத்தி யதிகம் நடைபெற வில்லை.

காப்பி தாவர சாஸ்திரப்படி எண்பது வகைப்படும். ஆனால் 'காபியா அரபிகா' (Coffea Arabica) என்ற ஒருவகை மட்டுமே இந்தியாவிற் பயிர் செய்யப்படுகின்றது.

விவசாய சம்பந்தமான கைத்தொழிலுக்கு எப்பொழுதும் மூலதனம் சிறிது அதிகமாகவே யிருப்பின்மட்டும் அதில் நல்ல லாப மடையக்கூடும்.

**சாகுபடி.**

இக்காப்பி யுற்பத்தி செய்யும் முறையில் நாம் அமரிக்கர்களைப்போல முயலுதல் நலம். காப்பி 60 முதல் 90°F வரை சீதோஷ்ண நிலையுள்ள இடங்களில் உற்பத்தியாகும் ஒருவித அடர்ந்த புராதன செடி. வியாபார நிமித்தம் காப்பிச் செடியைப் பயிர் செய்வதில் கவனிக்கத்தக்க பல முக்கிய விஷயங்களுண்டு. அதிக குளிர்ச்சியான பிரதேசமும், எப்பொழுதும் வறட்சிக்காற்று வீசுமிடங்களும் காப்பிச் செடியைப் பயிர் செய்தற்கேற்ற இடங்களல்ல. ஆதலின், இவையிரண்டும் நீங்கிய இயற்கையான மிதநிலையுள்ள இடத்தையே இதற்குத் தேர்தல் வேண்டும். அச்செடிகள் நன்கு வளர்வதற்குச் சிறுநீர் கழிக்கால்வாய்கள் அமைந்திருத்தல் வேண்டும். மேடுபள்ளமாக (கடலலையை யொத்து) அமையும் பூமியே அப்பயிருக்கு மிகவும் ஏற்றது. பலத்த வெள்ளத்தால் பயிர் சேதப்படாமலிருக்கக் கூடிய மலைச்சாரல்களிலும், மலையடிவாரங்களிலுமே காப்பிச்செடி மிக்க நன்றாகப் பயிராகும். சமுத்திர தீரத்திற்கு ஒருமைல் முதல் இருபது மைல் தூரத்திற்குள் காப்பிச்செடி நன்றாகப் பயிராகுமானாலும், ஜெயபூர் (வைசாகம்) அனந்தப்பூர் முதலிய இடங்களில் பரீக்ஷார்த்தமாகப் பயிர் செய்யப்படுகின்ற காப்பித் தோட்டங்கள் கடலுக்கு 800 அடி உயரத்தில், 300 முதல் 500 மைல் வரையில் சமுத்திரக்கரைக் கப்பாலுள்ளனவாயினும், அவற்றினின்றும் திருப்திகரமான பலன் கிடைக்கின்றது. எங்கு நீர் இயற்கையாகக் கசிந்து ஓடும் கால்வாய்கள் காப்பித் தோட்டங்களில் அமையவில்லையோ அவ்விடங்களில், அவற்றைச் செயற்கையாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

இனி, அச்செடிகளைச் சிறு நாற்றுகளாக வாங்கலாம், அல்லது விதைகளை வாங்கி நாற்று உண்டாக்கலாம். காப்பி நாற்றுகளை விளைவிக்கச் சற்று சரி

**காப்பிச்செடி நாற்று.**

வான இடங்களை பாத்திகளாக உபயோகப்படுத்தத் தகுந்தவை. பூமியை ஒரு அடி ஆழம் வெட்டி, மாவுபோல மண்ணைத் தூவிவிட்டு, களை, வேர், கற்கள் முதலியவை யிருப்பி னவற்றை யகற்றிச் சுத்தஞ் செய்ய வேண்டும். பின், சூரியவெப்பம் அதிகம் பட்டு முளைகளைக் கரித்துவிடாவண்ணம் காக்கவும், பயிரின் வளர்ச்சிக்குச் சூரியக் கிரணங்கள் சிறிது படுமாறு செய்யவும் அனுகூலமாக, ஓர் பொய்ப் பந்தரிட்டு, பூமியில் ஓரங்குல ஆழத்தில் மூன்றங்குல இடை வெளிவிட்டு விதைக்க வேண்டும். இவ்விதைகள் முளையெடுக்க நாலல்லது ஆறு வாரங்களாகும். அதுவரை பாத்திகள் ஈரமாகவே யிருத்தலவசியம். இளம் பயிர்கள் (நாற்றுகள்) ஒன்பதுமாதப் பருவத்தை யடைந்த பின் தோட்டங்களில் நடுவதற்கேற்ற நிலையை யடைகின்றன. அவ்வமயம் அவை ஒன்பதல்லது பத்தங்குல உயரமுள்ளவைகளா யிருக்கும். அவற்றை நடும்போது, நிலவளத்திற்குத் தக்கவாறு, சாதாரண சக்தியுள்ள பூமியில்



7 அடி இடம் விட்டும், முதற்றரமான மண்ணுள்ள விடங்களில் எட்டடி இடை யிடம்விட்டும் அவை நடப்பட வேண்டும். அவற்றை நடுங்கால் சுமார் ஒரு முழ சதுரம் ஆழமாகப் பூமியைத் தோண்டி, அக்குழியி னடிப்பாகத்தை நன்கு கிளறிவிட்டு, அதன்பிறகு சாதாரணமான தரையின் மேற்பாகத்திலுள்ள மண்ணைத் தூவிவிட வேண்டும்.

(தொடரும்) S. V. வரதராஜையங்கார், உறையூர், திருச்சி.

## ஆகாய விமானம்.

ஆகாய விமானங்கள் ஏற்படாததற்குமுன் ஐரோப்பியர்கள், யுத்தத்தில் பலூன்களை உபயோகித்தனர். உலகில், ஆகாயத்தில் செல்வதற்கு முதன்முதல் சீன தேசத்தார்தாம் பலூன் செய்தனர். பின்னர், ஐரோப்பியர்களும் அதைச் செய்யத் தலைப்பட்டனர். அவர்களுள் மருந்து வியாபாரியாகிய காவண்டஸ் என்னும் ஆங்கிலேயர் அய்டிரோஜன் என்னும் ஆவி, பிராணவாயுவைவிட இலேசான தென்றும், அது, ஒன்றை மேலே கொண்டு போவதற்கு அனுகூலமாயிருக்கு மென்றும் 1766-ம் ஆண்டில் அதைக்கண்டு பிடித்துக் காட்டினார். அதைக்கொண்டு சிலரால் பலூன்கள் செய்து உபயோகிக்கப்பட்டன. அதற்கு இருபது வருடங்களுக்குப்பின், பிரெஞ்சு தேசத்தில் ஒரு காகித வியாபாரியின் இரண்டு புத்திரர்கள் கடுதாசியினால் ஒரு பெரிய பை செய்து அதில் வெப்பமான பிராணவாயுவை நிரப்பி அதை ஆகாயத்தில் விடுத்து அதன் போக்கைக் கவனித்தனர். அது ஆகாயத்தில் கொஞ்சதூரம் சென்று கீழே இறங்கியது. பின் 1783-ம் வருடத்தில் இச்சகோதரர்கள், முரட்டுத் துணியினால் ஒரு பெரிய பை செய்து அதில் பிராண வாயுவை நிரப்பி, அந்தப் பையின் அடிப்பாகத்தில் ஒரு பெரிய கூடையைக் கட்டி அதில் ஒரு ஆட்டையும், சேவலையும், வாத்தையும் வைத்து, அந்தப் பையை ஆகாயத்தில் விடுத்தனர். அது ஆகாயத்தில் எட்டு நிமிஷம் வரையில் சென்று கீழே இறங்கியது. அதன்மேல் சில வாரங்கள் கழித்து ரோஷியர் என்னும் பிரென்சுக்காரர் நூறு அடி உயரம் வரையில் ஒரு பலூனில் சென்று கீழே இறங்கினார். மறுமுறை அவர், இன்னொருவருடன் 500 அடி உயரம் வரையில் ஒரு பலூனில் சென்றார். அந்தப் பலூன் ஆகாயத்தில் இருபது நிமிஷங்கள் வரையில் சென்று கீழே இறங்கியது. பிளாரஸ் என்னும் ஊரில் 1794-ம் வருடத்தில் நடந்த யுத்தத்தில் முதன்முதலாக பலூன் உபயோகிக்கப்பட்டது. அக்காலத்திற்குப் பத்து வருடங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் ஆக்ஸ்போர்ட் என்னும் நகரில் லுனார்டி என்பவர் பலூனில் சென்றார். 1811-ம் ஆண்டில் நெபோலியனுடைய இளைய புத்திரன் பிறந்த செய்தி அச்சடிக்கப்பட்டிருந்த துண்டுப் பத்திரங்களை பிளான்சார்ட் என்னும் மாது பலூனிலிருந்து கீழே எறிந்தார். 1861-ம் ஆண்டில் அமெரிக்கா ஜனங்கள், தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டபோதும் ஒரு பலூன் உபயோகிக்கப்பட்டது. அந்தப் பலூனின் போக்கைக் கவனித்தவர்களில் ஒருவராகிய செப்பிலின் என்னும் ஜெர்மானியர் அவ்விஷயத்தில் அதிக ஊக்கம் செலுத்தலானார். அவர், தம் நாட்டுக்குச் சென்றபோது, யுத்தத்தில் உபயோகிப்பதற்குப் பலூன்களைச் செய்யும்படி இராணுவ அதிகாரிகளை வற்புறுத்தினார். அவர், அதிக காற்று வீசிய போதிலும் ஒரு மனிதன், தன் இஷ்டப்படி எந்தத் திக்கிலாகிலும் செலுத்தும்படி ஒரு ஆகாய விமானம் செய்ய எண்ணங்கொண்டு அதிக செலவில்

ஒரு விமானம் செய்தார். அவ்விமானம் அழிந்துவிட்டது. அதன்மேல் அவர் இன்னொரு விமானம் செய்தார். இவ்வாறு ஒன்றின்பின் ஒன்றாகப் பல விமானங்கள் செய்துவந்தார். அப்படிச் செய்துவந்ததால் அவர் கடனாளியாகிவிட்டார்; அவரை ஜனங்கள் பித்தரென்று சொல்லத் தலைப்பட்டனர். பின்னர் அவர், கடைசியாகச் செய்த விமானத்தில் 270 மைல் தூரம் சென்றார். அதைக்கண்ட ஜெர்மன் அரசாங்கத்தார், இத்தகைய விமானம் யுத்தத்தில் அதிக உபயோகமானதாயிருக்குமென்று நினைத்து, இன்னும் மேலான விமானம் செய்வதற்குரிய வழிகளைக் கண்டறியும்படி அவருக்கு ஏராளமான பணம் அளித்தனர். அவர் ஒரு விமானம் செய்கையில் அவருக்கு மேலும் பற்பல சிறந்த யுக்திகள் தோன்றும்; அவற்றைக் கொண்டு அவர் பின்னுற் செய்யும் விமானங்களை ஒன்றைக்காட்டிலும் ஒன்று சிறந்ததாகச் செய்துவந்தார். 1914-ம் வருஷம் முதல் 1918-ம் வருஷம் வரை நடந்த யுத்தத்திற்கு முன்பு 13 விமானங்கள் சேதமாயின. ஆயினும் ஜெர்மனி அரசாங்கத்தார் விமானம் செய்பவருக்குப் பணம் கொடுத்துக்கொண்டே வந்தனர். அப்பணத்தைக் கொண்டு அவர் மேன்மேலும் மேலான விமானங்களைச் செய்தார். அவர், பிந்திச்செய்த விமானங்கள் கோழிமுட்டை வடிவும், 75 அடி சுற்றளவும், 800 அடி நீளமும் வாய்ந்தனவாயிருந்தன; அவைகளில் ஒவ்வொன்றும் சுமார் 20 பேர்கள் ஏறிச் செல்லக்கூடியதாயிருந்தது. இந்த விமானங்களின் அமைப்பு பகைவர்களுக்குத் தெரியாதபடி அதை, ஜெர்மனி அரசாங்கத்தார் இரகசியமாகவே வைத்திருந்தனர். யுத்தத்தின்போது ஒரு சமயத்தில் ஜெர்மனி ஆகாயப் போர்வீரர்கள் தங்களுடைய பகைவர் ஊரின்மீது சென்று அங்கு வெடிகுண்டுகள் எறிந்துவிட்டுத் தங்கள் நாட்டுக்குத் திரும்பச் செல்கையில், விமானத்திற்குப் பழுது ஏற்பட அவர்கள் பிரான்ஸ் தேசத்தில் இறங்கும்படி சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. அப்போது அவர்கள், விமானத்தின் அமைப்பை பிரான்சுக்காரர்கள் தெரிந்துகொள்ளாதபடி அதை அழிக்க முயன்றார்கள். அப்படி அழிப்பதற்குமுன் பிரெஞ்சுக்காரர்கள் அதைக் கைப்பற்றி அதன் அமைப்பை அறிந்துகொண்டனர். அக்காலத்தில் செப்லின் அதிக உயரத்தில் சென்றபடியால், அதிலிருந்து ஜெர்மானியப் போர்வீரர்கள் பகைவர்களின் ஊர்களில் வெடிகுண்டுகள் எறிந்தபோது அப்பகைவர்களால் அவ்விமானத்தைத் தகர்க்க இயலவில்லை. அந்த யுத்தத்திற்குப் பிறகு விமானத்தின் இரகசியங்களைத் தெரிந்துகொண்டு சகல தேசத்தார்களும் தத்தம் யுக்திக்குத் தோன்றியபடி விமானம் செய்யத் தலைப்பட்டனர். பல ஜனங்கள் சௌகரியமாகச் செல்லும்படி தற்காலத்தில் அதிக நேர்த்தியான விமானங்கள் செய்யப்படுகின்றன. ஐரோப்பா கண்டத்திலிருந்து அமெரிக்காவுக்குச் செல்லக்கூடிய பெருத்த விமானங்களை இங்கிலீஷ்காரர்களும் ஜெர்மானியர்களும் அதிக துரிதமாக இப்போது செய்து வருகிறார்கள். இங்கிலீஷ்காரர் செய்து முடிப்பதற்குமுன் ஜெர்மானியர்கள், தங்களுடைய விமானத்தைச் செய்து முடித்து அதை அமெரிக்காவுக்குச் செலுத்திச் செல்லத் தீவிரமாக வேலை செய்கிறார்கள்.

---

## அறிவிப்பு.

13-வது ஆண்டுச் சந்தாத் தொகை அனுப்பும்போது விபவளுத்துப் பஞ்சாங்கத்துக்காக இரண்டணா சேர்த்தனுப்பிய நேயர்களுக்கெல்லாம் 27-3-28ல் நமது பஞ்சாங்கம் அனுப்பியாய்விட்டது. நாம் சென்ற பங்குனிமீ சஞ்சிகை 394-ம் பக்கத்தில் தெரிவித்தபடி ஜீவிய சந்தாதாரர்களுக்கும் இலவசமாக ஷை பஞ்சாங்கம் ஷை தேதியில் அனுப்பட்டிருக்கிறது. ப-ர்.

# புராதன சங்கீதம்.

(Registered)

(உறையூர். ஸ்ரீ. வெ. வரதராஜய்யங்கார் எழுதியது.)

## 1. சங்கீத விசேஷம்.

சங்கீதம் என்ற பதத்திற்கு இன்பமென்பது பொருள்; இது வடமொழிச் சொல்; இசை என்பதே சங்கீதமென்னும் பொருளைத்தரும் தென்மொழிச் சொல்லாம். மனிதனுக்கு அவனுடைய செவியின் வாயிலாகத் தெவிட்டாத—தன்னை யறியாத ஓர் ஆனந்தத்தையும், பரவசத்தையும், இன்பத்தையும் தரவல்லது சங்கீதம். 'சங்கீத விஞ்ஞானம் சதுர்வர்க்கபலப்பிரதம்' என்பதால் இச்சங்கீதத்திற்குத் தர்மார்த்த காமமோக்ஷமென்ற நான்குவித புருஷார்த்தங்களின் பலனையும் தரத்தக்க வல்லமையுண்டென்பதும் பெறப்படும். விஷயானுபவ மறியாத, தெய்வத்திற் கொப்பான சிறு குழந்தையும் கானத்தைக்கேட்ட அளவிலே துயில் கொள்வதாலும், வனத்தில் சஞ்சரிக்கும் பசுபோன்ற மிருகங்களுங்கூட சங்கீதத்தைக் கேட்ட அளவிலே அசைவற்று நின்று மெய்ம்மறந்து பரவசமாவதாலும் சங்கீதமானது பாமரனுக்கும் ஒருவித ஆனந்தத்தை யூட்டுகின்றதென்பது நன்குவிளங்கும். கலைகளுக்கெல்லாம் உற்பத்திஸ்தானமாகின்ற பிரம்மபத்தினியான சரஸ்வதிதேவி வீணாவாத்யத்தை யுடையவளாதலாலும், திருமால்கொண்ட பத்து அவதாரங்களில் முக்கியமான கிருஷ்ணாவதாரத்தில் குழலைத் தன் வாத்யமாகக்கொண்டு, கோபிகாஸ்திரீகளாக பரமாத்மாவின் ஆலிங்கனத்திற் காசைப்பட்டு ஜனனமெடுத்த மஹரிஷிகளை அதன் நாதத்தாலழைத்துப் பரவசமாக்கியதாலும் சங்கீதம் தேவதாம்சமானதென்பது அறியற்பாலதாகும். பரம பாகவதோத்தமர்களான நாரதர், ஆதிசேடன், ஆஞ்சநேயர், வாணி, தும்புரு முதலானோர் சங்கீத மஹிமையால் பக்தர்களானார்களென நூல்கள் கூறுவதாலும் சங்கீத விசேடம் புலனாம். 'ச' வெனத்தொடங்கும் சாமவேதத்தினின்றும் சங்கீதம் உற்பத்தியாயிற்று. சாமவேதப் பிரமாணமாக சங்கீதம் உலகிற்கு வந்ததென்பாருமுளர். சங்கீத இலக்கணத்தின் மகிமையை கச்யபர், தமங்கர், பாரத்வாஜர், கௌதமர், வசிஷ்டர், சியவனர், யஞ்யவல்கர் முதலான மஹரிஷிகளும், அர்ஜுனன், இராவணன், பிந்துராஜன், உருத்திரசேனன், போஜன், க்ஷேத்திரராஜன் முதலான மன்னர்களும் நன்குணர்ந்து அனுபவித்தவர்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாம்பாடிய பாசுரங்களை இசையாக உலகிற்கு வழங்கினமையாலும் இசையின் பெருமை புலப்படும். சதுர்யுகங்களில் ஒவ்வொரு யுகத்திலும் சர்வேஸ்வரன் தன்னையடையும் வெவ்வேறு மார்க்கங்களை மக்களுக்குப் புகட்டினன். அதில் நான்காவது யுகமான கலியில், பக்திமார்க்கத்தைவிட மற்றவை கடினமாகத் தோன்றுமென்றும், பக்திமார்க்கமே சுலபமானதென்றும், அப்பக்திமார்க்கத்திலும் ஈஸ்வரநாமஸ்மரணையால் முக்தி சித்திக்குமென்றும், அந்த நாமசங்கீர்த்தன மார்க்கத்திற்கு சங்கீதம் அவசியமானதென்றும் கற்பித்தார். பகவந்நாமத்தின் மஹிமையை உலகிற் பரப்பி, மனிதசமூகத்தின் உள்ளத்திற்கோர் புதிய உணர்ச்சிதந்த விடலர், கபீர்தாஸர், ராமதாஸர், துளஸீதாஸர் முதலான பக்த சிகாமணிகளும் சங்கீதத்தையே பக்திமார்க்கத்தின் பாதையாகக்கொண்டு முக்திபெற்றனர். சாமவேதம் இராவணனால் பாடப்பெற்றதென்றும், ஆதி இராமாயணகாவியத்தை வடமொழியிற் செய்த

வான்மீக மஹரிஷி, அதைக் குசலவர்கள் கானஞ்செய்யக் கேட்டுப் பரம சந்தோஷத்தை யடைந்தாரென்றும், ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியே தமது சரித்திரத்தைத் தமது குமாரர்கள் பாடக்கேட்டுப் பரமானந்தத்தை அடைந்தாரென்றும், சங்கீத விசேஷப்பிரமாணம் விரிக்கப்படும். சங்கீத சாஸ்திரத்தைக் கூறும் சங்கீத பாரிஜாதம், ராகவிபோகம், சங்கீத ரத்னாகரம், சங்கீத சந்திரிகா, சங்கீதமயாகரம் என்ற வடமொழி நூல்களும், தென்மொழியில் சிற்சில நூல்களும் கானத்தின் மகிமையை விஸ்தாரமாக எடுத்துக் கூறுகின்றன. சங்கீதத்தைப் பிரமாணமாகக்கொண்ட வடமொழி நூல்களையும் அந்தக் கிரந்தங்களின் கர்த்தாக்களையும்பற்றிய விஷயம் பின்னர்க் கூறப்படும். சங்கீதம் தெய்வாம்சமானதென்றும், மானிடர்க்குப் பத்தியையும், ஆனந்தத்தையும், இகபர சாதனங்களையும், மோக்ஷசாம்ராஜ்யத்தையும் ஊட்ட வல்லதென்றும் சங்கீத விசேஷம் இதுவரையிலும் கூறப்பெற்றது.

## 2. சங்கீதத்தின் உற்பத்தி.

சங்கீதம் சாமவேதத்தின் அம்சமாகப் பிறந்ததென முன்பு கூறினோம். சங்கீதமென்பது கேட்கப்படும் ஒருநாதம் அல்லது சப்தம். இதை நாதப்பிரம்மம் என்பர் பெரியார். இந்நாதமானது முதலாக மனிதன் தனது மன எழுச்சியால் எழ, அந்த வேகமானது உடம்பிலுள்ள அக்கினியை எழுப்ப, அக்கினியானது அதன் சம்பந்தமான வாயுவைத் தாக்கிக்கிளப்ப, அவ்வெழுச்சி பின்பு, நாபிக்கமலம், மார்பு, கண்டம், சிரசு முதலான பாகங்களின் வழியாக முறையே சென்று நாவையடைந்து நாதத்தை யுண்டாக்குகின்றது. இந்த நாதம் ஹிருதய கமலத்தினின்று வெளிப்படுங்கால் மந்தர மென்றும், கழுத்திலிருந்து தோன்றுங்கால் மத்ய மென்றும், சிரசிலிருந்து வரும்பொழுது தார மென்றும் கூறப்படும். நாதம் ஹிருதய கமலத்தினின்றும் வெளிப்படும் பொழுது அது வரிசையாயுள்ள இருபத்திரண்டு திரோஹநாடிகளைக் கடந்து செல்வதாலும், நரம்புகள் ஒவ்வொன்றும் பேதசப்தத்தைத் தரக்கூடியதாலும் இருபத்திரண்டு சுருதிகளாக மாறுகின்றது. நாதமானது ஆஹதம், அநாஹதம் என்னு மிரண்டு பிரிவுகளுள்ளது. நிசப்தமான இடத்தில மஹான்கள் மனதை லயப்படுத்தி, தியானஞ்செய்யுங்கால் ஓம் என்ற பிரணவசப்தம் அவர்களுக்குக் கேட்கும். இந்த சப்தமானது மாறிமாறிப் பத்துவகையான நாதங்களை யுண்டுபண்ணும். அதன் பத்தாவது அம்சத்தைக்கொண்டு அதில் மனதைக் கட்டுப்படுத்தி (லயப்படுத்தி) மஹரிஷிகள் தியானம் செய்வார்கள். இது மிகவும் கஷ்டமான வழியாதலின் நாதத்தின் மேற்கூறிய பெரும் பிரிவுகளிலொன்றான ஆஹத நாதத்தைச் சுருதிப்படுத்தி, தன்போக்கில் பகவந்நாம அக்ஷரங்களை அமைத்துச் சாதாரண ஜனங்கள் சுலபமாக அடையக்கூடிய மோக்ஷசாதனமார்க்கம் கற்பிக்கப்பட்டது. நாதம் அதிசூக்ஷமம், சூக்ஷமம், புஷ்டம், அபுஷ்டம், கிருத்திரம் என்ற ஐந்து பாகங்களாகவும் பிரிக்கப்படும். சங்கீதம் சாமவேதத்தின் கிளையாகத்தோன்ற, பிரதமம், த்வீதியம், த்ருதீயம், சதுர்த்தம், மண்டம் முதலான ஸ்வரங்களினின்று ச வென்று ஆரம்பித்து சட்ஜம் முதலான எழு ஸ்வரங்களாக பிரம்மதேவனால் அமைக்கப்பட்டது.

எழு ஸ்வரங்களாவன: ச, ரி, கா, ம, ப, த, நி,

ச=சட்ஜம் ரி=ரிஷபம் கா=காந்தாரம்

ம=மத்திமம் ப=பஞ்சமம் த=தைவதம்

நி=நிஷாதம்.

(தொடரும்)

## வைத்தியக் குறிப்பு.

சென்ற மாதம் ஒரு நண்பர் தமரக வாயுவைப்பற்றியும், அதன் குணங்களைப்பற்றியும் எமக்கு எழுதி யிருந்தார். அவர் எழுதியதில் அந்நோய்க்கு இலகுவான சிகிச்சையை ஆனந்தபோதினியில் வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

ஆதலின், அவருடைய இஷ்டப்படி அதன் சிகிச்சையை இதன்கீழ் குறிக்கின்றோம்:—வாயுவு சம்பந்தமான வியாதிகளில் பல விருந்தபோதிலும், அவற்றுள், பித்தவாயுவு, உஷ்ண வாய்வு, மேகவாயுவு, குடல் வாயுவு, பீஜ வாயுவு அல்லது (வாதம்), நேத்திரவாயுவு, ஒற்றைக்கால் வாதம், குதகவாயுவு, பாரிசவாயுவு, தமரகவாயுவு என்னும் நோய்கள் முக்கியமானவைகளா யிருக்கின்றன. அவற்றுள் பித்தவாயுவும், தமரக வாயுவும், இருதயத்தை யனுசரித்த வியாதிகள். அவற்றுள் தமரகவாயுவு அபாயகரமானது. சில சமயங்களில் அவ்வியாதியால் மாரடைப்பு உண்டாய் மரணம் நேர்வதும் உண்டு. அவ்வியாதியால் அடிக்கடி புருஷர்களுக்கு மாரடைப்பு உண்டாய் மார்ச்சளி கட்டும்; சிலசமயம் பேசமுடியாமல் போய்விடும். அத்தகைய வியாதிக்கு இலுப்பைப் புண்ணாக்கும் 'குழந்தைகளின் சிறுநீரும் சேர்த்து இடித்து ஒரு மெல்லிய துணியில் கட்டி ஒரு துளி நாசியில்விட வாந்தியாகும்; உடனே வியாதி நீங்கும். நாள்பட்ட வியாதியானால் 10-நாளைக் கொருதரம் 1-துளி நாசியில் விடவேண்டும். இப்படி 3-தரம் செய்தால் ஷை வியாதி நீங்கும்.

### மோட்டுப்பூச்சி மருந்து.

அநேகர் மோட்டுப்பூச்சியின் உபத்திரவத்தை நிவர்த்திசெய்ய மருந்து கேட்பதால் அதைச் சகலரும் உணரும்படி தெரிவிக்கின்றோம்; சரீரத்தில் நல்லெண்ணெயை இலேசாகத் தடவிக்கொண்டு படுத்துக்கொண்டால் மோட்டுப்பூச்சி கடிக்காது. எள்ளுப் புண்ணாக்கைத் தூள்செய்து நெருப்பில் போட்டு வீடுபூராவும் தூபம்போட்டால் ஷை பூச்சி நாசமடையும். புகை அதிகமாய் வேண்டுமானால் எள்ளை இடித்துத் தூபம் போடலாம். வீட்டைச் சுத்தஞ்செய்து வர்ணமடித்துவிட்டால் மோட்டுப்பூச்சி சேராது. (பெனில் லோஷம்) போட்டு வீட்டை நனைப்பதாலும் அந்தப்பூச்சி நீங்கும்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

### புதிய ஜீவிய சந்தாதார்.

திருவாளர் ஸ்ரீரங்கம், தேசபூஷண, ஆர். கே. பிரசன்ன வெங்கடேச ராவ் அவர்கள் சென்றமீ நம் ஆனந்த போதினிக்கு ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்து ஷை சந்தாவுக்கு ரூ. 15—0—0ம், நன்கொடை ரூ. 5—0—0ம் ஆக ரூ. 20—0—0 அனுப்பி யிருக்கிறார்கள். இவர்கள் நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

### பழைய ஜீவிய சந்தாதார்.

மோல்மேன்ஜூன். திருவாளர். எஸ். ஆர். எம். கருப்பையா அம்பலம் அவர்கள் முந்திய ஜீவிய சந்தாதாரர்களில் ஒருவர்; சென்றமீ சஞ்சிகையில் வெளிவந்த ஜீவிய சந்தாதாரர் லிஸ்டில் அவர் பெயர் தவறுதலாக விடுபட்டுப் போயிற்று. ஆதலின் இப்போது இவ்விவரம் வெளியிடப்பட் டிருக்கிறது.

ப-ர்.

# அறிஞரின் அமுதமொழிகள்.

(425-ம் பக்கத் தொடர்ச்சி.)

11. Courage man ! the hurt cannot be much. *Shakspere.*
நமக்குக் கஷ்டம் ஏற்படுகையில் நாம் மனச்சோர்வு அடையாமல் தைரியத்துட னிருக்கவேண்டும். (ஷேக்ஸ்பீர்.)

12. Hunt half a day for a forgotten dream. *Wordsworth.*
உங்களுக்குத் தேவையாயுள்ள தகவல் உங்கள் ஞாபகத்திற்கு வராதபோது நீங்கள், அதைப்பற்றி யோசித்தால் அது உங்கள் புத்திக்கு எட்டும். (வோர்ட்ஸ்வோர்த்.)

13. The soul was like a star, and dwelt apart. *Wordsworth.*
உடல் வேறு ; ஆன்மா வேறு. (வோர்ட்ஸ்வோர்த்.)

14. I pity the man who can travel from Dan to Barsheba, and cry, 'T is all barren. *Sterne.*
ஒரு காரியத்தைச் செய்ய பிரியப்படுகையில், அதனால் நற்பலன் ஏற்படுமாவென்பதை முன்னதாக ஆலோசித்து, நற்பலன் ஏற்படக்கூடியதா யிருந்தால் மாத்திரம் அக்காரியத்தைச் செய்யவேண்டும். (ஸ்டேர்னி.)

15. He cast off his friends, as a huntsman his pack,
For he knew, when he pleased, he could whistle them back. *Goldsmith.*
தங்களுக்கு உதவிசெய்தவர்களை மறுபடியும் சமயம் வந்தபோது அழைத்தால் அவர்கள் உதவிசெய்வார்களென்னும் எண்ணங் கொண்டு சிலர், தங்கள் காரியம் தீர்ந்ததும், தங்களுக்கு உதவி புரிந்தவர்களை உதறிவிடுவதுண்டு. (கோல்ட்ஸ்மித்.)

16. With his back to the field, and his feet to the foe. *Campbell.*
நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் வாதிப்பது சிறப்பாம். (காம்பல்.)

17. And learn the luxury of doing good. *Goldsmith.*
மனிதர்களுக்கு நலஞ்செய்யுங்கள். (கோல்ட்ஸ்மித்.)

18. By sports like these are all their cares beguiled ;
The sports of children satisfy the child. *Goldsmith.*
குழந்தைகள் விளையாடி இன்புறுகிறார்கள். அவர்களைப்போல் நீங்களும் ஏதேனும் ஒரு விளையாட்டு விளையாடினால், உங்களுக்குள்ள கவலைநீங்கி நீங்கள் சந்தோஷமாக வாழ்வீர்கள். (கோல்ட்ஸ்மித்.)

(தொடரும்)

A. P. இராமன், B. A.

---

# சோதிடப் பகுதி.

## விபவ வருடப் பலன்.

இந்த விபவ வருடமானது, குருவை - இராஜாவாகவும்; அர்க்காதிபதி, சேனாதிபதி, மந்திரியாகவும்; சூரியனை-சஸ்யாதிபதி, நிரஸாதிபதியாகவும்; செவ்வாயை-ரஸாதிபதியாகவும்; புதனை-மேகாதிபதியாகவும்; சனியை-தான்யாதிபதியாகவும் நியமித்துக்கொண்டு, சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும் ஒரு ஸ்தானத்தையும் கொடாமல், வைகாசி (இடப) மீ சந்திரகிரஹணமும், ஐப்பசி (துலாம்) மீ சூரியகிரஹணமும் நம் தேயத்தில் தெரியும்படிக்கும்; ஓர் சந்திரகிரஹணமும், இரண்டு சூரியகிரஹணங்களும் நம் தேயத்தில் தெரியாதபடிக்கும் செய்துகொண்டும், புதனுக்கும், வியாழனுக்கும், சேனாதிபதி அர்க்காதிபதி ஸ்தானங்களைப்பற்றியும், சுக்கிரனுக்கும், சனிக்கும், தான்யாதிபதி ஸ்தானத்தைப்பற்றியும் விவாத மேற்படச் செய்துகொண்டும் வெகு உல்லாசமாய் (12-4-28) குருவாரம் கிருஷ்ணபட்சத்து அஷ்டமி பூராடநட்சத்திரம் இரவு நாழிகை 50-7-க்கு மகரலக்னம் கடைசி பாகத்தில் ஆதித்தன்-ஆலோசனையிலும், சந்திரன்-வாசனாலங்கிருதத்திலும், செவ்வாய்-ஆலோசனையிலும், புதன்-சித்தப்பிரமையிலும், குரு-மாமிசபக்ஷணத்திலும், சுக்கிரன்-சுராபானத்திலும், சனி-மதுபானத்திலும், ராகு-அவிழ்தத்திலும், கேது-அனுஷ்டானத்திலும், குளிகன் நிர்வாணமாயும் இருக்கும் சமயம் ஜனனமாயிற்று.

இவ்வருடம் மகாமேருபர்வதத்திற்கு வடபுறம் ஈசான்யத்தில் துரோண மேகம் உற்பத்தியாகப் போகிறது. கலந்த மேகத்துடன், பரந்தகாற்றோடுங் கூடிய மழை 24 படி. இதில் பாதி சமுத்திரத்திலும் மற்ற, பாதியில் 3-பாகம் மலை வனாந்திரங்களிலும், 2-பாகம் நாடு நகரங்களிலும் சகல ருதுக்களிலும் கண்ட வருஷமாய் வருஷிக்கும். மின்னல் குறைவுடன் மேகங்களினால் கெடும். சிந்து, ஆவர்த்தம், பௌண்டரிபுரம், மத்திய தேசங்களில் அதிகமழை. பங்குனி பிற்பாதியில் அதிகமழை. சகல தானியங்களும் மூந்திய வேளாண்மை பலிதம்; மாரி மழை மிகுதி. சகல மதஸ்தர்களும், தங்களுள் விரோதமின்றி அன்புடனிருப்பார்கள். ஆயினும் சிற்சில இடங்களில் அகம்பாவத்தால், கலகம், பசி, ஆயுதம், வைசூரி, அக்கினி இவைகளால் ஜனங்களுக்கு பயமும், பீடிப்பும் உண்டாம். பால், சர்க்கரை, எள், உளுந்து, சிறுபயறு, நெய், உப்பு, எண்ணெய், வஜ்ஜிரம், புஷ்பராகம், பச்சை, முத்து, மாணிக்கம், மாகதம், சுவர்ணம் முதலியவை மலியும். பருத்தி, கற்பூரம், சந்தனம், குங்குமம், தாம்பிரம், வைடூரியம், கோமேதகம், இரும்பு, வெண்கலம், மதுராவர்க்கம் குறையும்.

பசு, தேர், அக்கினி இவைகளால் ஜீவிப்போர்க்கு பீடை. புஷ்பம், சாயம் இவற்றால் ஜீவிப்போர்க்கு விருத்தி. விருக்ஷங்கள் நல்லபலன் தரும். பசு, ஆடு, பக்ஷி, குதிரை, யானை, இவைகளுக்கும், மிலேச்சர்களுக்கும் கெடுதி. சிற்சில சமயங்களில் ஜனங்களுக்குள் விசேஷக் கஷ்டமும், சமயக் கலகமும், மதத்துவேஷமும், தற்கொலையும் அதிகப்படும். நீதிமன்றத்தார் சத்தியத்தை மறப்பர்; ஜனனவிகிதத்துக்கு மரணம் குறைவுதான். சீன, மகத, யவன, பாஞ்சால, கோசல, காம்போஜ தேசங்களில் காற்றினால் செடி, கொடி பயிர்களுக்கு நசிவும் ஜனங்களுக்குச் சுகக்குறைவும் உண்டாம்.

சித்திரை, வைகாசி, ஆவணி மாதங்களில் விவாஹாதி யக்ஞகருமங்கள் சிறக்கும். அதிகாரவர்க்கத்தினருள் நியாயமற்ற பல மாறுதல்களேற்படும்,

அசுவதி, மிருகசீரிடம், ஆயில்யம், அஸ்தம், அனுஷம், உத்திராடம், பூரட்டாதி இந்த நட்சத்திரங்களில் ஜனித்தவர்களுக்கு 3-பாகம் வரவும், 1-பாகம் செலவும், கார்த்திகை, புனர்பூசம், பூரம், சுவாதி, மூலம், அவிட்டம், ரேவதி நட்சத்திரங்களில் ஜனித்தவர்களுக்கு 1-பாகம் வரவும், 3-பாகம் செலவும் ஏற்படும். பரணி, ரோகணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி இந்த நக்ஷத்திரங்களில் ஜனித்தவர்களுக்கு வரவும், செலவும் சமமாயிருக்கும். மேட இராசியில் ஜனித்தோர்க்கு திருப்திக் குறைவும், இடப துலா இராசிகளில் ஜனித்தோர்க்கு இராஜ கோபமுமுண்டாம்.

இவ்வருஷம், சித்திரைமாசம் 13-ம்உ புதன்கிழமை யன்று சுக்கிலபட்சம், புனர்பூசத்தில், கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி, துங்கபத்திரை, கிருஷ்ணவேணி, பிநாகி, தாம்பிரபருணி ஆகிய புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து தர்ப்பணாதிகளைப் புரிந்து பிதிர்க்கடன் முடிப்போர்களுக்கு யாகம்செய்த பலன் கிடைக்கும். இஃது சாஸ்திர யுக்தமான புண்ணியகாலம்.

இவ்வருடம் க்ஷேமமுண்டாகக் கடவுளைப் பிரார்த்திப்போமாக. சுபமஸ்து.

**கே. எஸ். முத்துக்கிருஷ்ண ரெட்டியார், பாலஜோதிடம், மூலக்கரைப்பட்டி,**

---

## வருடத்தில் 30 லட்சம் ரூபா செலவு செய்யும் மன்னன்.

இந்திய மன்னர்களின் இராஜ்யங்களிலுள்ள குடிகளின் மகா நாட்டுக் காரிய நிர்வாகஸ்தர்கள், நம் நாட்டில் வடக்கேயுள்ள 'ஆல்வார்' இராஜ்யத்தின் மன்னர் செய்யும் செலவை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த இராஜ்யத்தில் குடிகள் எத்தனை ரூபா வரி செலுத்துகிறார்களென்பதையும், அப்பணத்தில் ஜனங்கள் விஷயமாக எவ்வளவெவ்வளவு பணம் எந்தெந்த வகைகளில் செலவழிக்கப்படுகின்றதென்பதையும் ஆட்சியார் வெளிப்படுத்துவதில்லை. ஜனங்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து, 'ஆல்வார்' மகாராஜா விஷயமாக அடியிற்கண்ட விவரப்படி செலவு செய்யப்படுவதாக அவருடைய இராஜ்யத்தில் உள்ள ஓர் உயர்தர உத்தியோகஸ்தர் தெரிவிக்கிறார்:—

ஆல்வார் அரசாங்கத்தார், குடிகளிடமிருந்து வருடத்தில் வரி சுமார் 60,62,500 ரூபா வசூல் செய்கிறார்கள். அப்பணத்திலிருந்து சுமார் 30,37,500 ரூபா, அதாவது, பாதிக்குமேல் மன்னர் விஷயமாகச் செலவு செய்யப்படுகிறது. அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்குரிய மோட்டார் வண்டிகள் விஷயமாகவும் 5,63,250 ரூபாவும், அவ்வண்டிகளை விட்டுவைக்கும் அறைகள் விஷயமாக 4,12,545 ரூபாவும், மன்னர் குடும்பத்தாரின் சாப்பாட்டு விஷயமாக 1,63,750 ரூபாவும் செலவழிக்கப்படுகின்றன. ஜனங்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து அரச குடும்பத்தார் விஷயமாக இவ்வாறு ஏராளமான பணம் செலவிழுக்கப்பட்டும் இராஜ்யத்திலுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் விஷயமாக 1,12,500 ரூபாதான் செலவழிக்கப்படுகிறது. தமது இராஜ்யத்தைப் பார்க்கவரும் ஆங்கிலேய விருந்தாளிகளுடன் காட்டுக்கு வேட்டையாடச் செல்லும் விஷயமாக மகாராஜாவே தகக ஏற்பாடுகள் செய்கிறார். அரசாங்க வரும்படியிலிருந்து காட்டு விஷயமாக ஏற்படக்கூடிய செலவுக்கு ஒதுக்கி வைக்கப்படும் பணம், மகாராஜா, தம் விருந்தாளிகளுடன் காட்டுக்கு வேட்டைக்குச் செல்லும் விஷயமாகச் செலவழிக்கப்படுகிறது. 1926-ம் ஆண்டில் மன்னரின் ஆங்கிலேய விருந்தாளிகள் நிமித்தமாக 7,87,500 ரூபா செலவழிக்கப்பட்டது.—"மைசூர் பேட்ரியட்."—வெல்பேர்."




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(427-ம் பக்கத் தொடர்ச்சி.)

**ஆனந்தஸிங்:**—நீ அப்படிச் செய்தால் நான் உயிருள்ளமட்டும் மறக்கமாட்டேன்றான். ஆயினும் நீ உதவியின்றி அகப்பட்டுக் கொண்ட கிழவனை யொன்றும் செய்யமாட்டா யென்றே நம்புகிறேன்.

**அம்மனிதன்:**—"நானா செய்யமாட்டேன்!" என்று மிக்க குரோதத்தோடு ஆனந்தஸிங்கை நோக்கி ஆத்திரத்தோடு பாய்ந்தான்.

ஒகோ இவன் கெடுதிசெய்யப் போகிறானென்று ஆனந்தஸிங் அறிந்துகொண்டு,

"பத்திரம்! என்னைத் தொடாதே. தொட்டாற் கூச்சலிடுவேன்" என்றான்.

**அம்மனிதன்:**—தலைக்குமேல் வேண்டுமாயினும் கூச்சலிடு. ஆனால் உன் குரலைமட்டும் கெடுத்துக் கொள்ளாதே.

அவன் ஆனந்தஸிங் எதாவது ஆயுதத்தை யுபயோகப்படுத்துவானென்றெண்ணி ஒரு கையைத் தன்ஜேபியில் வைத்துக்கொண்டு அவனை யெச்சரிக்கையோடு பார்த்துக்கொண்டே யிருந்தான். அவன் ஜேபியில் வைத்துக்கொண்டிருக்கும் கரத்தில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டிருக்கிறானென்று ஆனந்தஸிங் நன்றாயறிவான். அதனால் மிக்க பயமடைந்த கிழவன் போல் அபிநயம் செய்து கொண்டே, "அய்யா! நான் உன்னை யென்ன செய்தேன்? அந்தப் பெண்ணைப்பற்றி எனக்கொரு கவலையுமில்லை" யென்றான். அம்மனிதன், "அவள் யாரென்பதைப்பற்றி உனக்கொரு கவலையுமில்லை..." என்றான். ஆனந்தஸிங் தனக்கு என்ன கெடுதி செய்தான் அல்லது செய்யவந்தான் என்பது அவனுக்குத் தெளிவாய் விளங்கவில்லை.

ஆனந்தஸிங் மேற்கண்டவாறு பேசிக்கொண்டே அவனைச் சற்று நெருங்கியதும், மின்னல்போல் பாய்ந்து அம்மனிதனுடைய கன்னத்தின் கீழ் ஓங்கியொரு பலமான குத்துவிட்டதும் அவனை யடியோடு தூக்கிக் கீழே யறைந்ததால் அம்மனிதன் மூர்ச்சையாய் விழுந்துவிட்டான்.

ஆனந்தஸிங், "பேவ்க்ஷ் மனிதனை யுடனே மூர்ச்சிக்கச் செய்ய நல்ல குத்துக்கு மிஞ்சியது வேறொன்றுமில்லை. இந்த விருந்தை யிவன் என்றைக்கும் மறக்கமாட்டான். இனி நாம் துரிதமாய் நாம் செய்யவேண்டிய வேலையைக் கவனிப்போம்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

மறுவினாடி ஜாக்கிரதையோடும் சுறுசுறுப்போடும் அவன் ஜேபிகளைச் சோதித்தான். அவற்றில் பலவித வஸ்துக்கள் கிடந்தன. இரண்டு கைத் துப்பாக்கிகளிருந்தன. எதேனும் விசேஷமானது கிடைக்குமென்று ஆனந்தஸிங் நினைக்கவேயில்லை. ஆனால் மறுவினாடி யொரு கடிதம் அகப்பட்டது. அதில்,

"அபாயம். அவர்கள் துப்பறியும் கிருஷ்ணஸிங்கை யமர்த்திக்கொண்டிருக்கிறார்கள். பழையவிடத்திற்கு இப்போது இதைப் பிச்சனிடம் அனுப்பு" என்றிருந்தது.

அக்கடிதத்தில் கையொப்ப மில்லை. அது, பென்ஸலால் எழுதப்பட் எழுத நன்ருய்ப் பழகிய ஆள் எழுதியதல்ல.

**ஆனந்த:**—“பிச்சா! மிக்க வந்தனம். நீதான் பிச்சன் என்று நம்புகிறேன். இக்கடிதம் இனி யுனக்கு வேண்டியதில்லை யாதலால் நான் எடுத்துக் கொண்டு போகிறேன். இன்னொரு நாளைக்கு விடை யளிக்கிறேன்” என்று மூர்ச்சையாய்க் கிடப்பவனைப் பார்த்து மெதுவாய்க் கூறிவிட்டு, அக்கடிதத்தை மடித்து ஜேபியில் வைத்துக்கொண்டு துரிதமாய் அவ் வீட்டைவிட்டு வெளிப்பட்டு, நேராய் இராஜவேல் இருக்கிற உலகநாதம் பிள்ளையின் பாங்கிக்குச் சென்ருன்.

இராஜவேல் மிக்க வனப்புடையவனல்ல. ஆனல் அவன் பார்வையால் புருஷத்தனமும் களங்கமற்ற தன்மையு முடையவனென்பது விளங்கியது. அவனுடைய ஒருபக்கப் புருவத்தினருகில் ஓர் வடுவிருந்தது மட்டும் ஆனந்தலிங்குக்கு மிக்க வியப்பை யுண்டாக்கிவிட்டது. அதோடு அங்கு சுவரிலிருந்த ஒரு ஆணியில் குதிரைவண்டிச் சாரதிகள் அணியும் நீண்ட அங்கி யொன்று தொங்கிக்கொண் டிருந்தது.

---

## 6—வது அத்தியாயம்.

ஆனந்தலிங் நேரா யவன் அருகிற்சென்று நின்று, “நான் உலகநாதம் பிள்ளையால் அமர்த்தப்பட்ட துப்பறியும் உத்தியோகஸ்தன். நான் மனோன் மணி யம்மாளைக் காணவேண்டும். அது விஷயத்தில் நீ எந்தவழியாயாவது எனக்கு உதவி செய்யக்கூடும் என்று நினைக்கிறேன்” என்ருன்.

உடனே இராஜவேல் மனதில் பலவிதக் கலவரங்கள் தோன்றினது போல் அவன் முகம் தெரிந்தது. ஆயினும் அவன் உடனே சமாளித்துக் கொண்டு ஆனந்தலிங்கை நோக்கி உறுதியோடு, “என்னல் உதவி செய்யக் கூடுமென்று நான் நினைக்கவில்லை. ஆயினும் என்னலானமட்டும் பார்க்கிறேன். என்னை யேதாவது கேள்விகள் கேட்க விரும்புகிருயென்று நினைக்கிறேன். மனோன்மணி சுகமாய் வீடுவந்து சேர்வாள் என்பதுமட்டும் எனக்குத் தெரிந்தால் அதற்காக என் உயிரையேனும் சத்தியமாய்த் தருவேன். நான் அவளை மணம் புரிவதென்று ஏற்பாடா யிருப்பது உனக்குத் தெரியுமென்றே நம்புகிறேன்” என்ருன்.

**ஆனந்:**—ஆகா! அது எனக்குத் தெரியும். நான் இரண்டொரு நிர்த்தாக்ஷிண்யமான கேள்விகளைக் கேட்கிறதற்காக நீ என்மேல் வருத்தப் படலாகாது. அவளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே என் கருத்து. அவள் வீட்டைவிட்டுச் செல்ல ஏதாவது காரண மிருக்குமென்று உனக்குத் தோன்றுகிறதா?

**இராஜவேல்:**—ஒரு காரணமும் எனக்குத் தெரியாது.

**ஆனந்:**—உன்னை மணம் புரிந்துகொள்ளத் தீர்மானித்தது அவள் மனப்பூர்வமான பிரியத்தின்படிதானே?

**இராஜ:**—அப்படித்தான் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். வேறு காரணமே யில்லை. அவள் என்மேல் வைத்திருக்கும் அன்பு பூரணமானதும் உண்மையானதுமே யென்பது எனக்கு நிச்சயம்.

(தொடரும்) **ஆரணி. குப்புசாமி முதலியார்.**

---



## விநோதக்கூற்று.

ஒரு ரயில்வேயில், பார்சல் ஆபீசிலும், கூட்ஸ் ஆபீசிலும், டிக்கட் கொடுக்குமிடத்திலும் இன்னும் பல விடங்களிலும் “இலஞ்சம்” பெருத்துப் போயிற்ரும். இலஞ்சம் கொடுத்துக் கொடுத்துச் சலித்துப்போன ஒரு வியாபாரி இதைப்பற்றிப் பெரிய துரைக்கு ரிப்போர்ட் செய்தானும். பல மனுக்கள் எழுதியும் பதிலே வராமையால், நெடுநேரம் யோசித்ததில், ரிப்போர்ட் மனுக்களை யெல்லாம் பெரிய துரையின் குமஸ்தாக்கள் துரையிடம் காண்பிக்காமல் களவு செய்துவிடுகிருர்கள் என்று புலப்பட்டதாம். ஆகவே ஒரு நாள் இந்த வியாபாரி மிகத் துணிகரமாய்ப் பெரிய துரையிடம் நேராகப் போய்க் கீழ் குமஸ்தாக்களுடைய இலஞ்சம் வாங்கும் அக்கிரமங்களை யெல்லாம் மிக விரிவாகச்சொல்லி உடனே விசாரிக்க வேண்டிக் கொண்டானும். அதற்குப் பெரிய துரை, வியாபாரியை நோக்கி, “சரி! விசாரிக்க முயற்சிக்கிறேன்; எனக்கு என்ன கொடுக்கிருய்?” என்று கேட்டாராம்.

**கி. ஆ. பெ. விசுவநாதபிள்ளை,** *திருச்சிராப்பள்ளி.*

***

**சுயநலப் புலி துன்பமுற்றது:**—ஒரு மனிதன் அவசர காரியமாக ரெயிலேறப் போனன். வண்டியில் எங்கும் இடங்கிடைக்க வில்லை. முடிவில் ஒருவர் ஒரு கம்பார்ட்மெண்டில் நீட்டிப் படுத்திருப்பதைக் கண்டு, ‘இவரிடம் கொஞ்சம் இடங்கேட்டு இங்கே உட்காரலாம்’ என்று அந்தப்புண்ணியவான் சமீபத்திற்போய் நின்று, “ஐயா! கொஞ்சம் எழுந்து இடங்கொடுங்கள்” என்ருர். அவர் ஒன்றும் பேசாமல் திருட்டுத்தனமாகத் தூங்குகிறவரைப் போல் கிடந்தார். பிறகு வந்தமனிதன் அவரைத் தட்டி யெழுப்பினன். அவர் சுயநலப் புலியாதலால், புலிபோற் சீறியெழுந்து, “முட்டாள் மனிதனே! என்னைத் தட்டி யெழுப்பலாமா? நான் துருபாசஞ்சர்; என் தூக்கத்தைக் கெடுக்காமல் போ; தொந்தரவு கொடுத்தால் உதைப்பேன்” என்ருர். அந்த மனிதன், “இந்த மூடசிகாமணியோடு வீண்சண்டை போடலாகாது; இவனுக்குச் செய்யத்தக்க வேலையைச் செய்துவிட வேண்டும்” என்று கொஞ்ச நேரம் அந்தக் கம்பார்ட்டுமெண்டுக்கு வெளியில் நின்றுகொண்டிருந்து சுயநலப்புலி கண்மூடின சமயம்பார்த்து, இப்பேர்ப்பட்ட மூடர்களுக்கென்றே உயிரோடுபிடித்து ஒரு டப்பில் போட்டுக்கொண்டு வந்திருந்த தேளை, அவர் தலைக்குப் பக்கத்தில் யாருங் காணுதபடி விட்டுவிட்டான். சிறிது நேரத்திற்குள் அவர் புரண்டு படுத்தார். தேள் அவர் கன்னத்தில் பலமாகக் கொட்டிவிட்டது. ஐயோ! சுயநலப்புலி துள்ளி விழுந்தார்; உருண்டார், புரண்டார், கதறினர். அவருடைய சுக நித்திரை இருந்தவிடந் தெரியாமல் ஓடிவிட்டது. ஆசாமி உட்காரவும் முடியாமல், படுக்கவும் முடியாமல், நிற்கவும் முடியாமல் படாதபாடெல்லாம் பட்டார். அவர் ஊருக்குப் போயிறங்கியும் மறுநாள்வரை அந்த வேதனை தீரவில்லை. தேள்விட்ட ஆசாமி வேறிடம் பார்த்துக்கொண்டு போய்விட்டான். தங்கள் சுகத்திற்காகப் பிறருக்குத் துன்பங் கொடுப்பவர்க்கு இத்தகைய துன்பமே வரும்; அல்லது சண்டையால் மண்டை யுடையும். **செம்பியன்.**

# மதிப்புரை.

## பன்னீர், காலண்டர்:—

"மதராஸ், பார்க் டவுன், 132. ராஜப்ப செட்டி தெரு, எம்-துரைசாமி செட்டி அண்டுகோ" சொந்தக்காரரால் தயாரிக்கப்பட்ட, "கிருஷ்ண ப்ராண்டு பன்னீர்" மாதிரிப் புட்டி ஒன்றும், காலண்டர் ஒன்றும் நம் பார்வைக் கனுப்பப்பட் டிருக்கின்றன. பன்னீர் குளிர்ந்த வாசனையுடையதாயும், மனதிற்கு இரம்மியமானதாயு மிருக்கிறது. நாற்ற மெடுத்த தண்ணீரைப் பன்னீரென்று புட்டியி லடைத்து, மாதிரி கேட்போர்க்கு, உயர்ந்த ரோஸ் செண்டைத் தங்கள் கையில் தடவி வைத்துக்கொண்டு, அக்கையினுல் அவர்களுடைய துணியைப்பிடித்து அதில் அப்புட்டியிலுள்ள நாற்றத் தண்ணீரில் கொஞ்சம் ஊற்றித் தேய்த்து ரோஸ் செண்டின் வாசனையைக் காட்டி ஜனங்களை ஏமாற்றும் சில அத்தர்க்கடை வியாபாரிகள் மிகுந்திருக்கும் இக்காலத்தில் இத்தகைய உண்மைப் பன்னீர்கள் நம் நாட்டினராலேயே செய்யப்பட்டு வெளிவருவது மிகவும் பாராட்டத் தக்கது.

காலண்டர், தலைப்பில் கிருஷ்ணன் உருவப்படத்துடன் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் தேதியும், தமிழ்த் தேதியும் பொறிக்கப்பட்டது. தினந்தோறும் ஒவ்வொரு சீட்டாகக் கிழித்துவிடக் கூடியது.

***

## காலண்டர் வரவு:—

நெல்லூர் ஜில்லா, பெரிடெபி என்னும் நகரில் உள்ள, பி. சி. எ. அண்டு கம்பெனியார் வெளியிட்ட, "ராஜமோகன கூந்தல் வளரும் தைல" காலண்டர் வரப் பெற்றோம். இது அழகிய பெண்ணுருவப்படத்துடன் மாதங்களும், வாரங்களும் இங்கிலீஷிலும், தெலுங்கிலும், தேதி இங்கிலீஷிலும் அமைக்கப் பட்டுப் பார்வைக்கு அலங்காரமா யிருக்கிறது.

## மர்மமுகி :—

[மதுரை A. பிரபாகர சாஸ்திரியார் B.A. அவர்களால் இயற்றப்பெற்றது. திருப்பாதிரிப் புலியூர், ஸ்ரீ. வாணிவிலாச புஸ்தகசாலையாரால் வெளியிடப்பட்டது. எவர்க்கும் விளங்கத்தக்க எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.] இதில், ஒரு ரஸாயனக் கள்வன், தன்னுடைய ரஸாயனத் தொழிலால் பயங்கரமான சில செய்கைகளைப் புரிந்து, பல மாறுவேடங்களைக் கொண்டு வெவ்வேறு மனிதர்களாக நடித்துப் பலரைத் துன்புறுத்தி வந்த அற்புத சம்பவங்களும், துப்பறியும் நிபுணரான கஜபதியின் சாமர்த்தியங்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. படிப்பார்க்கு இது, விவேகத்தை உண்டாக்கத் தக்கது. இப்புத்தகம் இரண்டாம்பதிப்பு. இதன்விலை அணா 12.

***

## ஞான ரகஸ்யம்-1008:—

[விலக்ஷணானந்தர் திருவாய் மலர்ந்தருளியது. திருநெல்வேலி கீழப் புதுத் தெருவில் இருக்கும் 12-வயதுள்ள, ஆ-அ. கிருஷ்ணன் என்பவரால் வெளியிடலானது.] ஸ்ரீ. விலக்ஷணானந்தர், திருவேங்கட மலையில் கோவிலுக்கு வடபால் கொஞ்சதூரத்திலுள்ள சனத்குமார தீர்த்தக் கரையில் ஏகாந்த நிஷ்டை கூடியிருந்த காலத்தில், அவர் உள்ளத்தில் தோன்றி வெளியான 1020 போதங்கள் இதில் அடங்கி யிருக்கின்றன. இப் போதனைகள் அற்புத ஞான யோகத்தின் இரகசிய தத்துவங்களை நன்கு விளக்கிக் காட்டக் கூடியவை. சிறுவர்க்கும் பொருள் எளிதில் விளங்கக் கூடியவை. இவை சிறு சிறு போதனைகளா யிருப்பதால், இவற்றை எவரும் படித்து ஞான இரகசியங்களை நன்குணர்ந் துய்யலாம்.



# வர்த்தமானப்பகுதி

**அற்புத மகான் :**—மதுரைஜில்லா கொட்டாம்பட்டியைச் சார்ந்த புதுவைமாநகரம் என்ற பொட்டப்பட்டிக் கிராமத்தில் உள்ள வெள்ளிமலையில் வேடுவர் குலத்தில் பிறந்த சுமார் 30-வயதுள்ள ஒரு மகான் இருக்கிறாரென்றும், அவர் உணவு சாப்பிடுவதில்லையென்றும், மலம் ஜலம் கழிக்கிற தில்லையென்றும், அவருடைய தேகம் பசும்பொன்நிறமாக விளங்குகிறதென்றும், அவரிடத்தில் லட்சக் கணக்கான ஜனங்கள் வந்து அருள் பெற்றுப் போகிறார்க ளென்றும் பொட்டப்பட்டி பி. காதர் மொய்தின் சாயப் தெரிவிக்கிறார்.

***

இதரநாடுகளிலுள்ள காட்சிகளைப் பார்ப்பதற்கு பம்பாயிலிருந்து மூன்று பார்சிகாரர்கள் 4½ - வருடங்களுக்கு முன் புறப்பட்டுக் கப்பலேறிச்சென்ற விடங்கள் தவிர, தரைமார்க்கங்களில் துவிச்சக்கர வண்டியில் (பைசகிலில்) 45,000 மைல் தூரம் பெர்சியா, துருக்கி, இட்டாலி, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, அயர்லாந்து, அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளில் பிரயாணஞ்செய்து சென்ற மாதம் தங்கள் ஊருக்குப் போய்ச் சேர்ந்தனர். இவர்களைப்போல் வேறே மூன்று பார்சிகாரர்கள் கப்பலேறுமிடங்கள் தவிர மற்ற விடங்களில் பைசகிலில் உலகப்பிரயாணம் செய்து வருகிறார்கள். அவர்கள் இப்போது ஜெர்மனியில் பிரயாணஞ் செய்கிறார்கள்.

***

சென்னை மாகாணத்தில் சுமார் 1,800 நியாயவாதிகள் இருக்கிறார்கள்.

விளையாடுவதிலும், பந்தயங்களிலும் ஜெர்மானியர்கள் மற்றநாட்டார்களை விட மேம்பட்டவர்களா யிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் ஜெர்மனியில் 79, 052-பேர்களும், பிரான்சில் 33,662 பேர்களும், இத்தாலியில் 11,886 பேர்களும், பெல்ஜியத்தில் 2,548பேர்களும், இங்கிலாந்தில் 2,144 பேர்களும் சைகில் பந்தயத்தில் சென்றனர்.

***

ஜப்பான் தேசத்தின் தலைநகராகிய டொக்கியோவில் சுமார் 20 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்களில் சுமார் 5½ லட்சம் ஜனங்கள் சைகிலில் செல்கிறார்கள்.

***

சுவிட்சர்லண்ட், டென்மார்க், ஆலண்ட், பின்லண்ட், பெல்ஜியம், நார்வே ஸ்பெயின் ஆகிய இந்த தேசங்களில் 10லட்சம் ஜனங்களுக்கு ஒருவரும், கனடாவில் லட்சம் ஜனங்களுக்கு இரண்டுபேர்களும், அமெரிக்காவில் நான்குபேர்களும், பல்கேரியாவில் 58 பேர்களும் 100 வயதுக்கு மேற்பட்டவர்களா யிருக்கிறார்கள்.

***

இராஜப் பிரதிநிதியுடன் பேசுவதற்குச் சென்னைக் கவர்னர் சென்ற மாதத்தில் சென்னையிலிருந்து டெல்லிக்குத் தனி இரயிலில் சென்றதற்கு இரயில் கட்டணம் 7,000 ரூபா, ஜனங்கள் செலுத்திய வரிப்பணத்திலிருந்து கொடுக்கப்பட்டதாம்.

***

சென்ற மார்ச்சு மாதம் 31-ந் தேதி பம்பாயிலிருந்து புறப்பட்ட கப்பலில் சைமன் சமிட்டியார், தங்கள் நாட்டிற்குச் சென்றனர். அவர்கள் அக்டோபர் மாதத்தில் மறுபடியும் நம் நாட்டிற்கு வந்து, ஜனங்களுக்குரிய விவகாரங்களைப்பற்றி விசாரிப்பார்கள்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

விபவ வருஷம் வைகாசிமீ—கலியுகாதி 5030, சாலிவாகனம் 1851,
பசலி 1337—கொல்லமாண்டு 1103—ஹிஜரி 1346
இங்கிலீஷ் 1928ஆம் மேமீ—ஜூன்மீ

| [illegible] | தேதி | [illegible] | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | திங் | நவ17-48 | சதை24-20 | சி24-20ம | தானியம் செலவிட |
| 2 | 15 | செவ் | தச13-5 | பூரட்21-23 | ம21-23அ | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 3 | 16 | புத | ஏகா6-53<br>து59-20 | உத்16-55 | சி16-55ம | சர்வ மத்ய ஏகாதசி; அவமாகம் |
| 4 | 17 | வியா | திர0-53 | ரேவ11-10 | சி11-10அ | மாச சிவராத்திரி |
| 5 | 18 | வெ | சது41-45 | அஸ்5-18<br>பர57-15 | அ5-18சி | அவமாகம், மூலிகை உபயோகிக்க |
| 6 | 19 | சனி | ●32-25 | கிரு49-58 | அ49-48சி | அமாவாசை, கிருத்திகை |
| 7 | 20 | ஞா | பிர23-15 | ரோ43-0 | சித்60 | சந்திரதெரிசனம் |
| 8 | 21 | திங் | துதி14-43 | மிரு36-45 | அ36-45சி | பரசுராமஜயந்தி |
| 9 | 22 | செவ் | திரி7-10 | திரு31-38 | ம31-38சி | மாச சதுர்த்தி விரதம் |
| 10 | 23 | புத | சது0-53<br>பஞ்56-15 | புன28-3 | சித்60 | அவமாகம், சுப முகூர்த்தம் |
| 11 | 24 | வியா | சஷ்53-20 | பூசம்27-13 | அ26-13சி | ஆரண்ய கௌரிவிரதம் |
| 12 | 25 | வெ | சப்52-23 | ஆயி26-10 | மர60 | நவக்கிரக சாந்தி செய்ய |
| 13 | 26 | சனி | அ53-13 | மக28-0 | அ28-0சி | தானியம் களஞ்சியம் |
| 14 | 27 | ஞா | நவ55-50 | பூர31-40 | சி31-40அ | கத்திரிமுடிவு [வைக்க |
| 15 | 28 | திங் | தச59-58 | உத்36-48 | சித்60 | தசஹரா விரதம் |
| 16 | 29 | செவ் | ஏகாதசி60 | அஸ்43-10 | சித்60 | கரிநாள், திருஞானஸம்பிருக் |
| 17 | 30 | புத | ஏகா5-13 | சித்50-30 | சித்60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 18 | 31 | வியா | து11-10 | சுவா58-10 | அ58-10சி | பிரதோஷம் |
| 19 | 1 | வெ | திர17-33 | விசா60 | சித்60 | நரஸிம்ம ஜயந்தி |
| 20 | 2 | சனி | சது23-50 | விசா5-53 | சித்60 | வட சாவித்திரி விரதம் |
| 21 | 3 | ஞா | ○29-55 | அனு13-25 | மர60 | பௌர்ணமி, சந்திர கிரஹணம், ரிஷபபூஜை |
| 22 | ஆனி 4 | திங் | பிர35-18 | கேட்20-30 | சித்60 | குளம் கிணறு வெட்ட |
| 23 | 5 | செவ் | துதி40-3 | மூல26-55 | அ26-55சி | |
| 24 | 6 | புத | திரி43-35 | பூரா32-18 | அ32-18சி | |
| 25 | 7 | வியா | சது46-3 | உத்36-38 | சித்60 | |
| 26 | 8 | வெ | பஞ்47-10 | திரு39-35 | ம39-35சி | |
| 27 | 9 | சனி | சஷ்47-0 | அவி41-15 | சி41-15அ | |
| 28 | 10 | ஞா | சப்42-45 | சதை41-28 | சித்60 | |
| 29 | 11 | திங் | அ42-3 | பூரட்40-15 | ம40-15சி | |
| 30 | 12 | செவ் | நவ37-28 | உத்37-35 | அ37-35சி | |
| 31 | 13 | புத | தச31-38 | ரே33-35 | மர60 | |

| | | | |
|---|---|---|---|
| செவ் | குரு<br>சுக் | ராகு<br>சூ-பு | |
| | 10உயிது-புத<br>11 ,, ரிஷ-சு | | |
| | சனி<br>கேது | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.

உலகப் பிரசித்தி பெற்ற டாக்டர். எஸ். பி. மருந்துகள்.

# அமிர்தம்.

இதில் எவ்வித போதை விஷ சம்பந்த வஸ்துக்களும் சேரவில்லை. இம்மருந்து ஆயுர்வேத யூனனி இங்கிலீஷ் இம்மூன்று முறைகளையும் அனுசரித்துத் தயாரிக்கப்பட்டது. இம்மருந்தை குழந்தை முதல் பெரியோர்கள் வரையில் சாப்பிடலாம். இதில் தீரும் வியாதிகள்:—பித்தம், மயக்கம், பசியின்மை, புளியேப்பம், சோகை, காமாலை, பாண்டு, வயிற்றுவலி, குன்மம், வெட்டை, ஆரோசிகம், அஜீர்ணம் மலபந்தம், மலச்சிக்கல், பித்தவாய்வு, கபாலவாய்வு, மாரவலி, மண்டை இடி, ஒத்தத்தலைவலி, கைகால் அசரிக்கை, நாள்பட்ட இடுப்புவலி, மேகம், மூலாதார உஷ்ணம், மூலச்சூடு, மூலமுளை, காசம், சுவாசகாசம், இன்னும் அநேக நாள்பட்ட வியாதிகளையும் எடுக்கும். யாதொரு பத்தியமும் கிடையாது.

குறிப்பு:—ஆபீசர்களுக்கும் அதிகமாய் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும் அதிகமான அலைச்சல் உள்ளவர்களுக்கும் இம் மருந்து எடுத்த ஔஷதம். இம்மருந்தைச் சாப்பிடுவதால் அன்றாடம் மலவிர்த்தி செய்து தேகத்திலுள்ள எல்லா வியாதிகளையும் போக்கிப் பசியை உண்டாக்கி திரேகத்தை தங்க மயமாக்கும்.

விலை ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

## தங்கரேக் மன்மத குளிகை.

20-நாள் சாப்பிட்டுப் பாருங்கள். இதன் ஆச்சரியமான
குணமும் பலமும் தெரியும்.

பிரபுக்களுக்கென்றே தயாரித்தது.

தங்கரேக், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ சேர்ந்தது. அபாரமான தாது புஷ்டியையும், நீடித்த சுகத்தையும் கொடுக்கும். தாது உடைதல் மேக வியாதி நீர் அழிவைப்போக்கும். 20-நாள் உபயோகம் 40-குளிகை ரூ. 7-8-0 10-நாள் 20-குளிகை ரூ. 4. வி. பி. வேறு.

## பிரமேக நிவாரணி.

வெள்ளை, நீர்க்கடுப்பு, இரத்த வெள்ளை, மஞ்சள் வெள்ளை, தந்தி வெள்ளை முதல் சகல வெள்ளை வியாதிகளையும் மூன்று தினத்தில் குணப்படுத்தும். புட்டி 1-க்கு ரூ. 2. வி. பி. வேறு.

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

தாது விர்த்தி, ஜீரணசக்தி, மனோ சக்தி, புத்திகூர்மை
பரமானந்தமும் அளிக்கும்.

No. 1. சேர் டின் ரூ. 2-4-0. No. 2 ரூ. 1-8-0. வி. பி. வேறு. பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், செட்டால் முதலிய அன்னிய நாட்டார் தபால் செலவு ரூ. 2-0-0 சேர்த்து முன்பணம் அனுப்பவும்.

☞ வள்ளி வைத்தியசாலை,
வேலூர் P. O. (சேலம் ஜில்லா)
(Via) புகளூர் (S.I.Ry.) S. INDIA.

## மொத்தம் பரிசு ரூபாய் 500

**VERY STRICT AND HONEST MANAGEMENT.**

பரிசு:—1-வது ரூ 200. 2-வது ரூ. 100. 3-வது ரூ. 80. 4-வது ரூ. 60. 5-வது ரூ.40. அதிகவிடைகள் அனுப்பும் அன்பருக்கு ஸ்பெஷல் பிரைஸ் ரூ.20.

எமது தாய்மொழிப் போட்டி நிலைய முக்கியநோக்கம் தாய் பாஷையின் அபிவிருத்தியே.



போட்டி நெ. 3:—இதில் உள்ள படத்தின் சிறு வட்டத்தினுள் ஒரு எழுத்து அமைக்கவேண்டும். அது இதிலுள்ள 7 வார்த்தைகளுக்கும் முதல் எழுத்தாக வேண்டும். பின் ஒவ்வொரு வரிசையிலும் காலியாய் உள்ள இடங்களிலெல்லாம் பொருத்தமான எழுத்துக்களை அமைத்து 7 வார்த்தைகளையும் கண்டு பிடிக்கவேண்டும். கண்டு பிடிக்கப்படும் வார்த்தைகள் தமிழ் அகராதி அல்லது ஏதாவது புஸ்தகங்களில் உள்ள வார்த்தைகளாக இருந்தால் சரியான விடைகளாகத் தேர்ந்தெடுக்கப்படும். இந்த 7 வார்த்தைகளும் அடங்கிய விடை 1-க்கு பிரவேச கட்டணம் அணா 8 வீதம் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் தயாரித்து அதற்குரிய பிரவேச கட்டணத்தை மணியார்டர் மூலமும் விடைகளை போஸ்டல் மூலமும் அனுப்பிவைக்க வேண்டும். படம் போடவேண்டாம். வார்த்தைகளை மட்டும் எழுதினால் போதுமானது. ஸ்டாம்புகள் அனுப்பக்கூடாது. விடைகளைப் பெற்றுக்கொண்ட நிமிஷமே அவை சரியானவையா அல்லவா என்பதை ஒவ்வொருவருக்கும் கார்டு மூலமாய் தெரிவிப்போம். சரியான விடைகளை ஒரு தொட்டியில் போட்டுக் குலுக்கி முதலில் 4 விடைகள் எடுத்து அதற்கு முதல் பரிசும் 2-வது 4 விடைகள் எடுத்து அதற்கு 2-வது பரிசும் ஆக முறையே ஒவ்வொன்றிலும் 4 விடைகள் வீதம் 20 விடைகள் எடுத்து அந்தந்தப் பரிசுத்தொகை சமமாய் பகிர்ந்து கொடுக்கப்படும். முடிவு தேதியிலிருந்து ஒரே வாரத்தில் பரிசுகளையெல்லாம் அனுப்பி பரிசுபெற்ற அன்பர்கள் பெயர்கள் சுதேசமித்திரனில் பிரசுரம் செய்யப்படும். சித்திரைமீ 31-ம் தேதி அதாவது மேமீ 13-ம் தேதி வரைதான் விடைகள் பெற்றுக்கொள்ளப்படும். இந்தியாவில் கியாதி பெற்ற எட்டயபுரம் பொடி டப்பி. எருமைக் கொம்பினால் நல்ல கருப்பு பாலிஷுடன் செய்தது விலை 1-க்கு ரூ. 1—0—0 டஜன் ரூ. 10—0—0 சிரசு ரோகம் நாசி ரோகத்தைக் கண்டிக்கும் மான் கொம்பு டப்பி விலை 1-க்கு ரூ. 1—4—0 டஜன் ரூ. 12—8—0. ஸ்கார்ப்பியன் ஸ்பெல் தேள் கடிக்குக் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட முறை. கடிவாயில் புகைப்பிடித்த நிமிஷமே கடிவாய் குழிரும். குணத்திற்கு உத்தரவாதம் ஒருரோல் அணா 8. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் சோல் ஏஜண்டுகள் தேவை.

E. I. ராமஸ்வாமி, மானேஜர், தாய் மொழிப் போட்டி நிலயம்,
எட்டயபுரம் ஜமீன், திருநெல்வேலி ஜில்லா (S.I.)


## ஜாம்பெக்

தைலத்தைத் தடவினால் தோலைப் பற்றிய சொறி, சிரங்கு முதலிய ரோகங்கள் சீக்கிரத்தில் நீங்கிவிடும்.



இந்தத் தைலத்தைத் தடவினால், அதிக வேதனை உண்டாக்கும் சொறி, சிரங்கு, படை, தேமல், புண், மண்டை எரிச்சல் முதலியவை தீரும்; இரணங்கள்கூட சீக்கிரத்தில் ஆறிவிடும்.

பச்சிலை மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் இந்தத் தைலம் மயிர்க்கால் வழியாகச் சென்று, தசையில் சார்ந்திருக்கும் நோயை முதலில் போக்கிப் பிறகு மேற்புறத்திலுள்ள நோயை விலக்குகிறது. இந்தத் தைலத்தைத் தடவினால் நோய்க்குக் காரணமாயுள்ள சிறு புழுக்கள் மடிந்து, விஷத்தண்ணீர் வெளிப்பட்டு, நோய் நீங்கி, புதிதாக தசையும் தோலும் வளரும்.

பல வியாபாரிகள் கொழுப்புக் கலந்த தைலம் விற்கிறார்கள். அந்தத் தைலத்தை நீங்கள் வாங்கி உபயோகிப்பீர்களானால், அந்தத் தைலத்திலுள்ள கொழுப்பு மயிர்க்கால் துவாரங்களில் அடைத்துக்கொண்டு உங்களுக்குக் கெடுதலே ஏற்படும். ஆதலால், எப்போதும் ஜாம்பெக் தைலத்தையே வாங்கி உபயோகியுங்கள்.

## கொழுப்பு கலந்தில்லை.

# ஜாம்பெக்

**Zam-Buk : Zam-Buk**

ஜாம்பெக் எல்லா மருந்து வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| சிறிய டப்பியில் அடங்கிய தைலம் | விலை ரூபா | 1 0 0 |
| பெரிய டப்பியில் அடங்கிய தைலம் | ,, ,, | 2 4 0 |

ஏஜண்ட்:—மெஸ்ஸர்ஸ் தாதா கம்பெனியார்,
எஸ்பிளனேட், சென்னை

# வீரநாதன்

தேவராஜு, அவன் மனைவி இவர்களின் செய்கைகள், காணாமற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதன் கன்னி இவர்களின் செய்கை, இரண்டாவது கலியாண முடிவு, மலைநாட்டுப் பாடசாலை விநோதம் முதலிய அற்புத விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. அணா 12.

# அமராவதி

இது மிக்க பிரமையையுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், ஊக்கமுமுடையவனா யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

2-பாகம் விலை ரூபா 4.

# பத்மாஸனி

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டு பிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும். விலை அணா 14.

விலாசம்:—

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167,
மதராஸ்.



## விஷப் பூச்சிகள் நிறைந்த தூசி மூக்கில் செல்வதினால் ஏற்படும் நோய்கள் !

உங்கள் நாசியில் செல்லும் தூசியில், பல கடுமையான நோய்களை உண்டாக்கக்கூடிய விஷப்பூச்சிகள் நிறைந்திருக்கின்றன. தொத்து வியாதி உங்களுக்கு ஏற்படாதபடிக்கும் தொண்டை இரணமாகாதபடிக்கும் பெப்ச் மாத்திரையை உட்கொள்ளுங்கள்.

இந்த ஆச்சரியமான பெப்ச் மாத்திரைகள் வாயில் கரைத்து, சாரம் தொண்டையினிடத்தில் சென்று, அங்குள்ள விஷப்பூச்சிகளைக் கொன்றுவிடுகிறது.

## தொண்டை, மார்பு, சுவாசப்பை ரோகங்களுக்கு.

# பெப்ச்

இந்த மாத்திரையை உட்கொண்டால் இருமல், ஜலுப்பு, சீதளம் ஆகிய இந்நோய்களும் தொண்டையிலும் மார்பிலுமுண்டாகும் நோய்களும் ஏற்படா.

பெப்ச் மாத்திரை எல்லா வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். ஒரு சீசா ரு. 1.

ஏஜண்ட்:- மெஸ்ஸர்ஸ் தாதா கம்பெனி,
எஸ்பினேனேட், சென்னை.

# நாகரீக ஜவுளிகள்.

விலைசரசம். சாயத்திற்கு உத்தரவாதம்.

எல்லாவித ஜவுளி தினுசுகள் சொந்தத்தில் தயார் செய்து விலை சரசமாய் V. P. P. (C.O.D.) மூலமாய் சப்ளை செய்து வருகிறோம்.

72 பக்கம் கொண்ட கியாட்லாக் இனும்.

(Estd. 1872)

ஆர். எம். பாலுஸாமி அய்யர்ஸன்ஸ்,
ஜவுளி வியாபாரம் 4/152 தெற்கு மாசிவீதி, மதுரை.

R. M. BALUSAWMY IYER SONS,
*4/152, South Masi Street, MADURA (S. I.)*




## A. S. சுகந்த மூக்குத்தூள்.

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகலவியாதிகளையும் கண்டிக்கும். வாங்குபவர்கள் A.S.மார்க் பார்த்து வாங்கவும்

A. S. சுகந்த மூக்குத்தூள்.
புட்டி 1-க்கு 0-4-0 | சேர் 1-க்கு
டஜன் 1-க்கு 2-4-0 | 3—0—0

M. J. பரிமள மூக்குத்தூள்.
சேர் 1-க்கு 1—8—0
டஜன் 1-க்கு 2—0—0

## A.S. பட்டணம் பொடி.

சேர் 1-க்கு ரூ. 0—12—0.
வீசை 1-க்கு 3— 4—0.

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,
106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை, சென்னை. (A. B.)




## மதன காமேஷ்வர லேக்கியம்.

இது விலை உயர்ந்த சாலாமிசிரி முதலாகிய மூலிகைகளால் செய்யப்பட்டது. பலமும், வீரிய விர்த்தியையும் உண்டாக்குவதில் அதிமேன்மை பொருந்தியது. மேகம், வெட்டைச்சூடு, நித்திரையீனம்? — ரணை, சுக்கில நஷ்டம், அதிமூத்திரம், சுரம் முதலியவைகளை நீக்கி மிகுந்த பலத்தையும், யௌவனமும் உண்டாக்குவதில் அமோகமானது. இரண்டு டின்கள் போதுமான 20 துலாம் டின் 1-க்கு ரூ. 1-4-0

வி. பி. சார்ஜு அணா 8.

பி. சி. ஏ. அண்டு கோ.
ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

# கம்பராமாயணம் (செய்யுள்)

## இரண்டு பாகம்.

தமிழ்நாட்டு வித்வான்களில் தலைமை பெற்றவராகிய கம்பரால் செய்யுள் ரூபமாக இயற்றப்பெற்ற இராமாயணம் தமிழ் நாடு முழுவதும் கொண்டாடத்தக்கதென்பது உலகறிந்த விஷயம். இதனைப் படிப்பவர்கள் விலை கொடுத்து வாங்குவதற்கும் படிப்பதற்கும் சௌகரியமாயிருக்கும்பொருட்டு இரண்டு பாகங்களாகப் பிரித்து அச்சிட்டிருக்கிறோம். பிரசங்கம் செய்வோர்க்கும் பாடங் கேட்போர்க்கும் வீட்டில் பக்தியாக வைத்துப் படிப்போர்க்கும் கம்பர் கவிநயங்கண்டு பேசிப் பொழுது போக்குவோருக்கும் இப்புத்தகம் மிக உபயோகமானது. சுத்தப்பதிப்பு உயர்ந்த காலிகோ பைண்டு. இரண்டு பாகங்களும் விலை ரூபா 8 0 0

# ஸ்ரீ வில்லிபாரதம் (செய்யுள்)

பாரதகதை முழுவதையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறுவதும், உயர்ந்த பொருள்களும் சிறந்த கற்பனைகளும் நிறைந்த செம்பாகமான கவிகளை யுடையதும், தமிழுணர்ந்த எல்லோரும் விரும்பத்தக்கதும் ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வாரால் செய்யுள் ரூபமாக இயற்றப்பட்ட பாரத மென்பதைத் தமிழர் எவரு முணர்வர். இது மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பதிப்பிற்கிணங்கச் சிறந்த புலவர்களால் பரிசோதிக்கப்பட்டுச் சுத்தப்பதிப்பாக அச்சிடப்பட்டு உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. பாரத பாராயணஞ் செய்வோர்க்கும், பாரதம் பாடங்கேட்போர்க்கும் மிக உபயோகமானது. ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படிக்கத்தக்கது. விலை ரூபா 4.

ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

80 வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல்

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது

அநேக மெடல்கள் நற்காட்சி பத்திரங்கள் பெற்றது.



# ஷண்முகம்

# பட்டணம்பொடி

தபால்பெட்டி 140 மதராஸ்.

தபால்பெட்டி 140 மதராஸ்.

1 பலம் 13 அணா 20 பலம் ரூ. 2-6-0 இரண்டாந்தரம் வீசை 1க்கு ரூ. 3.
ஸ்பெஷல் பொடி வீசை 1 க்கு ரூபா 4-0-0
டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள் டப்பி 4 அணா.
ஏஜண்டுகள் தேவை.

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்,

---

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனி போல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 தலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

# புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சொறிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற்படி குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# மலச்சிக்கல்

## நீங்கக்கூடிய திராட்சைப்பழ லேகியம்.

எல்லா வியாதிகளுக்கும் மலச்சிக்கலே காரணம் என்பது சுருதி யுக்தி அனுபவங்களால் தெரிந்துகொண்ட விஷயம். தினந்தோறும் மலம் தாராளமாய்க் கழிந்துவிட்டால் வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலையில் நிற்கும் சில தினங்களில் நீங்கள் மிக ஆரோக்கியமாய் இருப்பீர்கள். அதற்குக் காரணம் என்னவென்று யோசித்திருப்பீர்களானால் மலம் தாராளமாய்க் கழிந்ததனாலேயென்று தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகையால் நோயுள்ளவர்களும் நோய் இல்லாதவர்களும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

நமது திராட்சைப்பழ லேகியமானது மலத்தைத் தாராளமாய்க்கழித்து சகல நோய்களையும் கண்டித்து தேகத்தை ஆரோக்யமாய் வைத்திருக்கும்.

முழுவதும் பச்சிலை, புஷ்பம், பழம், தேன் இவைகளைக்கொண்டு பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. குமட்டல் வாந்தி கரகரப்பு முதலிய கெட்ட செய்கைகள் ஒன்றும் கிடையாது. வாளம் முதலிய பேதியாகும் மருந்துகள் கண்டிப்பாய்ச் சேர்க்கப்படவில்லை யென்பதற்கு உத்தரவாதம் செய்கிறோம். சாப்பிட மிக இனிப்பாய் இருக்கும்.

டப்பி 1-க்கு ரூ. 1—4—0 4-டப்பி ரூ. 4—8—0

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

பெரிய எழுத்து ஐதீகப் படத்துடன்.

இது, இராமாயணம் உத்தரகாண்டத்திலுள்ளது; இதில் இராமாயண கதை முழுவதும் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதோடு, இராவண சம்மாரம் முடிந்தபின் நடந்த கதைகளெல்லாம் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன; குபேரன் கதை, அசுரர் உற்பத்தி, மாலியவான் வரலாறு, இராவணன் முதலியவர் உற்பத்தி, இராவணன் கலியாணம், அவனுடைய திக்கு விஜயம், அனுமார் வரலாறு, வாலி சுக்கிரீவன் வரலாறு, இராமர் சீதையை வனத்திற் கனுப்புதல், சீதை வால்மீகர் ஆச்சிரமம் சேர்ந்து லவ குசலவர்களைப் பெறுதல், இராமர் அஸ்வமேதயாகம் செய்தல், லவ குசலவர்கள் குதிரையைப் பிடித்துக் கட்டல், எல்லோரையும் ஜெயங்கொள்ளல், இராமர் சீதையையும் தம் புத்திரரையுங் காணுதல், சீதை பூமியில் மறைதல், இராமர் முதலியவர்கள் பிள்ளைகளுக்குப் பட்டங்கட்டி ஜோதிக்கெழுந்தருளுதல் முதலிய அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூ. 2.

## காந்தசத்தி வைத்திய சாஸ்திரம்.

(தமிழ்ப் பதிப்பு)

இப்புஸ்தகமானது, ஔஷதப் பிரயோக மின்றிப் பிணிகளைத் தீர்க்கும்



சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்கமடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் தீர்த்துக் கொள்ளக்கூடிய பல வழிகளையும் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பல வியாதிகளையும் காந்த சத்தினால் தீர்க்கும் மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது, யாவரும் தெரிந்து கொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி



சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். விலை ரூபா 2—0—0

இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167,
மதராஸ்.

## அடங்காச் சிரிப்பு.

கனவான்களே! அவுட்டுக் கிளம்புவது போலத் தொந்தி குலுங்கச் சிரித்து ஆனந்தமாக பொழுது போக்கவேண்டுமானால் அகட விகட விலாச விநோதக் கதையை வரவழைத்து வாசியுங்கள். இதன் விலை அணா 10.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது. நீதியைப்போதிப்பது. இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல் வெளிவந்துவிட்டது!

விற்பனைக்குத் தயார்!!

# கடற்கொள்ளைக்காரன்.

(2-பாகங்கள்).

ஸ்ரீமாந், ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பெற்ற இப்போது நூதனமாக வெளிவந்திருக்கும் அதியற்புத நாவல். படிப்பவர் மனதைக் கவரத்தக்க அபூர்வ விஷயங்கள் நிரம்பியது. ஒரு பெண் கலியாணமாகுமுன் இரகசியக் காதலனோடுகூடிக் குழந்தையைப் பெற்று அவனிடம் கொடுத்துவிட்டுத் துறவியாய் வெளியேறிப் பெரிய மாந்திரீகக்காரியாய் எல்லோரையும் மயக்குவதும், அவளுடைய குழந்தையை அவள் காதலன், தனது மற்றொரு மனைவியின் புத்திரனோடு வளர்த்துப் பின்னால் அவனைப் பிரிந்து தன் சொந்தமனைவி புத்திரனோடு ஒரு நகரத்தைச் சேர்ந்திருப்பதும், அவனை விட்டுப்பிரிந்த புத்திரன் பெரிய கடற்கொள்ளைக்காரனாய் உலகத்தாரை நடுங்கச்செய்வதும், பின்னர் அவன் கப்பல் கவிழ்ந்ததால் கடலில் மூழ்கி மயங்கிக் கரையில் ஒதுக்கப்படுவதும், அவனை, அவனுடைய தந்தையின் மற்றொருதாரம் பெற்ற புத்திரன் ஆதரிப்பதும், அதன்மேல் அந்தக் கடற்கொள்ளைக்காரன், தன்னைக்காப்பாற்றிய சகோதரனுக்குச் சிநேகமாயிருந்த பிரபுவோடு தான் சிநேகனாகி அவர் புத்திரிகளோடு உறவுகொள்வதும், அதனால் அவ்விரண்டு சகோதரருக்கும் விரோதமுண்டாய் அவர்கள் ஒருவரையொருவர் அழிக்கமுயல்வதும், மாந்திரீகக்காரியாயிருந்த அம்மாது இனந்தெரியாமல் தன் புத்திரனைவிட்டுத் தன் காதலனுடைய மற்றொரு புத்திரனைத் தன் குமாரனென்று நினைத்து அவனுக்கே உதவிபுரிந்து வருவதும், தன் சொந்தப்புத்திரனை முடிவில் தன் காதலனால் உணர்ந்து அவன் பொருட்டு இரங்குவதும், பின்னர்க் கடற்கொள்ளைக்காரன் யோக்கியனாய் ஒரு அரசனால் நன்கு மதிக்கப்பெற்றுப் பெரிய அந்தஸ்துள்ளவனாவதும், கடைசியில் அவனும், அவனுடைய தந்தையின் மற்றொரு புத்திரனும் தாங்கள் சகோதரர்கள் என்பதை யுணர்ந்து சகோதரவாஞ்சை காட்டலும், பின்னர் அவ்விருவரும் தாங்கள் காதலித்திருந்த தனவந்தரின் புத்திரிகளை மணஞ்செய்துகொள்வதும், இன்னும் பல விஷயங்களும் இதில் நிரம்பியுள்ளன. இதனைப்படிப்பவர்க்கு மனத்தில் மிக்க உவகை யுண்டாகும்; அறிவு விருத்தியடையும்; மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களால் உண்டாகும் இழிவும், நம் நாட்டுக் கொள்கைகளா லேற்படும் உயர்வும் நன்கு விளங்கும். இது தமிழர் ஒவ்வொருவம் வாங்கி வாசிக்கத்தக்கது.

இதன் முதற்பாகம் விலை ரூ. 1-8-0; இரண்டாம் பாகம் விலை ரூ. 1-12-0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு 1928ஞு மேமீ கடைசி வரையில் 2-பாகமும் விலை ரூபா 2-12-0.

முந்தி முதல் பாகம் வாங்கிய சந்தாதாரர்களுக்கு 2-ம் பாகம் மாத்திரம் விலை ரூபா 1—4—0

# ஸ்ரீ ராமாயண ஓடம்.

இந்த ஸ்ரீராமாயண ஓடம் எளிய நடையில் பாடி அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப்படித்து எளிதில் ஆழ்வார்களின் சரித்திரங்களையும் நன்குணர்ந்து சந்தோஷிக்கலாம். விலை அணா 3.



# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம் (மூன்றும் பதிப்பு)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.

☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றும்பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக் கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

# வீரத்தன்மையுள்ள : : : ஹிந்து மாது சிரோமணிகள்.

ஆண்மக்களில் பலசுத்த வீரர்கள் தோன்றியிருந்தது போலவே பெண்மக்களிலும் பலர் அவதரித்திருந்தனர். ஆனால் அவர்கள் சரித்திரம் வெளிவராமையால் பலர் அவர்களைத் தெரிந்துகொள்ளாம லிருக்கிறார்கள்; ஆதலின் அக்குறை நீங்கும்பொருட்டு அப் பெண்மணிகளின் சரித்திரங்களடங்கிய இந்நூல் இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தில் வீரத்தன்மையும், யாவரும் புகழத்தக்க அனேக அரிய நற்குணங்களும் பொருந்திய எட்டு மாதர்களின் உண்மையான ஜீவிய சரித் அடங்கி யிருக்கின்றன. இதில் கூறப்பட்ட சம்பவங்கள் யாவும்

உண்மையாகவே நடந்தவை. விஷயங்களைப்போல் அதிக வியப்பையும் பிரமையையும் உண்டாக்கத்தக்க இதில் அனேக நீதிகளும், நற்போதனைகளும் சிறந்த மேற்கோள்களோடு கூறப்பட்டிருக்கின்றன. இது நம் நாட்டு மாதர் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய புத்தகமாகும். இதை வாசிக்கும் மாதர், ஆடவர் இருபாலார்க்குமே இது இனிமையும் நன்மையும் பயக்கும்.

இது உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் மிகச் சுத்தமாய் அச்சியற்றப்பட்டிருக்கிறது. விலை அணா 10. தபால் கூலி பிரத்யேகம்.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு 30-4-28 வரையில் அணா 8.

**பொன் செய்யும் மருந்து !** **பொன் செய்யும் மருந்து !!**

வாதத்திற்கு வழிகாட்டி வந்துவிட்டது.

# வாத சௌமியம் 1,200

**அகஸ்தியமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய வாதகாவியத் திறவுகோல்.**

அன்பர்களே! உலகத்தில் பொன்னை விரும்பாதார் யாருமில்லை. பொன்னானது இல்லறத்தி லிருப்பவர்க்கு இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பங்களை அடைவதற்கும், தானதருமங்களைச் செய்து புண்ணியத்தை தேடிக்கொள்வதற்கும், அப்புண்ணியத்தால் மேலுலகத்தில் நற்கதிகளை அடைவதற்கும் ஏதுவாயிருக்கின்றது; துறவிகளுக்கும், தேவதா பூஜைகளை நிறைவேற்றுவதற்கும், தவத்திற்குரிய ஒழுக்கங்களைச் சரிவரச் செய்வதற்கும், தமக்கும் தம்மைப்போன்ற பரதேசிகளுக்கும் ஆகாராதிகள் தேடிக்கொள்வதற்கும், லோகோபகாரமாக உயர்ந்த மருந்துகளை முடிப்பதற்கும் அநுகூலமாயிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட பொன்னை, இல்லறத்திலிருப்பவர்கள் வெவ்வேறு தொழில்களைச் செய்து தேடிக் கொள்கிறார்கள்; துறவிகளோ அத்தொழில்களைச் செய்ய முடியாதவர்களாதலால் வாதம் என்னும் அரிய முறையைக் கொண்டு அதைச்செய்து உபயோகித்து வருகின்றார்கள். இந்த வாத முறையானது, பூர்வீகத்திலிருந்த மகான்களால் சரியான கிரமப்படி கண்டு பிடிக்கப்பட்டு, அவர்களின் சரியான பரம்பரையார்களிடத்தில் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வழியில் வந்தவர்கள் இம்முறையை ஒழுங்குப்படிசெய்து பயனடைந்து தாங்கள் செய்யத்தக்க காரியங்களைக் கிரமப்படி செய்துகொண்டு வருகிறார்கள். தாங்கள் வாத முறைகளிற் கண்ட அநுபவங்களை விளக்கிப் பல நூல்களையும் செய்திருக்கின்றார்கள். சிலர், இத்தகைய பரம்பரைப் பெரியோர்களிடத்தில் இம்முறைகளைக் கிரமமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலும், அவர்களால் செய்யப்பட்ட நூல்களின் உட்கருத்துக்களை உள்ளபடி உணர்ந்து கொள்ளாமலும் வாதம் செய்தால் பொன்னை மலைபோல குவித்து விடலாமென்று கருதி, மாயாஜாலக்காரர்கள் வாத சம்பந்தமாகச் சொன்ன உபயோகமற்ற விஷயங்களை நம்பி, எதையெதையோ செய்து புடம்போட்டு ஊதியூதிப் புகையைக் கிளப்பிக் கண்ணைக் கெடுத்துக் காசைக் கரியாக்கி, வீடு நிறையக் கரிக்குப்பையைக் குவித்து வறுமைக்குள்ளாகி மதிமயங்கித் தவிக்கின்றார்கள்.

அப்பேர்ப்பட்டவர்களுடைய மதிமயக்கத்தைப் போக்கி, வாதமுறைகளின் மார்க்கங்களைச் சந்தேகமறச் சகலர்க்கும் விளக்கிக்காட்டி, அதன்பயன் கிடைக்கச் செய்வதில் இந்நூல் முதன்மை பெற்றதாகும்.

இதன் விலை ரூ. 1—8—0

ஆனந்தபோதினி சந்தாநேயர்களுக்கு 31-5-28 வரையில் விலை ரூபா 1.

ஸ்ரீராமஜெயம்.

# “தத்வசங்க்ரஹ ராமாயணம்”

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல் இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அநுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத்பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல்விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண்விமரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன் கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 8 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு 1928வரு ஏப்ரல்மீ கடைசி வரையில் விலை ரூபா 3.

## ஐந்தாம் வேதமென்னும்

# ஸ்ரீ. மகாபாரத வசனம்.

## நான்கு பாகம்.

(இம்மாதிரியே பெரிய எழுத்துப் பதிப்பு; அழகிய லெத்தகிராப் படங்களுடன். உயர்ந்த காலிகோ பைண்டு)

இதிகாசங்களுள் மிகவும் சிறந்ததாகிய மகாபாரதமானது, எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருவது; இதில் மகா சத்தியவந்தர்களாகிய பாண்டவர்களுடைய வரலாறுகளும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் மகிமைகளும், பிரபஞ்ச உற்பத்தி, தேவர் வரலாறு, உலகங்களின் விவரங்கள், வருணாசிரம தர்மங்கள், முனிவர் வரலாறுகள், பதிவிரதைகளின் இலக்கணம், சிநேகத்தின் உயர்வு, நன்றிமறவாமையின் மேம்பாடு, முதலியவைகளும், சுவர்க்

கத்தின் விவரமும், மோக்ஷ விவரமும், நரகங்களின் இயற்கைகளும், பொறுமைசாலிகளாகிய பாண்டவர்கள் அடைந்த மேன்மையும், மகா வஞ்சகராகிய துரியோதனன், துர்ச்சாதனன், சகுனி முதலிய கொடியர்கள் நரகத்தில் வீழ்ந்து வாதனையடைந்த விவரமும், கீசகன் முதலிய துஷ்டர்கள் நாசமடைந்த விவரமும், பற்பல நீதிகளைப் போதிக்கத்தக்க கதைகளும், இன்னும் பற்பல அற்புத விஷயங்களும் நிறைந்திருப்பதால் தமிழ்நாட்டிலுள்ள பலரும் இதனை ஐந்தாம் வேதமென்று தீர்மானித்து ஆங்காங்கே இராக்காலங்களில் தேவபூசனையோடு தொடங்கி வருடக்கணக்காகப் படித்து முடித்துப் பட்டாபிஷேக மகோற்சவங் கொண்டாடுகிறார்கள். அவ்வாறு படிக்குங்காலத்தில் எண்ணிறந்த ஜனங்கள்கூடி அதனைக்கேட்டு ஆனந்திக்கிறார்கள். ஜாதிபேதம், மதபேதமின்றி எல்லோருமே இந்தப்பாரத கதையைக் கேட்க விரும்புகிறார்கள். இக்காரணங்களால் இப்புத்தகம் தமிழ்நாட்டில் பல ஆயிரக்கணக்காகச் செலவாகி வருகின்றது. இவ்வாறு இது பலர்க்கும் பயன்படக் கூடியதாயிருப்பதனால், சிறுவர், சிறுமியர் முதலிய எல்லோரும் எளிதில் வாசித்துணரும்படி இப்பொழுது பெரிய எழுத்தாகிய இங்கிலீஷ்பாடியில் அச்சிடப்பட் டிருக்கிறது. அறுவது வயதுசென்ற கிழவரும் மூக்குக்கண்ணாடி போடாமல் இப்புத்தகத்தைச் சுலபமாக வாசித்துக் கொண்டு போகலாம். இன்னும் படிக்க எடுத்துக்கொண்டு போவதற்குச் சுலபமாயிருக்கும்படி நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் அழகிய காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. பாரதம் படிக்காதவீடு வீடாகாது; பாரதம் படிக்காத மனிதர் மனிதராகார்; பாரதம் கேளாதசெவி செவியாகமாட்டாது. ஆதலால், நண்பர்களே! இந்த அருமையான இதிகாசத்தை அவசியம் வரவழைத்துக் கொள்ளுங்கள். இதற்கு விலையோ சகாயம்; இதில் கொஞ்சக் காப்பிகளே ஸ்டாக்கில இருப்பதால் வேண்டியவர்கள் விரைவாகப் புத்தகம் வரவழைத்துக் கொள்க.

4 பாகமும் 4 கட்டிடமாக உயர்ந்த காலிகோ பைண்டுள்ளவை விலை ரூ. **10.**

**ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு 1928ஆம் ஏப்ரல்மீ 30-ந் தேதி வரையில் விலை ரூபா 9.**

சிரிப்போ சிரிப்பு! சரியான சிரிப்பு.

## கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை.

நண்பர்களே! கலியாணத்தில் கூட தாலிகட்ட மறந்துவிடும் சண்டிக் கழுதைகள் உண்டா! என்று நீங்கள் ஆச்சரியமடையக்கூடும். இக்கதையை நீங்கள் படிப்பீர்களானால் அப்பேர்ப்பட்ட மானங்கெட்ட மாடுகளும் உண்டென்று தெரிந்துகொள்வீர்கள். இதில், சித்திரக்குள்ளியை விரும்பியவர் சீரழிந்த விதங்கள் ஓயாச் சிரிப்பை யுண்டாக்கும்; கலியாணப் பந்தலில் புரோகிதருக்குத் தேள் கொட்டி அவர் லபோ லபோ வென்று அடித்துக் கொள்வது அடங்காச் சிரிப்பை யுண்டாக்கும்; மீசையை நன்றாய் ஒதுக்கிவிட விரும்பிய மாப்பிள்ளைக்கு மீசை அடியோடு மொட்டையாய்ப் போதல் அதியற்புதமாயிருக்கும்; கலியாணமான சில தினங்களுக்குள்ளாகவே கலியாணப் பெண் குழந்தையைப் பெறுவது மிக்க விநோதமாயிருக்கும்; இன்னும் விடாச் சிரிப்பை யுண்டாக்கும் பல விநோதச் செயல்களெல்லாம் இதில் நிறைந்திருக்கின்றன. இதனை எல்லா வகுப்பினரும் வாசிக்கலாம்; படிப்பார்க்கு நல்ல விவேகமுண்டாகும். இதன் விலை அணா 5.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு 30-4-28 வரையில் அணா 4.



## திருவிளையாடற் புராண வசனம்.

சிவபெருமான், சோமசுந்தரக் கடவுளாக மதுரையம்பதியில் எழுந்தருளி அடியார்கள் உய்யும்பொருட்டு நடத்திக் காட்டிய அற்புத திருவிளையாடல்கள் அறுபத்து நான்கும் இதில் அடங்கியிருக்கின்றன. சிவபக்தியுடையவர்களென்னும் சிலர், சிவ பெருமானுடைய மகிமைகளைச் சரிவர உணர்ந்துகொள்ளாமல், அப் பெருமானைப்பற்றிப் பொருந்தாத கதைகள் பலவற்றைப் பேசி இடர்ப்பாடுறுகின்றனர். அத்தகையினர்க்கு இந்நூல் சிவபெருமானுடைய மகிமைகளைத் தெள்ளிதில் உணர்த்தும். இன்னும் சிவபெருமான் அடியார்க்கெளியன் என்பதையும், அவர், தம்மை நம்பின பக்தர்களை ஆட்கொள்ளுதற்கு எத்தகைய தொழிலையும் புரிந்து அவர்களுக்குள் செய்வான் என்பதையும், சிவனடியார் சிறப்புக்களையும், எல்லோர்க்கும் விளக்கமாகத் தெரிவிக்கும். இதனைப் படிக்குந்தோறும், சோமசுந்தரக் கடவுள், ஒரு கிழவியின் பொருட்டுப் பிட்டுக்கு மண் சுமந்தது, பாண்டியனிடம் பிரம்பினால் அடிபட்டது, ஒரு சிறுவனுக்காக மாமனாகவந்து வழக்குரைத்தது, முதலிய திருவிளையாடல்கள், படிப்பார் மனதையும், கேட்போர் உள்ளத்தையும் உருக்கிவிடும். இந்நூல் சிறுவர்க்கும் விளக்கும்படியான இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஒவ்வொரு படத்திலும் துதிப்பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன; 64 திருவிளையாடல்களுக்கும் 64 ஐதீகப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் புத்தகம் நேர்த்தியான காலிகோபைண்டு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு விலை மிகவும் சகாயமே.

இதன் விலை ரூபா 2-8-0.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு 30-4-28-வரையில் ரூபா 1-8-0

## G. W. M. REYNOLDS'

BOLD TYPE EDITIONS.

| No. | Title | Vols. | Rs. | A. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 |
| 2. | Joseph Wilmot | 8 „ | 5 | 0 |
| 3. | Ellen Percy | 8 „ | 5 | 0 |
| 4. | Mary Price | 8 „ | 5 | 0 |
| 5. | Rye House Plot | 4 „ | 3 | 0 |
| 6. | Young Duchess | 4 „ | 3 | 0 |
| 7. | Rosa Lambert | 4 „ | 3 | 0 |
| 8. | Loves of the Harem | 4 „ | 3 | 0 |
| 9. | Margaret | 4 „ | 3 | 0 |
| 10. | Massacre of Glencoe | 4 „ | 3 | 0 |
| 11. | Virgin's Kiss | 4 „ | 3 | 0 |
| 12. | Canonbury House | 3 „ | 2 | 4 |
| 13. | Mysteries of Old London | 3 „ | 2 | 4 |
| 14. | Pope Joan | 3 „ | 1 | 12 |
| 15. | Soldier's Wife | 2 „ | 1 | 8 |
| 16. | May Middleton | 2 vols. | 1 | 8 |
| 17. | Faust | 2 „ | 1 | 8 |
| 18. | Leila | 2 „ | 1 | 8 |
| 19. | Robert Macaire | 2 „ | 1 | 4 |
| 20. | Mary Stuart | 2 „ | 1 | 4 |
| 21. | Seamstress | | 1 | 0 |
| 22. | Alfred | | 1 | 0 |
| 23. | Grace Darling | | 0 | 12 |
| 24. | Young Fisherman | | 0 | 10 |
| 25. | Agnes | 9 „ | 6 | 0 |
| 26. | Kenneth | 4 „ | 3 | 0 |
| 27. | Omar | 4 „ | 3 | 0 |
| 28. | Coral Island | 4 „ | 3 | 0 |
| 29. | Wagner | 3 „ | 1 | 12 |
| 30. | Master Timothy's Book Case | 3 „ | 1 | 12 |
| 31. | Parricide | | 1 | 12 |
| 32. | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | | 1 | 0 |

SUPERIOR WATCH CO., P. B. NO. 167, MADRAS.

"ஆனந்தபோதினி" ஆபிஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

*இக் குறியுள்ள புஸ்தகங்கள் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கற்பகச்சோலையின் அற்புதக் கோலை | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன் 2பாகம் | 3 | 4 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 |
| மதனாம்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள்அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்னபுரி ரகசியம் 2-பாகமும் | 4 | 0 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாஸனி ... | 0 | 14 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 |
| மீன்சாரமாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தஸிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| அர்ஜுனஸிங், சுந்தர் ... | 0 | 2 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| * சகோதரவாஞ்சை ... | 0 | 7 |

---

| | ரூ. | அ. |
|---|---|---|
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் | 4 | 0 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாளபகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீதரம்பை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |
| துயரானன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மிகதை ... | 0 | 10 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளினசுந்தரி ... | 0 | 10 |
| கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை ... | 0 | 5 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| *கம்பராமாயணசங்கிரகவசனம் | 2 | 0 |
| *குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| * நரிவிருத்தம்மூலம் உரையும் | 0 | 4 |
| * ஸ்ரீபாலன் ... | 0 | 10 |
| * உதயணன் ... | 0 | 8 |
| * தசக்கிரீவன் ... | 0 | 14 |
| * போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| * சதானந்தர் ... | 1 | 4 |
| * ஜீவகன்வசனம் ... | 1 | 0 |
| * கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| * பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| * கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| * அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| * நீலக்கொடி ... | 0 | 5 |
| * மணவாளன் ... | 0 | 8 |
| * பரசுராமன் ... | 0 | 8 |
| * சிசுபாலன் ... | 0 | 8 |
| * அங்கதன் ... | 0 | 4 |
| * தசாவதாரம் ... | 0 | 6 |
| * கிருஷ்ணன்தூது வசனம் | 0 | 8 |
| * சண்டோபாக்கியானம்... | 0 | 6 |
| * கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| * சத்தியவசனி ... | 0 | 4 |
| * விமலன் ... | 0 | 4 |
| * கண்ணபிரான் ... | 0 | 4 |
| * செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| * நாலுமந்திரிகதை ... | 0 | 4 |
| * மங்களேசுவரன் ... | 0 | 8 |
| * தக்கன் ... | 0 | 6 |
| * சீமந்தனி ... | 0 | 8 |
| ராமாயண ஓடம் ஏலப்பாட்டு | 0 | 8 |
| ஞானரத்தினம் ... | 0 | 4 |
| இந்து லீகா ... | 0 | 8 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனாமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணைகானன்ஞானேந்திரி... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| கமலமதி ... | 0 | 8 |
| காமசேன ரசிகா ... | 0 | 8 |
| பூர்ணவல்லி ... | 0 | 6 |
| ஸ்திரீபுருஷஜாதக திறவுகோல் | 0 | 8 |
| விநோத கதைத்திரட்டு ... | 0 | 5 |
| மதிமோச விளக்கம் ... | 1 | 0 |
| நான்குகோடி ... | 0 | 4 |


## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




ஸ்ரீ சுகுண லேகியம்.

ஸ்ரீ சுகுண செந்தூரம்.

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம்வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக் கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரேதடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய செந்தூரங்களால்

## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீர்ணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரிப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தாப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், நெய், மார்சுப்பு, நெய் இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவரவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0, போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0. 48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில பூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நான்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டு[illegible] அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 6, தபாற்கூலி அணா [illegible] ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். [illegible] 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**விலாசம்-: தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனு வது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவை களைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத் தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசகாவலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களி னின்றும் தப்பித் துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத் தோர்க்கும் உண் டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜல தோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4-மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

# காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான சுழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் காகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் அலைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ் வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

# சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண் டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந் திப் புண்கள், துடைவாழை படைகள், சுக்கநு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைக ளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயா சம் முதலியவைகளை உண்டாக்காமல் சுக... டியதும ...ய உண்மையான வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படு... மருந்து. இதன் வி... ரூபா 1-8-0.




விலாசம்:-தனலட்சுமி ...மபெனி, தபா... ...ட்டி நெ. 167, ம...

# சோடாவாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதிருப்பவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். அதை உடனே சாப்பிடவும், ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோவு நின்றுவிடும். புட்டி 1-க்கு அணா 6.

# யூகலிப்டஸ் ஆயில்.

## (சுத்தமான நீலகிரித் தைலம்.)




வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அதுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பினேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு, வெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந் நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங் கள், இன்புளுவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங் கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற் றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி. முதலிய நோய் களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

# நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயி ரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள் ளாக நரைப்பதற்குமுன்பு இருந்த கருமை நிறத் தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படு வார்கள். இது உண்மை. இதைப்போன்ற சிறந்த தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்குக் கிடைத் திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டுகளைக் கணக்கிடல் முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூபா 1.



# கூந்தல் வளரும் துளி.



இதை நல்லெண்ணெய் அல்லது தேங்கா யெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக் குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்,
இருந்தே...

# சிவப்பிரகாச பல் பொடி.



இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம் பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.
6-டப்பிகள் விலை அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

# அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்யமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை நீருப் இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும், ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்ட்)

# "சகுந்தலா" கூந்தல் வளரும்

## பரிமளத் தைலம்.

அழகுக்கு எண்ணெய் அடங்கிய




டின் 1-க்கு விலை அணு 12.

இத்தைலத்தின் பரிமளம் எவருக்கும் இன்பத்தை யளிக்கும். இதைத் தலையில் தடவிச் சீவிக்கொண்டால் அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் இதின் வாசனை வீசும். இது கூந்தலை நீளமாக வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச்செய்யும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்திசெய்யும். கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்ப, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோ வியாகூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். முகதேஜஸை உண்டாக்கும். இந்தத் தைலம், சிலர் கோரியபடி அனேக திவ்விய வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் இதின் அருமை பெருமைகள் விளங்கும்.

# கிருஷ்ண சஞ்சீவி




தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மைபெற்றது. நோய்கண்ட இடத்தில் இந்த **கிருஷ்ண சஞ்சீவி**யைத் தடவி நன்றாய் இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை தேய்த்தால் அது மாயமாய் ஓடிவிடும். இளங்குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். இதன் புட்டிகள் ஆயிரக் கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரயாணிகள் கையிலும் இந்த **கிருஷ்ண சஞ்சீவி** இருந்தே தீரவேண்டும். இதன் விலை புட்டி 1-க்கு அணு 8. டஜன் 1-க்கு ரு. 5.

[illegible]லத்தில் இன்பங் கொடுக்கும்

## மனோரம்மிய

# மகா சந்தனாதித் தைலம்.

**சுகவாசிகளான அன்பர்களே!** நீங்கள் வெயிற் காலத்தில் உஷ்ணத்தைத் தணித்துக் கொள்ளவும், கண்ணும் சிரசும் மூளையும் குளிர்ந்து களிப்புறவும், ஸ்நானஞ் செய்வதற்கு எதிர்பார்த்திருந்த இந்த ஆனந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும் பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்க வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி, பெரும் பிரயாசையின்மேல் செய்யப்பட்டு உங்களின் அதிர்ஷ்டவசத்தால் இப்போது வெளிவந்திருக்கிறது, இக்காலத்தில் அலங்காரப் பெயருடன் வெளிவந்துலாவும் சில சந்தனாதித் தைலங்களைப் பல நண்பர்கள் வரவழைத்து உபயோகித்து ஒரு குணமுங் காணாமல், 'பணத்தைப் பாழ்பண்ணி விட்டோமே' என்று மனம் வருந்தி யிருக்கின்றனர். அப்பேர்ப் பட்டவர்களுடைய மனக்குறையைத் தீர்க்கும் பொருட்டே இது, முறை வழுமல் மிகப் பரிசுத்தமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

நூற்றுக்கணக்கான பணச் செலவின்மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளை யெல்லாம், இந்தச் சந்தனாதித் தைலத்தில் ஒருசேர் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்துவருவதால் கண் எரிச்சல், கண்களில் நீர்வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேஸ்வரம், பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், காவறட்சி, கைகால் எரிவு, தேக வெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபால சூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபகசக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையில் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடிதுடிப்பு, தலைமயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இன்னும் இத்தைலத்தைத் தலையில் தடவிவருவதால் கூந்தல் கருமையாய்ப் பளபளப்புடன் வளரும். உரோமங்களிலுள்ள நுனி வெடிப்பு, செம்பட்டை, சுறட்டை முதலியவை நீங்கும். தலையில் மயிர் உதிர்தல், பூச்சி வெட்டு, முதலியவைகளும் நிவர்த்தியாகும். எப்பொழுதும் சிரசிலும் உடம்பிலும் இனிமையான சுகந்தம் பரிமளித்துக்கொண் டிருக்கும். இன்னும் இத்தைலம் மனமொத்த காதலர்க்கு மாறா இன்பத்தையும் தரும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும் நீக்கவேண்டும்; பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவை அறவேகூடா.

இதன் விலை சேர் 1-க்கு ரூபா 1—12—0.

---

தனலட்சுமி கம்பெனி,

தபால்பெட்டி நெ. 167, சௌகார்பேட்டை, மதராஸ்.